84696

# பெருமுக்கல் ஸ்தல புராணம்

3:38:211PM
N27
84696

551

ஓம் தத்ஸத்.

# பெருமுக்கல் ஸ்தல புராணம்.

(தமிழ் வசன நடை).

இஃது
ஸ்ரீ நாராயண பரம ஹம்ஸருடைய பாதசேகரன்,
பெருமுக்கல், அபேதாசிரமம்,
ஸ்வாமி தயானந்த பாரதி
அவர்களால் எழுதப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
19 SEP 1927
MADRAS

1927.

D2 3: 38.211FM
N27
84696

ஓம் தத்ஸத் :

# பெருமுக்கல் ஸ்தல புராணம்.

இஃது

ஸ்ரீ நாராயண பரம ஹம்ஸருடைய பாதசேகரன்,

பெருமுக்கல், அபேதாசிரமம்,

ஸ்வாமி தயானந்த பாரதி

அவர்களால் எழுதப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
19 SEP 1927

1927.

[விலை அணா 6.

Q23:3A.21PM
N-7



84696

# முகவுரை.

ஸச்சிதானந்த ஸ்வரூபியான பரமாத்மாவினுடைய லீலாவிபூதிகளைக் கூறப்படும் இதிஹாஸங்களுள் இம் முக்கியாசல புராணமும் ஒன்றாம். ஸம்ஸ்கிருதத்தில் பன்னிரண்டு அத்தியாயமாகவுள்ள இப் புராணம், ஸ்காந்த புராணாந்தர்கதமென்று இதன் ஒவ்வோர் அத்தியாயத்தின் ஈற்றிலும் கூறப்பட்டிருப்பதால் இதை மேன்மையாகக் கொள்ளக்கூடும்.

தற்போது எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள இப் புராணத்தின் மூலக்கிரந்தத்தின் ஏட்டுப்பிரதி பிராசீனமானதாயும், ஜீர்ணதரமாயும், பாஷா சுத்தியில்லாததாயும் காணப்படுகின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்னால் காமகோடி பீடம் ஸ்ரீமத் சங்கராசார்ய சுவாமிகள் இவ்விடத்தில் (பெருமுக்கலில்) விஜயஞ் செய்திருந்த காலத்தில் இதனை எங்கிருந்தோ வரவழைத்து இதற் சிற்சில அரிய விஷயங்களைக் கிராமவாசிகளுக்கு உபந்நியஸித்திருக்கின்றனர் என்றும் தெரிய வருகின்றது. இதிற் கூறப்பட்டிருக்கும் விஷயங்களைப் பூர்ணமாயும் உணர்ந்துக் கொள்வதற்கு இவ்வூர் கிராமவாஸிகளும், மற்றையரும் மிகு முயற்சி செய்தும் பயன்படாமற்போனது. ஆத

லால் எப்படியாயினும் இதை வெளிப்படுத்த வேண்டுமென்னும் ஊக்கத்துடன், எனது அத்தியந்த நண்பரும் பேருபகாரியுமான பெருமுக்கல், கிராமதிகாரி ஸ்ரீமான் ச. முருகப் பிள்ளை அவர்களுடையவும், இதர ஆஸ்திக நண்பர்களுடையவும் தூண்டுதலினாலும், சகாயத்தாலும் வடமொழியில் ஸ்லோகரூபமாயிருந்த இப் புராணத்தை எவரும் எளிதில் உணரவும், அத்தலத்தின் மகிமையை யோர்ந்து அனுஷ்டித்து பரமேசுவரர் ப்ரீதிக்குப் பாத்திரராகவும், ஒருவாறு முக்கியாசல ஈசுவரரருளால் தென்மொழியில் வெளியிடப்பட்டது.

புராண முறைப்படி பெருமுக்கல் ஸ்தல மகிமையைப்பற்றி வஸிஷ்டர் பகீரதருக்கு உபதேசித்ததாகச் சூத புராணிகர் சௌனகாதிகளுக்குச் சொல்வதாக ஆரம்பம். முதல் இரண்டு அத்தியாயங்களில், முக்கியாசல மகிமையும், அதன் வர்ணனையும் கூறப்பட்டிருக்கின்றன. மூன்று நான்கு அத்தியாயங்களில், தேவ, இராவண யுத்தமும், பார்வதி முக்கியாசலத்திற்கு எழுந்தருளித் தபம்புரிதலும், பரமசிவன் வெள்ளியங்கிரியைவிட்டு பெருமுக்கலுக்கு விஜயஞ் செய்தலும், இராவணவதத்தின் உபாயத்தையறிய, மகாவிஷ்ணு, பரமசிவனைக் குறித்துத் தபஞ் செய்தலும் மற்றும் கூறப்பட்டுள்ளன.

கடை இரண்டு அத்தியாயங்களில், வால்மீகர், ஸீதாபிராட்டியார் முதலியோர் பெருமுக்கலுக்கு



விஜயஞ் செய்தலும், ஜானகியார் இலவ, குசர்களைப் பிரஸவித்தலும், ஸ்ரீராமபிரானால் அசுவமேத யாகத்திற்கு விடுக்கப்பட்ட குதிரையை இலவன் பிடித்துப் பந்தித்தலும், இராமர் இலவகுசர்களுடன் போர் புரிந்து தோல்வி யடைதலும், ஸ்ரீராமபிரான் முதலிய அனைவரின் முன்னிலையில் ஸீதா பிராட்டியார் பூமிக்குள் பிரவேசித்தலும், வால்மீகி முனிவர் முக்தியடைதலும், அப்பால் இந்திரன் சதாதப முனிவரால் ஏற்பட்ட சாபத்தால் கோள தேயத்தில் பிராமணனாகத் தோன்றி தீயதொழில்களைப் புரிந்து, அதனாற்போந்த பாபத்தைப் போக்க பெருமுக்கலுக்கு வந்து வால்மீக தீர்த்த ஸ்னானத்தால் சாப விமோசனமாதலும், அகஸ்தியர் முக்கியாசல நாதரை பூசித்து முக்தியடைதலும், அங்காரகன் முதலிய கிரகங்கள் முக்கியாசல ஈசுவரரை யர்ச்சித்து இராசிகளை யடைதலும், ஒஷதிகளின் பிரபாவத்தால் ஸுசர்ம்மாவும் அவருடைய சிஷ்யனும், இளமைப்பருவத்தை யடைந்து ஈற்றில் மோக்ஷம் பிராபித்தலும், மற்றவையும் கூறப்பட்டுள்ளன.

மூலக்கிரந்தத்தில் பன்னிரண்டு அத்தியாயங்களாகக் கூறியுள்ள கதைகளை அணுவளவும் விடாமலும், மாற்றாமலும் உள்ளவாறு கூறப்பட்டுள்ளது. இதிற் சில விடங்களில் அதிவர்ணனையாகக் கூறப்பட்டிருப்பதைக் குறைத்தும், ஸந்தர்ப்பானுஸாரமாக எளிதிற் விளங்குதற் பொருட்டு சில விளக்க வுரைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆதலினாற்றான் ஸம்ஸ்கிருதத்

தில் பன்னிரண்டு அத்தியாயங்களையுள்ள இப்புராணம் ஆறு அத்தியாயங்களாகச் சுருக்கப்பட்டது. சுலோகங்களுடைய அர்த்தத்தை முற்றுந் தழுவியும் எழுதப்பட்டுளது.

நான் ஒரு பண்டிதனல்லனாயினும் வெகுகாலமாக வெளிப்படாமலும், பலர் ஆவலோடு எதிர்பார்த்திருந்த இப்புராணத்தை யாவரும் சுலபமாய் அறிந்து அனுஷ்டித்து அதனாலாம் புண்ணியப்பேற்றைப் பெறுமாறு பிரேரித்ததே இது வெளிப்போந்ததற்கு காரணமாகும். இதிற் சொற்குற்றம், பொருட் குற்றம் முதலியன இருப்பின் பண்டிதர்கள் பொறுத்து இதைச் சுத்தப்படுத்தி மென்மேலும் அபிவிருத்திக்குக்கொணரப்ரோத்ஸாகிப்பர் என்று நம்புகிறேன்.

இதை அன்புடன் பரிசோதித் தளித்தவரான ஸ்ரீமான் K. அரங்கநாதம் பிள்ளை அவர்களுக்கும், முக்கியமாக இதைக் குறிப்பிட்ட காலத்தில் சுத்தமாயும், கண்ணியமாயும் அச்சிட்டுக் கொடுத்த கந்தன் அச்சுக்கூடச்சொந்தக்காரர் ஸ்ரீமான் மாணிக்கம் பிள்ளை அவர்களுக்கும் நான் நன்றி செலுத்தக்கடமைப்பட்டுளேன்.

சுபம்.

இங்ஙனம்,

கிரந்த கர்த்தா.

# கடவுள் வணக்கம்.

## கணேசர் ஸ்துதி.

குணகண பரிபூர்ணம் விக்னவிச்சேத தக்ஷம்
நுதஜன பரிதாபம், த்ராயந்தம் கணேசம்
ஸகலவிபுத வந்த்யம், ஸர்வதீ ஸாக்ஷிபூதம்
மமஹ்ருதி நிவஸந்தம் பாவயே பீஷ்டஸித்யை.

(இ—பொ). ஸகல கல்யாண குணங்கள் நிறைந்தவரும் இடையூற்றைப் போக்கடிப்பதில் வல்லவரும், வணங்குகிறவர்களின் எல்லாவித துக்கத்தை நீக்குவோரும், எல்லா தேவர்களாலும் வணங்கப்பட்டவரும், ஸர்வஜீவராசிகளின் அந்தக்கரண விருத்திகளுக்கு ஸாக்ஷியாய் நிற்பவரும், எனது இருதயத்தில் எப்போதும் எழுந்தருளியிருப்பவருமான, கணபதியை இந்நூல் விக்கினமின்றிப் பூர்த்தியாதல் வேண்டுமென்னும் விரும்பியதை யளித்தற் பொருட்டு தியானிக்கின்றேன்.

## சிவஸ்துதி.

சாந்தம் சங்கரமம்புஜாஸன ஹரி ஸ்ரீ—பார்வதீ வந்திதம்
வால்மீக்யாதி மஹாமுனீசுவர வரைரப்யர்சிதம் ஸர்வதா
வேதாந்தப்ரதி பாத்ய மானவிபவம் ஸஞ்சிந்தயே ஸாதரம்
ஸ்ரீமுக்யாசல நாதமாத்மஸ—கஸம்ப்ராப்த்யை பவானீபதிம்.

(இ—பொ). சாந்தரும், பிரம்மா, விஷ்ணு, பார்வதீ இவர்களால் வந்திதரும், வான்மீகர், முதலிய மகரிஷி சிரேஷ்டர்களால் எப்போதும் பூஜிக்கப்பெற்றவரும், உபநிஷத்துக

ளில் பிரதிபாதிக்கப்பட்ட வைபவத்தோடு கூடியவரும், பரா சக்தியின் அதிஷ்டாதாவுமான முக்கியாசல ஈசுவரரை நான் நினைத்த கார்யம் மங்களமாய்ச் சித்தித்தற்பொருட்டு வணக் கத்துடன் தியானிக்கின்றேன்.

---

## விஷ்ணு ஸ்தோத்திரம்.

---

விஷ்ணும் ஸீதா ஸமேதம், தசவதனரிபும்
தர்மஸம்ஸ்தாபனார்த்தம்
காலே காலேச பூமௌ பரமகருணயா
ஸ்வீக்ருதோத் க்ருஷ்டகாயம்
த்யாயே, ஸர்வத்ர பூர்ணம், புருஸுக்ருதவதாம்
தர்சனீயம், ஸதாபி
ப்ரேம்ணு சிரேயோபிவிருத்யை, ப்ரமுதிதவதனம்
வேத வேதாந்த வேத்யம்.

(இ—பொ). தர்மத்தை நிலைநிறுத்துவதன் பொருட்டு ஒவ்வோர் காலங்களில் ஜீவர்பால் கிருபைகூர்ந்து பூமியின் கண் ஒவ்வோர் அவதாரத்தைஎடுப்பவரும், இராவணனுடைய சத்ருவும், எங்கும் நிறைந்தவரும், மிகுபுண்யஞ் செய்பவர்க ளுக்கு எப்போதும் பார்க்கக்கூடியவரும், வேதம், உபநிஷத் இவைகளால் அறியத்தக்கவரும், ஸந்தோஷமான முகத்தோடு கூடியவரும், ஸீதாஸமேதருமான விஷ்ணுவை மங்களம் உண் டாதற்பொருட்டு பக்தியுடன் தியானம் பண்ணுகின்றேன்.

---

ஓம் தத்ஸத்:

# முக்கியாசல புராணம்.

## முதல் அத்தியாயம்.

பிரணவ ஸ்வரூபியான ஸர்வேசுவரனது பக்தர் களில் நைமிசாரண்ய வாஸிகளான முனீசுவரர்கள் மிகச் சிறந்தவர்கள். ஏனென்றால் ஸதா பகவத் தியானத்தி லும் அவரது கதைகளை சிரவணஞ்செய்வதில் அதிக ஆவலும் உள்ளவராதலால் நைமிசாரண்ய வாஸிகள் பக்த சிரோமணிகள் என்பதில் என்ன தடை? அது மாத்திரமல்ல, ஒவ்வோர் புராணமும் அவர்களது பக வத் பக்தி முதிர்ச்சியின் மூலமாகவே இவ்வளவு ஸாங் கோபாங்கமாக வெளிப்பட்டதென்பது எல்லா பௌ ராணிகராலும் ஒப்பமுடிந்த விஷயம். (இவ்விடத்தில் வாசகர்கள் முக்கியமாக ஒன்றைக் கவனிக்கக் கடமைப் பட்டவர்கள்). 'புராணம்' என்னும் வார்த்தையே 'பொய்' என்னும் தாதுவிலிருந்து தோன்றியதென ஆதுனிக நாகரீகத்தில் தோய்ந்தவர்கள் என்னுவர். இது முற்றும் வெறுக்கத்தக்கதே. புராணம் என் பது முற்காலத்தவர்களின் ஜீவிய சரித்திரமும், வாழ் க்கையில் அனுசரிக்கவேண்டிய சில ஆத்ம தத்துவங்களும்

உள்ளடங்கி உணர்த்துகின்றனவையே அன்றி வேறு
அன்று. ஆனால் அவைகளிற் சில வஸம்பவமாயும்
சில அதிசயோக்தியாயும் வர்ணிக்கப்பட்டிருப்பதால்
புராண பக்தர்களுக்கே சில ஸந்தர்ப்பங்களில் வெறுப்
பாகத் தோன்றுவதும் உண்மையே. இதனால் புராணம்
பொய் எனத் தீர்மானிக்கலாகா. அப்படி பொய்
எனத் தீர்மானிக்குமாயின் இன்னும் ஓர் நூற்றாண்டு
சென்றால் சென்ற ஸமீப வர்ஷங்களில் நடைபெற்ற
ஐரோப்பிய மகாயுத்தமும் நவ்ய நாகரீகர்கள் புராணம்
வெறுங் கற்பனை யென்பதுபோல் இதுவும் பொய்
யெனப் புலம்புவர் அன்றோ? அத்தகைய பாஷண்டிக
ளின் வாதம் உண்மையற்றதென்பதில் என்ன சந்தே
கம்? இது நிற்க நைமிசாரண்யம் எனப்படுவது உத்தர
தேசத்தில் உள்ள ஓர் பெரும் புண்யஸ்தலம். இஃது
திவ்ய க்ஷேத்திரங்களாலும், நதிகளாலும், காடுகளா
லும் மற்றும் அலங்கரிக்கப்பட்டது. இன்றைக்கும்
இவ்விடத்தில் அனேக தாபஸர்கள் தபம் புரிவதை
நேரில் பார்க்கலாம். இதைப் போன்ற திவ்யஸ்தலங்
கள் உத்தர தேசத்தில் இன்னும் அனேகம் உள. இவை
ஒவ்வொருவரும் நேரில் தரிசித்து களிக்கத்தக்கவை.
இந்த புண்ய க்ஷேத்திரத்தில்தான் முன் குறிப்பிடப்
பட்ட சௌனகாதி மகர்ஷிகளின் வாஸஸ்தானமும்
தபோ பூமியும். இவர்களுடைய ஆசார்ய ஸ்தானம்
அலங்கரிக்கப்பட்டவர் ஸமர்த்தரான சூதமுனிவரர்
சௌனகாதிகளின் ஆசார்யரான ஸூதரிடத்திலிருந்து
இவர்கள் புராணார்த்தங்கள் எல்லாம் தெரிந்துக்கொண்



டனர் இப்படி இவர்கள் வெகுகாலம் தபசும் பிரம்ம
விசாரமுஞ்செய்து மகிழ்ந்திருக்குங்கால் இவர்களுக்
குள் ஓர் சந்தேகம் உதயமாயிற்று. அச்சந்தேகம்
என்னவென்று ஈண்டு குறிப்பிடுவதற்குமுன் சூதபுரா
ணிகர் யார் என்பதைப்பற்றி சில வாக்கியங்களால்
விசாரிப்பாம். சூதர் என்பவர் வியாஸ மகர்ஷியின் சிஷ்
யர். இவர் ஸர்வகலா வல்லுனர். வியாஸரால் செய்
யப்பட்ட பதினெண் புராணங்களும் சூதபுராணிகர்
நைமிசாரண்ய வாஸிகளான சௌனகாதிகட்கு உபதே
சிப்பதுபோன்று காணப்படுவதால் சூதமுனிவர் மூல
மாகத்தான் அவைகள் முதன் முதல் வெளியாயிருக்க
வேண்டும். சூதமுனிவரர் வியாஸரின் மாணாக்கர் ஆத
லால் புராணங்களும் மற்ற சாஸ்திரங்கள் எல்லாமும்
ஸாக்ஷாத் வியாஸரிடத்திலிருந்து நேராக உணரப்
பெற்றவராவர். இதனாலேயே அவர் ஸர்வ சாஸ்திர
பாரங்கதர் மாத்திரமல்லாமல் புராணங்களுடையவும்,
சாஸ்திரங்களுடையவும் அபிப்ராயமும், உண்மையும்
இவர்க்கு தெரிவதுபோல வேறு யார்க்கும் அவ்வளவு
தெளிவாகத்தெரிய நியாயமில்லை. இது நிற்க, நைமி
சாரண்ய வாஸிகளுக்குள் எழுந்த சந்தேகம் என்ன
வென்று அறிய வாசகர்கள் விருப்பமிகுதி யுடையோ
ராயிருப்பர் அன்றோ? புராணங்களின் அடிப்படை
யான கொள்கை மூர்த்தி, தீர்த்தம், ஸ்தலம் இவைகள்
மூலம் பக்தருக்கு பகவத்பக்தி புகட்டுவதாதலால்
சௌனகாதிகளுக்கும் இத்தகைய ஸந்தேகந்தான்
உண்டானது அதாவது க்ஷேத்திரங்களுள் எது உத்

தமமானதென்றும் தீர்த்தங்களில் யாது சிறந்ததென்றுந்தான் அவர்களுக்குள்ளெழுந்த ஸந்தேகம். இச்சந்தேகம் சௌனகாதிகளுக்கும் முக்கியமாய் புராணப் பற்றுள்ள யாவர்க்கும் கிரமமாகத் தோன்றக்கூடியதன்றோ?

ஆனால் இது யாரால் நிவர்த்தியாவது? சௌனகாதிகள் சூதமுனிவராது மாணாக்கர் என்று முன்னம் கூறப்பட்டிருக்கிறதல்லவா? ஆசார்ய பாவத்தாலும் புராணார்த்த விசாரதர் என்ற ஹோதாவிலும் சூதரைத் தவிர இச்சந்தேகம் நிவர்த்தி செய்வதற்கு யோக்கியதை உடையோர் வேறு யாரும் கிடைப்பது அரிது. ஆதலால் தமது ஆசார்யரான சூதமகர்ஷியைப் பார்ப்பதென்று சௌனகாதிகள் ஏகோபித்து தீர்மானித்தனர். ஆனால் அவர் எவ்விடத்தில் எப்போது எவ்விதம் பார்க்கப்படமுடியும். அவரும் ஓர் இடமாக இருப்பவரன்று. எனவே குறிப்பிடப்பட்ட ஓர் இடத்தில் ஸந்திப்பதும் முடியாத காரியம். சூதமுனிவர் எந்த க்ஷணத்தில் பார்க்கப்படுவர் என்னும் அவா மேலீட்டினால் ஏற்கனவே அவருக்குள்ளெழுந்த ஸந்தேகத்தால் புண்பட்டிருந்த மனம் மீண்டும் துன்புற நேர்ந்தது. இவ்வாறு சிலகாலம் சென்றபின் ஒரு நாள் பௌராணிக ரத்னமான சூதரும் தமது சிஷ்யர்களான சௌனகாதி தபோதனர்களின் ஆசிரமத்திற்கு எழுந்தருளினர். நீண்டகாலமாக ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டிருந்த சூதரின் வரவு அவர்களுக்கு



மிக்க மனக்களிப்பைத்தந்தது. ஸதா பிரணவஸ்வரூபியான பரமசிவ தியானத்திலும் அவரது பரிசுத்த பஞ்சாக்ஷர மந்திர ஜபத்திலும் ஆழ்ந்துபற்றிய சித்தவிருத்தியுடன் கூடிய சூதரும் ஷோடச உபசாரங்களால் பூஜிக்கப்பட்டு உயர்ந்த ஆஸனத்தில் எழுந்தருளச் செய்வித்து பயபக்தியுடன் சௌனகாதிகள் அவரை பின்வருமாறு வினவினர். ஓ! ஸ்வாமின்! அஷ்டாதச புராணங்கள், இதிஹாஸம் முதலியவை தேவரீரிடத்திலிருந்தும் உணரலானோம். ஆனால் அவற்றில் கேட்கவேண்டியது இன்னும் கொஞ்சம் உளது. வியாஸ சிஷ்யரான ஓ! முனிசிரேஷ்டரே! நம்மில் தயைகூர்ந்து சொல்லியருளல் வேண்டும். தேவரீரது அமிருதத்திற்கு ஒப்பான வாக்கியங்கள் வேண்டிய வரை நம்மால் பானஞ்செய்யப்பட்டும் சிறிதும் திருப்தி உண்டாகவேயில்லை. ஆதலால் எல்லா க்ஷேத்திரங்களுக்கும் தீர்த்தங்களுக்கும் யாது சிறந்தது எனச் செப்பவேண்டும் என்றனர் சௌனகாதிகள். அதுகால் காருண்ய மூர்த்தியான சூதமுனிவர் அவர்பால் இரங்கிப் பின்வருமாறு விளம்பலாயினர். ஓ! முனிச்ரேஷ்டர்கள்! உங்களால் கேட்கப்பட்ட கேள்வி மிக்க பொருத்தமானது. ஏனெனில் அஃது உங்களுக்கும் உலகிற்கும் நன்மை பயக்கத்தக்கது. ஆதலால் அதை உங்களுக்கு விரிவாய் விவரிக்கிறேன் கேட்பீர்களாக! க்ஷேத்திரங்களுள் உத்தமமான க்ஷேத்திரம் நைமிசாரண்ய க்ஷேத்திரம் எனச்சொல்லப்படுகிறது. அதிலும் முக்கியமானது பதரிகாரண்ய க்ஷேத்திரம். அதிலும் விருத்தா

வன க்ஷேத்திரம் சிறந்தது. அதைக் காட்டிலும் குருக்ஷேத்திரமும் துவாரகையும் மேன்மையானவை. அதைவிட மகிமை பொருந்தியவை அயோத்தியா க்ஷேத்திரமும், மதுரையும், காசி க்ஷேத்திரமும், காஞ்சீபுரமும் அதைக்காட்டிலும் உயரியது. வீக்ஷாரண்யம், கடிகாசலம் ஆகிய இஃக்ஷேத்திரங்களைவிட சோணாசலம் சோபிதமானது. ஸ்ரீமுஷ்ணம், மத்யார்ஜுனம், கும்பகோணம், ஸ்ரீரங்கம் ஆகிய இந்த க்ஷேத்திரங்களைக்காட்டிலும் மிக முக்கியமானது தென்மதுரை க்ஷேத்திரம். இராமேசுவரம், சுப்ரமணியம், ஜனார்த்தனம், சிவகிரி, அனந்தசயனம் ஆகிய இவைகள் மிகமிக ப்ரஸித்தமானவைகள். இந்த க்ஷேத்திரங்கள் யாவும் புராணங்களிலும், பாரததேசத்திலும் ரொம்பவும் புண்யமானவைகள் என்று கருதப்படுகின்றன. மேல்கோர்வையாகக் குறிப்பிடப்பட்ட புண்ய ஸ்தலங்களில் வேதாரண்யம் பஞ்சநதம், கௌரீமாயூரம், மத்யார்ஜுனம் இவைகளையும் சேர்த்துக்கொள்ளத்தக்கவை. இந்த க்ஷேத்திரங்களுள் சிறந்ததெனக் கருதப்படுவது சோணாசலம். இவ்வெல்லா புண்ய க்ஷேத்திரங்களைக்காட்டிலும் ஸர்வ உத்தமமும், தென் கைலாஸமென வழங்குவதுமான முக்கியாசலம் என்னும் பெருமுக்கல் க்ஷேத்திரம எல்லா புண்ணியங்களும் நிறைந்தது. இவ்வுலகில் யாண்டுயாண்டு எத்தனை புண்யக்ஷேத்திரங்களும் தீர்த்தங்களும் உளவோ ஆண்டு ஆண்டு அவ்வெல்லாம் இம்முக்கியாசல க்ஷேத்திரத்தின்கண் ஒருங்கே அமையப்பெற்றுள. இதனாலும் இதற்கு



முக்கியாசலம் எனப் பெயர் வழங்கி வருகிறது. இன்னமும் முக்கியாசலம் என்பதற்கு அனேக காரணங்கள் உள. அவை பின்னால் குறிப்பிடப்படும். இந்த திவ்ய க்ஷேத்திர தரிசனத்தாலும், இப்புண்ய தீர்த்தங்களில் மூழ்குவதாலும் ஸர்வ பாபமும் விமோசனமாகுமென்பதில் சந்தேகமில்லை. ஓ! முனிவரர்காள்! இந்த க்ஷேத்திரத்தின் மாகாத்மியம் அளந்துகூற முடியாதது. எந்த க்ஷேத்திரத்தை நினைத்த மாத்திரையில் மனிதர் மனோசுத்தி யடைவரோ, சந்திரசேகரான ஸாக்ஷாத் பரமசிவன் கைலாஸகிரியைவிட்டு தேவர் ஸகிதமாய் எந்த பர்வதத்தை வாஸஸ்தானமாகக் கொண்டுளரோ அந்த பர்வதத்தின் (க்ஷேத்திரத்தின்) மகிமையை வர்ணிக்க யாவரால் முடியும் என்று சூதர் கூறிமுடித்ததும், சௌனகாதி ருஷிகள் புராணிகரைப் பார்த்து பின்வருமாறு நவின்றனர். சுவாமின்! உலகின்கண் மிகமிக உத்கிருஷ்டமானதும் ஸ்மரித்த மாத்திரையில் ஸர்வபாபமும் நாசமாகத்தக்க அந்த முக்கியாசலத்தின் பெருமையைச் சுருக்கமாய்ச் சொல்லியருளினீர்கள். சொன்னதுவரைச் சந்தோஷகரமாயினும் நமது சந்தேகமும் அவாவும் முற்றும் நிவர்த்தியாகவில்லை. ஆதலால் அம்முக்கியாசல க்ஷேத்திரத்தின் மகிமையை அறிய நாம் இன்னமும மிக ஆவல் உள்ளவராயிருக்கின்றோம். அது மாத்திரமல்ல, அந்த முக்கியாசல க்ஷேத்திரம் எவ்விடத்தில் இருக்கிறதென்றும் அதன் பிரபாவத்தைப்பற்றி புராணத்தில் இன்னும் என்ன கூறப்பட்டிருக்கிறதென்றும், பரமசிவன்

கைலாஸகிரியைவிட்டு எதன்பொருட்டு முக்யாசலத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்றாரென்றும் மற்றும் விரிவாய் நமக்கு விளம்பல்வேண்டும் என்றனர் சௌனகாதிகள். அப்போது சூதமகருஷியும் தமது ஆசார்யரான வியாஸரை நமஸ்கரித்து பின்வருமாறு சொல்லலுற்றார். ஓ! தாபசர்களே! முக்யாசலத்தின் மஹிமை எனக்கு தெரிந்தவரைக்கும் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேட்பீர்களாக. இதை விரிவாய் விளக்கவேண்டின் வர்ஷம் நூறு ஆனாலும் போதாது; முன்னொருக்கால் பகீரத அரசனால் கேட்கப்பட்டதற்கு வஸிஷ்ட மகர்ஷியும் முக்யாசலத்தின் மஹிமையைப்பற்றி கொஞ்சம் விரிவாய்ச் சொல்லியிருக்கிறார். அதை யான் உங்களுக்கும் தெளிவாய் விளக்க முயல்கின்றேன்.

தர்ம்ம பிரபாவத்தால் எவரது கீர்த்தி மூவுலகும் வியாபிக்கப்பட்டிருக்கின்றதோ, யாராலும் செய்தற்கு அரிய பிரயத்தனத்தால் கங்கை வரவழைக்கப்பட்டு அப்பரிசுத்த கங்கா ஜலத்தால் ஸகர புத்திரர்கள் யாரால் ஸத்கதி யடையப்பட்டனரோ, எவரது பராக்கிரமத்தைப்பற்றி தேவரும் புகழ்கின்றனரோ அத்தகைய ஸகரகுலத்துதித்த பகீரத அரசன் புண்ய ஸ்தலங்களையும், தீர்த்தங்களையும் முக்யமாய் தமது நாட்டையும் பார்க்க விருப்புற்றவராய் எல்லாவித பரிவாரங்களுடனும் ஸஞ்சரிக்கப் புறப்படலாயினர். ஆனால் தற்காலத்திய அரசர்கள்போன்று மோட்டோர் முத



லிய நாகரீக வாகனங்களில் ஆடம்பரமாக புடைசூழ்ந்து பவனிவருவதுபோல பகீரதர் புறப்படவில்லை. பகீரதரோ வேண்டிய பரிவாரங்களுடன் பட்டணங்களைப் போலவே கிராமாந்தரங்கள், கஷ்டமான காடுகள், நதிகள் முதலியவைகளையும் சுற்றிப்பார்த்து குடிகளுக்கு வேண்டிய குறைகளைக் கவனித்து பரிகாரம் தேடுவது மாத்திர மல்லாமல் வனங்களிலும், நதிதீரங்களிலும் ஸதா பகவத்தியானஞ்செய்து மகிழ்ந்திருக்கும் முனிகளுடைய ஆசிரமங்களிலும் மிக்க பயபக்தியுடன் அவர்களை நமஸ்கரித்து அவர்களிடத்தினின்றும் ஆசீர்வாதமும் பெற்று அவருக்கும் வேண்டியதை உபகரிப்பர். இப்படி உல்லாஸமாய் ஸஞ்சரிக்குங்கால் விசுவநாதரான ஸாக்ஷாத் பரமசிவன் விசாலாக்ஷியுடனும் மற்ற தேவர்களுடனும் எந்த இடத்தில் எழுந்தருளியிருக்கின்றாரோ அந்த ஆனந்தகானனம் எனப் பெயரிய காசி நகரத்திற்போய் சேர்ந்தார். காசிப்பட்டணம் அவரது ஆஞைக்கு உட்பட்ட பெரிய நகரம் என்று மாத்திரமல்லாமல் புண்ணியஸ்தலங்களுள் சிறந்ததும் ஸர்வஜகத் ப்ரஸித்தமும் ஆனது. காசிவிசுவநாதர் ஆலயத்திற்கு லக்ஷியமாய் கங்காநதி எப்போதும் பிரவஹித்துக் கொண்டிருப்பதால் அவ்விடத்தில் தரிசனம் செய்ய வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் [illegible] தொடங்கி ஹர, ஹர, ஹர வென்று நதியில் மூழ்குவதும் விபூதி ருத்ராக்ஷாதிகளை அணிந்து ஆலயத்திற்குச் சென்று விசுவநாதனையும் விசாலாக்ஷியையும் பக்தி பூர்வமாய் கட்டி ஆலிங்கனம் செய்வதையும் மற்றும் பா

க்து பகீரதர் பரவசமானார். தென்தேசத்தியக் கோயில்கள்போன்று அல்லாமல் உத்தர தேசத்திய எல்லா கோயில்களுக்குள்ளும் ஸர்வ ஜனங்களும் ஸர்வ ஸ்வதந்திரமாயும் சென்று அபிஷேகம், ஆராதனை, ஆலிங்கனம் முதலியனசெய்து மகிழ்வது வழக்கம். தென்தேசத்திய தேவாலயங்களோ அப்படியல்ல. துஷ்டமிருகங்கள் அடைப்பட்டிருக்கும் ஓர் கண்காக்ஷிச் சாலையெனலாம்.

அதுமாத்திரமல்ல, இது மத அதிகாரிகளுடையவும் மதபரிபாலகர்களுடையவும் அழியாக்கோட்டை. ஆதலால் இக்கோட்டையை யாரும் முற்றுகை போடாமலும், இக்கண்காக்ஷிச் சாலையில் யாரும் ஸ்வதந்திரமாய் உள்ளே நுழையாதபடிக்கும் என்னென்ன தடைகள் சட்ட பூர்வமாய் ஏற்படுத்தவேண்டுமோ அவை எல்லாமும் முன்னமே ஏற்படுத்தியிருக்கின்றனர். ஜனங்களின்—பக்தகோடிகளின் அற்ப சுவதந்திரத்தைப் பறிக்கத்தக்க இவ்வாபாஸ சட்டங்களுக்கும் வழக்கத்திற்கும் இனிமேல் இடமில்லாதபடி நமது வாசகர்கள் கவனித்துக்கொள்வார்களென்று நம்புகிறேன். இது நிற்க, பகீரதர் காசிநகரத்திற்குள் பிரவேசித்தது ஸந்தியாகாலமாதலால் தமது பரிவாரங்களையெல்லாம் கங்காநதிக் கரையோரமாய் நிறுத்தி விசிரமிக்கச் செய்து, அஸ்தமன ஸந்தியில் முறைப்படி செய்ய வேண்டிய ஸந்தியா வந்தனம் முதலியவற்றை நன்கு நிறைவேற்றியபின் சுவாமி தரிசனஞ்செய்ய விசுவநாதர்



ஆலயத்திற்கு சென்றார். அவ்விடத்தில் கருணாபூர்ண ஸ்வரூபியாயும், சூர்யன், சந்திரன், ஆக்னி ஆகிய முக்கண்ணோடு கூடியவரும், உலகிற்கு ஆதிகர்த்தாவாயும் ஸ்வயம்புவாயும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூர்யன், சந்திரன், யஜமானன் என்னும் அஷ்டமூர்த்தியுடன் கூடியவரும் காமதேவனது கர்வத்தைப் பங்கம் செய்தவரும், ஸம்ஸார துக்கத்தை ஒரு நொடிப் பொழுதில் போக்கடிக்க வல்லவரும், மனோகரமான கங்காநதிதீரத்திலும், அவ்வாறே சூர்ய மண்டலத்திலும், காமக்ரோதாதிகள் அற்ற முனீசுவரர்களின் ஹிருதய கமலத்திலும், பெருமை பொருந்திய பஞ்சாக்ஷர மந்திரத்தின் கண்ணும், வேதத்தின் முடிவிலும் கைலாஸகிரியின் சிகரத்திலும், எப்பொழுதும் வீற்றிருப்பவரான விசுவநாதரையும் விசாலாக்ஷியையும் விதிப்படி, நமஸ்கரித்து வெளிவருங்கால் அவ்விடத்தில் ஓர் ஆசிரமம் அவரது கண்களுக்கு புலப்பட்டது. அவ்வாசிரமத்திற்குள் சென்று பார்க்கையில் அகஸ்தியர் தமது பத்னியுடன் வீற்றிருப்பதைக் கண்டார். அவரோ ஜடாதாரி, மரவுரியும், மான் தோலும் ஆடையாய் அணிந்தவர். சரீரம் முழுதும் நல்ல வெண்ணிறமான விபூதியால் உத்தூளனஞ்செய்தவர். பிரம்மதேஜஸால் பிரகாசிப்பவர் சமுத்திரத்தை உள்ளங்கையில் அடக்கிப் பானஞ்செய்தவர். இத்தகைய அகஸ்திய மகரிஷியை தரிசிக்க அவ்வாசிரமத்திற்குள் பிரவேசித்தார். தற்காலத்திய அரசர்களைப்போன்றோ அதிகாரிகளைப்போன்றோ தாம் கடவுளையும், அவரது அன்பர்

களேயும்விட சிறந்தவர்கள் என்ற அகம்பாவத்தோடு
சக்ரவர்த்தியான பகீரதர் அகஸ்தியரைப் பார்க்க அவ்
வாசிரமத்திற்குள் செல்லவில்லை. ஆனால் அவ்ரோ
அதிக வணக்கத்துடன் இருகைகளும் கூப்பி பயபக்தி
யுடன் அகஸ்தியரை தண்டனிட்டு அவர் முன் நிற்க
லாயினர். அதுகால் அகஸ்தியரும் மிக்க பக்தியுடன்
தன்முன்னிற்கும் அரசரைப் பார்த்து ஸந்தோஷத்
தோடு பின்வருமாறு வினவினர் அரசர்கட்கெல்லாம்
அரசனே, ஓ! அயோத்தியாதிபரே! உன் வரவு நல்வர
வாகுக முன்ஜன்ம மாந்திரங்களில்செய்த புண்ய
விசேஷத்தால் நீர் ஆனந்தகானனம் என்னும் காசி
நகரத்திற்கு அதிபராகிய விசுவநாதரை தரிசனம் செய்
தாய். பாபிகளுக்கு அவரது சேவை கனவிலுங்கிடைப்
பது அரிது. ஆதலால் போகம் மோக்ஷம் இரண்டுங்
தரத்தக்க விசுவநாதரை தரிசித்ததால் உமது ஜன்மம்
சாபல்யமானது. அது மாத்திரமல்ல, நீர் கிருதார்த்த
னும் ஆனாய் என்றனர் அகஸ்தியர். இதைக்கேட்ட
அரசரும் மறுமொழியாக மகர்ஷியைப்பார்த்து பகர்வ
தாவது, ஓ! முனிசிரேஷ்டரே! உமது அனுக்கிரக விசே
ஷத்தால் யான் தன்யன் ஆனேன். அது மாத்திர
மன்று, இந்த க்ஷேத்திரமானது ஸர்வ க்ஷேத்திரங்க
ளுக்கும், ஸர்வ உலகிற்கும் உத்தமமானதென்று என்
அணிவு. இதனாற்றான் தேவரீரும் இவ்விடத்திலேயே
விசிரமிக்கப் பிரியங்கொண்டீர்கள். இப்புண்ய ஸ்தலத்
தின்கண் அமையப்பெற்ற தீர்த்தங்களோ அனந்தம்.
உலகில் எத்தனை புண்ய தீர்த்தங்களும ஆசிரமங்களும்



உளவோ அவையெல்லாம் இதைத் தீர்த்தமாயும், ஆசி
ரமமாயும் பாவிக்கப்படுகின்றன. இத்தனை சிறப்பு
வாய்ந்ததாதலால் இதற்கு ஸமானமாக வேறு எவ்வி
டத்திலும் இல்லையென்று எனது திருடமான தீர்மா
னம் என்று அரசனது வார்த்தைகளைக் கேட்ட
முனிவரும் மொழிந்ததாவது. ஓ! வேந்தரே! நீர்
சொன்னது உண்மையே. இக்குவலயத்தின்கண்
காசி க்ஷேத்திரத்திற்கு ஸமானமானது இல்லை
தான். ஆனால் ஒன்று உளது. அஃது வால்மீகியால்
பூஜிக்கப்பெற்ற முக்கியாசலம் என்னும் பெருமுக்கில்
ஒன்றுதான். இக்குவலயத்தின்கண் எவ்வளவு புண்ய
க்ஷேத்திரங்களும் தீர்த்தங்களும் உளவோ அவை எல்
லாமும் முக்கியாசல க்ஷேத்திரத்தின் கோடிக்கு ஒரு
பங்குகூட இணையாகா. ஏனென்றால் அந்த முக்கியா
சலத்தின்கண் மகாதேவர் வெள்ளியங்கிரியை விட்டு
காமாக்ஷியுடனும் பிரமன் இந்திரன் முதலிய தேவருட
னும் வஸித்து வருவதனாலேயே இஃது காசியைவிட
முக்கியமானதென்று குறிப்பிடப்பட்டது என்றதும்,
அரசன் முனியைப்பார்த்து ஓ! சுவாமியின்! ஸர்வ
க்ஷேத்திரங்களுக்கும் உத்தமமானதென்று எதைத்
தேவரீர் சொன்னீர்களோ, அந்த முக்கியாசல க்ஷேத்
திரத்தின் மகிமையைக் கேட்க யான் அதிக ஆவல்
உள்ளவனாயிருக்கிறேன். ஆதலால் தேவரீர் திருவுளங்
கொண்டு எனக்கு சொல்லியருளல் வேண்டும். அப்
போது தாபஸரும் ஓ! பகீரதரே! காலம் அதிக்ரமிக்
கின்றது. நமக்கு ஸ்வாமி தரிசனம்பண்ணத் தேவால

யத்திற்கு போகவேண்டும். நீரும் நீண்ட யாத்திரை செய்து வந்திருக்கிறீர். அதனால் ரொம்ப சிரமம் ஏற்பட்டிருக்கக்கூடும். ஆதலால் நீர் இச்சமயம் வினாயகர், தண்டபாணி, ஷண்முகர், மாதவர், பைரவர் முதலிய தேவர்களை வணங்கி இரவில் இவ்விடத்திலேயே சிரம பரிகாரம்செய்து மறுநாள் பரிவாரங்களுடன் அயோத்திற்கு புறப்பட்டுப்போவீராக. முக்கியாசலத்தின் பிரபாவத்தைப்பற்றி அறிய ஆவல் அதிகமாயிருப்பின் உமது குலகுருவும் பிரம்மாவின் புதல்வருமான வஸிஷ்டரைக் கேட்டால் அதை அவர் விளக்கமாய் உனக்கு உரைப்பர். ஆதலால் காலம்கடத்தாமல் அயோத்திக்கு போய் சேரும் என்று சொல்லி அகஸ்தியர் சிஷ்யர் சமேதராய் தேவதரிசனம் செய்யச் சென்றுவிட்டார். ஆனால் அரசர் மகர்ஷியைவிட்டு பிரிந்தவராயினும், முக்கியாசலத்தின் மகிமையை அறியவேண்டுமென்னும் விருப்பமும் அது ஸம்பந்தமாய் அகஸ்தியர் சொன்ன மொழிகளும் எந்த க்ஷணத்தில் அயோத்திக்கு சென்று வஸிஷ்டரைப் பார்க்கக்கூடுமென்னும் எண்ணமும் அவர் மனதைவிட்டு பிரியவில்லை. ஆதலால், அன்றிரவு பகீரதீ நதிக்கரையிலே விசிரமித்து சூரிய உதயத்தை எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார் என்று சௌனகாதி முனிகளுக்கு சூதமுனிவர் சொல்லி விரமித்தார்.

முதல் அத்தியாயம்.

முற்றிற்று.

## இரண்டாவது அத்தியாயம்.

### பகீரதர் வஸிஷ்டரைச் சந்தித்தலும், முக்கியாசல வர்ணனையும்.

நான்கு முகங்கள் இல்லாத ஏகமுக பிரம்ம வேதனாயும், இரு கரங்களையுடைய மகா விஷ்ணுவாயும், மூன்று கண்கள் அற்ற பரமசிவனாயும் அவதரித்த வியாசரின் பிரதம மாணாக்கரும், ஸர்வ சாஸ்திரப்ரவீணருமாய சூதபுராணிகர் சௌனகாதி முனிகளுக்கு முக்கியாசல மகிமையைப்பற்றி மீண்டும் உபதேசிப்பதாவது.

ஓ நைமிசாரண்ய வாசிகளே! அயோத்திக்கு அரசனாகிய பகீரதன் பாகீரதீ நதிக்கரையில் தமது பரிவாரங்களுடன் அன்று இரவு விசிரமித்து பிரம்ம முகூர்த்தத்தில் படுக்கைவிட்டு எழுந்திருந்து மனதை ஒருமைப்படுத்தி ஈசுவரத்தியானம் பண்ணிக்கொண்டிருக்கையில்தான் ஆவலோடு எதிர்பார்த்திருந்த கதிரவன் கிரணமும் பூர்வ திசையில் வீசக்கண்டான். அந்த க்ஷணத்திலேயே பரிவாரங்களுடன் அயோத்தியை எதிர்நோக்கிப் பிரயாணமானார். ஆனால் அயோத்தியோ ஸமீபத்தில் உள்ள பட்டணம் அல்ல. வழியும் சௌக்யமானது அன்று. அனேக வனங்களும் பெரிய நதிகளும் எல்லாந் தாண்டிதான் போக வேண்டும். இத்தகைய கஷ்டமான மார்க்கங்களையெல்லாம் கடந்து அயோத்திக்குள் அரசனும்போய்சேர்ந்

தார். ஆனால் அயோத்தியோ தமது ராஜதானியா யிருப்பதால் அஃது ஸாதாரண நகரம் போல் அல்ல. அயோத்தியானது விசாலமான ஏழு ராஜ வீதிகளோடு கூடியதும் அவ்வீதிகளின் இருபுறங்களிலும் மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் வானத்தளாவி நிற்பதும், அதன்மேல் கொடிகள் பறக்கவிடப் பட்டிருப்பதும், வீதிகளின் மத்தியில் இடையிடையே பலவித வர்ணங்கள் அடங்கிய தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு அதன் நடுவில் முத்து மாலைகள் வரிசையாகத் தொங்கவிடப்பட்டு அஃது காற்றில் ஆடுவதும் மற்றும் பார்த்தால் குபேர பட்டணமென்றோ, அல்லது தேவேந்திரன் வஸிக்கும் அளகாபுரியோ என்று தோன்றக்கூடிய அவ்வளவு அழகு பொருந்தியிரா நின்றது. இத்தகைய சிறப்புவாய்ந்த தமது ராஜ தானிக்குள் பிரவேசித்து அவர் ஸ்வர்ண நிர்மிதமான அரண்மனையில் கொஞ்சகாலம் சுகமாய் விச்ரமித்து ராஜ்ய பரிபாலனஞ்செய்து வருங்கால்தான் தீர்த்த யாத்திரையாகப் புறப்பட்டதும், காசியில் அகஸ்தியர் சந்திக்கப்பட்டதும், அவர் முக்கியமானதைப்பற்றிக் கூறினதும் மற்றும் எல்லாம் அவரது ஞாபகத்திற்கு வந்தது. அரசனும் உடனே அடங்கா மனமகிழ்ச்சியுடன் வஸிஷ்டரின் ஆசிரமத்திற்கு பிரயாணமானார். பகீரதர் அரசாயினும் தான் ஆடம்பரமாக வாழ விரும்பாமல் எப்போதும் ஸத்விஷயங்களிலும், கடவுள் பக்தியிலும் அவர் மனது எவ்வளவு தூரம் ஈடுபட்டிருந்ததென் யோசிக்கால் நன்கு விளங்கும். அது



மாத்திரமல்ல. அதிகாரத்திமிரும், பணக்கர்வமும், நாஸ்திகத்தன்மையும் நிரம்பியிருக்கும் தற்காலத்திய வேந்தர்களுக்கெல்லாம் அவரது வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சமும் பெரியபாடம் புகட்டுவதைக் கூர்ந்து பார்த்தால் தெரியவரும். இதுநிற்க, பகீரத மகாராஜனும் வஸிஷ்டரின் ஆசிரமத்திற்கு பிரயாணமானாரென்று முன் குறிப்பிடப்பட்டதன்றோ? இவ்விடத்தில் வஸிஷ்டர் யார் என்றும், அவரது ஆசிரமம் எப்படியிருக்கிறதென்றும் மற்றும் சுருக்கமாய் விளக்குவது அவசியமாதலால் வாசகர்கள் அதிருப்தியுறாரென்று கருதுகிறேன்.

வஸிஷ்டர் பிரம்மாவின் புதல்வர். இவர் இளமைப் பருவத்திலேயே பெரிய மேதாவியெனப் பெயர் பெற்றவர். சூர்யகுல அரசர்கட்கெல்லாம் குல ஆசாரியர். பிரம்ம ருஷிகளுள் சிறந்தவர். ஸதா ஸமாதியிலே இருப்பவர். தமது அனுபவங்களை யெல்லாம் யோக வாஸிஷ்டம், க்ஞான வாஸிஷ்டம் முதலிய அருமை நூல்களின் மூலமாக வெளிப்படுத்தியவர். இத்துணைச் சிறப்பு வாய்ந்த வஸிஷ்ட மகருஷியின் ஆசிரமமோ அக்காலத்தைய ஆசிரமங்களுக்கெல்லாம் வழிகாட்டியாயிருந்ததென்று பின்வரும் வாக்கியங்களால்நன்கு உணரலாம். ஆசிரமம் என்றால் ஸம்ஸாரதுக்க நிவர்த்தியின் பொருட்டு உலக வாழ்க்கையில் வெறுப்புற்று ஏகாந்தமான இடங்களிலிருந்து மனதை ஒருமைப்படுத்தி ஆத்மதியானஞ்செய்யும் அப்பியாசிகளின் அல்லது

ஆரூடர்களின் வாஸஸ்தானத்திற்கு ஆசிரமமென்றும்
பர்ணசாலையென்றும், மடம் என்றும், அழைக்கப்
படுவது வழக்கம். இஃது பிரகிருதியின் அதிரமணீய
மான தோற்றம் நிரம்பியிருப்பதோடு ஏகாந்தமாயும்
இருத்தல்வேண்டும். பலவித செடி கொடிகளடர்ந்தா
யும் பல்வேறு காய், கனி, புஷ்பம் ஆகிய இவைகளை
எப்போதுந் தரத்தக்க மரங்களால் பிரசோபிதமாயும்,
இயற்கையிலே பரஸ்பரம் அன்பு நிரம்பிய மிருகக் கூட்
டங்களால் பூர்ணமாயும், குயில் முதலிய பரவைகளின்
இனிய ஓசைகளால் மனோகரமானதாயும், எக்காலத்
தும் பிரவகிக்கக்கூடிய ஜீவ நதிகளாலும், மலைகளாலும்
வனங்களாலும் மற்றும் திகழ்ந்து விளங்கா நிற்றல்
வேண்டும். அதுமாத்திரமல்ல, சிஷ்ய கணங்களின் வே
தாத்தியயன சப்தத்தால் பரிசுத்தமானதும், ஸ்வபாவ
மாகவே சாந்தியைத்தரத்தக்க அவ்வளவு மேன்மை
பொருந்தியதாயும் இருத்தல்வேண்டும். இத்தகைய
லக்ஷணங்கள் யாவும் அமையப்பெற்ற வஸிஷ்டரின்
ஆசிரமத்திற்கு பகீரதர் அரசர் வியல்பை விட்டு
அடிமை என்ற நிலையில் போய்ச் சேர்ந்தார்.
அப்போது அவ்வாசிரமத்தின் ஒருபுறத்தில் தபோ
தனர்கள் பிரம்ம விசாரம் செய்வதும், இன்னொரு பக்
கத்தில் யோகிகள் ஸமாதி பரிசிலனஞ் செய்வதும், மற்
றொரு இடத்தில் தமது பேட்டிக்காக காத்திருக்கும்
அரசர்களுக்கு பலவித சிக்கலான சட்ட ஸம்பந்த
யோசனைகளைக் கூறுவதும், மீதி சமயத்தில்
தான் நிர்விகல்ப ஸமாதியில் ஆழ்ந்து மெய்மற



ந்து இன்புற்றிருத்தலுமாகியவற்றைப் பார்த்தால் எவ
ருடைய மனந்தான் பரவசமாகாமலிருக்கும்! இந்த
அற்புதக்காக்ஷிகளெல்லாம் கண்டு களித்து மனமுருகி
கைகூப்பி பயபக்தியுடன் வஸிஷ்டரின் சன்னிதானத்
திற்குச்சென்று அவரடிபணிந்து நமஸ்கரித்தது மாத்தி
ரமல்லாமல் மற்றுமுள்ள எல்லா ருஷிக்கூட்டங்களையும்
தண்டனிட்டு அவர்களுடைய ஆசீர்வாதமும் பெற்றுக்
கொண்டு வஸிஷ்டமகருஷியின் அருகில் அவரது ஆக்
ஞையால் அமரலாயினர். அரசனின் அன்பைக்கண்டு
அகமகிழ்ந்து கடைக்கண்ணால் வஸிஷ்டர் பகீரதனை
நோக்கி பின்வருமாறு குசலப்பிரச்னம் செய்தனர். ஓ!
அரசனே! நும்வரவு நல்வரவாகுக. உமது சிவபூஜை
மங்களமாய் நடைபெற்று வருகின்றதா? பிரஜைகள் பால்
உமது கடமையைச்சரிவர நிறைவேற்றுகின்றீரா? உமது
புத்திர தாராதிகள் க்ஷேமமாய்வாழ்ந்து வருகின்றனரா?
அரசாங்க ஊழியர்கள் உம்முடைய ஆணையைச் சிர
மேற்றுங்கி ஸன்மார்க்கயுக்தராய் ஊழியம் புரிகின்ற
னரா? சத்ருக்களை ஸம்ஹரிக்கத்தக்க ஆற்றல் உடைய ஓ!
பகீரதனே! உமது ராஜ்யமும், பொக்கிஷமும், தனதான்
யமும், ஸமிருத்தியாய் இருக்கின்றனவா? உம்முடைய
மித்திரர்கள் அனைவரும் க்ஷேமமாய் இருக்கின்றனர்
களா? என்றிவ்வாறு யோக க்ஷேமங்களை எல்லாம் விசா
ரித்த பிறகு அரசனும் மறுமொழி கூறியதாவது, அடுத்
தவரின் இடரைத்தீர்ப்பதே காப்பெனக் கொண்டிருக்
கும் ஓ! மகா விரதரே! எல்லோரும் க்ஷேமமாயிருக்கின்
றோம். தேவரீர் எமக்குக் குலகுருவா யிருக்கையில்

இடுக்கண் எவ்வாறு நேரிடக்கூடும்? ஓ! பிரம்ம
ருஷிகளுள் சிறந்தவரே! யான் இக்ஷ்வாகு அர
சர்களின் வம்சத்திற்றோன்றி தங்களது கிருபை
யால் தன்யனாயிருக்கிறேன். தேவரீரது அருள் இருந்
தால் எனக்கு யாதுகுறை? என்று உரைத்து பகீ
ரதரும் மௌனமாயிருந்தார். அரசரின் அன்பு மொழி
களைக்கேட்ட வஸிஷ்டரும் மிகக் களிகூர்ந்து ஓ!
அரசனே! நீர் யாதுகாரணம்பற்றி இவ்விடம் வரலானீர்.
அதைத் தெளிவாய்ச் சொல்வீராக? நீர் ஒன்றையும்
மறைக்காமல் உமதுமனதில் இருப்பதைகூசாமல் கூறக்
கடவீர் என்றதற்கு அரசனும் பதில் கூறியதாவது,
சுவாமின்! நான் எதைத் தங்களிடமிருந்து அறிய ஆவ
லுடன் வந்தேனோ அதை மறைப்பதில் எனக்கு யாது
பயன்? என் மனதில் உள்ள எண்ணங்களை யெல்லாம்
உள்ளவாறு வெளியிடுகிறேன். திருவுளங்கொண்டு
கேட்க வேண்டுகிறேன். யான் முன்னொருக்கால்
புண்ய க்ஷேத்திரங்களையும் தீர்த்தங்களையும் பார்க்க
விருப்பங்கொண்டு இம்மேதினி யெங்கும் பரிவாரங்க
ளுடன் சுற்றிப்பார்த்தேன். அனேக புண்ய தீர்த்தங்
களையும் தேவாலயங்களையும் தரிசித்து வருங்கால் ஓர்
நாள் ஸந்தியா காலத்தில் காசிநகரத்தை யடைந்
தேன். அப்போது ஸந்தியாகால மாதலால் ஸைன்னி
யங்களையெல்லாம் அந்த கங்காநதிக் கரையிலே இளைப்
பாறச்செய்து ஸந்திவேளையில் செய்யவேண்டிய கிரி
யைகளை முடித்துக்கொண்டு சுவாமி தரிசனமசெய்யக்
கோயிலுக்குள்சென்று முறைப்படி சுவாமியைத் தரி



சனஞ்செய்துகொண்டு வெளிவருங்கால், அவ்விடத்தில்
அகஸ்தியரைச் சந்திக்க நேரிட்டது. அப்போது நான்
அவரை வணங்கி அவரும் அன்புடன் என்னைப் பார்
த்து சொன்னதாவது, அயோத்யைக்கு அரசனாகிய
ஓ! பகீரதனே! உன் வரவு நல்வரவாகுக. உன்னுடைய
புண்ய விசேஷத்தால் நீ காசி நகரத்தை யடைந்தனை.
அதுமாத்திரமல்லாமல் போகம் மோக்ஷம் ஆகிய இரண்
டையுந்தரவல்ல விசுவநாதரை தரிசனம் புரிந்தனை.
புண்யமில்லாதாருக்கு விசுவநாதரின் சேவை கனவிலுங்
கிடைப்பதரிது. பிரம்மா முதலிய தேவர்கள் எவரது
தரிசனத்தின் பொருட்டு தபம்புரிகின்றனரோ அவர்
உனக்குப் பிரஸன்னமானார். இதனாலேயே கிருதார்த்
தனாய் என்றனர் அகஸ்தியரும். இதற்கு மறு
மொழியாக ஓ! சுவாமின்! தேவரீரைத் தரிசிக்க நேரி
ட்டதனாலேயே நான் தன்யனானேன். புண்யமில்லா
தார்க்கு தேவரீருடைய தரிசனங்கூட கிடைப்பதரிது.
மூவுலகிலும் போற்றுதலையுடைய புண்ணியரே! இவ்
விடத்தில் ஆசிரமம் அமைத்துத் தபம்புரிவதனாலும்
இந்த க்ஷேத்திரத்தைக்காட்டிலும் வேறு உத்தமமான
க்ஷேத்திரம் பூமியின்கண்ணில்லையென்றே எனது
துணிபு என்றேன். இதற்கு அகஸ்தியரும், ஓ! அர
சனே! சொன்னது உண்மையே. காசிக்ஷேத்திரத்திற்கு
இணையான க்ஷேத்திரம் பூமியின்கண்ணில்லைதான்.
ஆனால் ஒன்று உளது. அஃது வால்மீகி மகர்ஷியின்
ஆசிரமம் அமையப்பெற்றதும், அவரால் பூஜிக்கப்பட்
டதுமான முக்கியாசலக்ஷேத்திரம் (பெருமுக்கல்) என்

னும் ஒன்றுதான் காசி க்ஷேத்திரத்தைக் காட்டிலும் மகிமை பொருந்தியது என்றனர் அகஸ்தியர். அப்போது காசியைக் காட்டிலும் எவ்வகையிலும் சிறப்பு வாய்ந்த முக்கியாசலத்தின் பிரபாவத்தை அறிய அவாவுடன் மீண்டும் அவரை வேண்டிக்கொள்ள அவர் கோயிலுக்குள் போகவேண்டுமென்னும் அவசரத்துடன் சொன்னதாவது. ஓ! அரசனே! இப்போது அதை விரிவாய் விளக்குதற்கு போதிகாலம் இல்லையென்பது உனக்குத் தெரிந்தவிஷயமே. ஆதலால் நீ இது சமயம் விநாயகர் முதலிய தேவர்களை வணங்கி அயோத்யைக்குச் சென்று உனது குலகுருவான வஸிஷ்டமகருஷியைக்கேட்டால் முக்கியாசலத்தின் மகிமையை அவர் விரிவாய் உரைப்பார் என்றனர் அகஸ்தியரும். மிக்க மகிழ்ச்சிதரத்தக்க அவரது வார்த்தைகளைக் கேட்டு சந்தோஷத்துடன் அது விஷயமாய் தேவரைப் பார்க்க இச்சன்னிதானத்திற்கு வரலானேன். ஆதலால் ஸர்வமும் உணர்ந்த தாங்கள் முக்கியாசலத்தின் மகிமையைப்பற்றி விளக்கமாய் விளம்பவேண்டும். இதற்கு வஸிஷ்டரும் அருளிச்செய்ததாவது. ஓ! அரசனே! நீர் முக்கியாசல மகிமை விஷயமாய்க் கேட்டதுபற்றி மிகச் சந்தோஷம். உமது கேள்வியை எவ்வளவு மெச்சினாலும் தகும். உலகு உய்வதன்பொருட்டு நீர் அகஸ்தியரைச் சந்தித்து அவர் முக்கியாசலத்தின் பெருமையைச் சூட்சுமமாயும் சுருக்கமாயும் சொன்னார். என்னால் கூடியவரை விரிவாய் விளக்குகின்றேன் சிரத்தையுடன் கேட்பீராக.



சுலோகம்.

*அஸ்தி முக்கியாசலம் நாம க்ஷேத்திரம்*
*த்ரை லோக்ய விஸ்ருதம்.*

மூவுலகிலும் பிரஸித்தமானதும் முக்கியாசலம் எனப் பெயருடையதுமான க்ஷேத்திரம் ஒன்றுளது. இவ்விடத்தில் முக்கியாசலத்தைப்பற்றிச் சிறிது விரிவாய் விளக்குவது அவசியம் ஆதலால் வாசிப்பவர்கள் இங்கு கவனிக்கவேண்டியது முக்கியகடமை. வால்மீகி முனிவரின் ஆசிரமமும், ஸீதாபிராட்டியார் இலவகுசலர்களைப் பிரஸவித்ததும் இம் முக்கியாசலத்தின்கண் அல்ல எனச் சிலர் சொல்லுகின்றனர். ஏனென்றால் வால்மீகி முனிவரது ஆசிரமம் ஒருபோதும் இவ்விடத்தில் இருக்க நியாயமில்லை. அவரது ஆசிரமம் தமஸாநதிக்கரையிற்றான் இருத்தல் வேண்டும். அஃது இம் முக்கியாசலத்திலிருந்து சுமார் ஆயிரம் மைல் தூரமிருக்கலாம். ஸீதாபிராட்டியின் பிரஸவமும் தமஸாநதிதீரத்தில் உள்ள வால்மீகியின் ஆசிரமத்திலே அன்றி பெருமுக்கலில் இருக்க எவ்விதத்தாலும் பொருந்தாது என்று சிலர் வாதிக்கின்றனர். இதைத் தவிர அவரது வாதத்திற்கு வேறு காரணமிருப்பதாய்த் தெரியவரவில்லை. இதற்கு அவரது சரித்திர ஆராய்ச்சிக்குறைவும் நவீன நாகரீகத்தின் மயக்கமேயன்றி வேறு காரணமிருப்பதாகத் தோன்றவில்லை. ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னமேயே வஸிஷ்டர் பகீரதருக்கு உபதேசித்த அக்காலத்திலே இம்மாதிரி சந்தேகம் வரக்கூடுமென்று உணர்ந்தே அதற்கு இட-

மில்லாதபடி அருளியிருக்கின்றார். ஜகத்பிரஸித்தமான முக்கியாசல க்ஷேத்திரத்தைப்பற்றிக் கூறுவதற்குமுன்னே அதன் எல்லையைப்பற்றி வரையறுத்து எவ்வித சந்தேகமுந் தோன்றாவண்ணம் உபதேசித்திருக்கின்றார். அவர் எந்தப் பாஷையில் அதன் எல்லையை வரையறுத்து விளம்பினாரோ அந்தப் பாஷையில் உள்ள அவரது சுலோகத்தை ஈண்டு குறிப்பிடுவது மிகவும் சிறந்ததாகும். அஃது வருமாறு.

### சுலோகம்.

யோஜனே பூர்வ வாராசே: ப்ரதீச்யாம் திசிபூபதே
காஞ்சீ ஸ்ரீமுஷ்ண யோர்மத்யே தண்டகாவன மண்டலே
அஸ்தி முக்கியாசலம் நாம க்ஷேத்திராணாமுத்த மோத்தமம்.

என்று வஸிஷ்டர் பகீரதருக்கு வரையறுத்துக்கூறினர். அதாவது கீழ் சமுத்திரத்திற்கு மேற்கில் சுமார் 10 மைல் தூரத்திலும், காஞ்சிபுரம் ஸ்ரீமுஷ்ணம் ஆகிய இரு புண்ய ஸ்தலங்களுக்கு மத்தியில் உள்ள தண்டக வனத்திற்கு ஸமீபமும், புண்ணியக்ஷேத்திரங்களில் உத்தமோத்தமுமாக முக்கியாசலமானது உளது. காஞ்சிபுரம் ஸ்ரீமுஷ்ணம் ஆகிய இரு புண்ய ஸ்தலங்களுக்கு மத்தியில் தண்டகவனமென்பது திண்டிவனமேயன்றி வேறு தண்டகவனங் கிடையாது. கீழ் சமுத்திரத்திற்கு மேற்கில் பத்துமைல் தூரத்தில் உள்ளமலை பெருமுக்கல் மலையேயன்றி வேறுமலையும் கிடையாது. திண்டிவனத்திற்கு ஸமீபமாயும் கீழ்ச்சமுத்திரத்திற்கு பத்துமைல் தூரமுள்ள மலை இப்பெருமுக்கல் மலை



அல்லவென்று யாராயினும் கூறமுடியுமோ? வால்மீகி தபம் புரிந்ததும் ஸீதாபிராட்டி லவகுசலர்களைப் பிரஸவித்த மலையென்றும் ஸஞ்சீவி மலையென்றும் மற்றும் பல சிறப்புவாய்ந்த வேறு யாதாயினும் மலை இருப்பதென்று யாரே கூறவல்லர்? ஆதலால் முக்கியாசல க்ஷேத்திரம் இந்த எல்லைக்கு உட்பட்டிருக்கிறதென்று வஸிஷ்டர் வரையறுத்துக் கூறியிருப்பது முற்றும் சரியே. இவ்வளவு தெளிவாய் அக்காலத்தில் அவர் கூறியிராவிடில் முக்கியாசலத்தைப்பற்றி யாரும் நம்பவே மாட்டார்கள். ஆதலால் அத்தகைய முக்கியாசலத்தின் மகிமையைப்பற்றி வஸிஷ்டர் பகீரதருக்கு மீண்டும் சொல்லுவதாவது, அம்முக்கியாசலமானது பலவித விருக்ஷங்கள் செடி கொடிகள் முதலியவைகளோடு கூடியது. அவற்றில் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்க மரங்களாவன:—மா, புன்னை, பெலா மலை மல்லிகை, வெட்பாலை, வெண்சம்பகம் திராக்ஷிச்செடி, கரும்பு, வாழை, தென்னை, நாவல், அசோகம், எலுமிச்சை, பனை, பச்சிலை மரம், வேம்பு, பாக்கு மரம், விளாமரம், எள்ளு, துளஸீ, மருதை, குருக்குத்தி, முல்லை, தாழம், முதலியவைகளாம். இவைகள் ஸர்வகாலமும் பூ, காய், கனி, இவைகளை தரத்தக்கவை. இத்தகைய மரங்களாலும் மிகவும் சோபிதமானது. அது மாத்திரமல்ல, பலவித மிருகங்களாலும், பக்ஷிகளாலும் நிறையப்பெற்றது. இத்தகைய மலை இப்போது எந்நிலைமையில் இருக்கிறதென்று வாசகர் உணரவேண்டியது மிக அவசியம். ஆதலால் அதைச் சற்று விளக்கு

வாம். வஸிஸ்டர் பகீரதனுக்கு உபதேசித்த காலையில் இப்பெருமுக்கல்மலை எவ்வளவு பெரிய வனமாயிருந்ததென்று வஸிஷ்டரின் வாக்கியமே போதியசான்று.

(சுமார் அறுபது அல்லது நூறு வர்ஷங்களுக்கு முன்னால்கூட எவ்வளவு பெரிய மரங்களடர்ந்தகாடென்றும் சிறப்பு வாய்ந்ததென்றும் தற்போது உள்ள வயோதிகர் வாய்படக்கேட்டு உணரலாம். அரை நூற்றாண்டிற்கு முன்னாலே அப்படி இருந்ததென்றால் வஸிஷ்டர் உபதேசித்த அக்காலையில் இப்பிராந்திய முழுவதும் பெரிய வனமாயிருக்க வேண்டுமன்றோ! அரசாங்க மாற்றத்தாலும் ஜனப் பெருக்கத்தாலும் காடுகள் அழிந்து நாடாயின. ஆதலால் தற்கால திருஷ்டியில் பார்ப்பவருக்கு மரங்கள் மருந்திற்கு போலும் அகப்படாத இக்கல் மலை அவ்வளவு காடுகளால் நிறையப்பெற்றதோ என ஐயப்படலாம். இப்போதுங்கூட ஓர் பத்து வர்ஷகாலம் வனத்தை அழிக்கக்கூடியவைகளான ஆடுமாடுகளை விடாமல் கட்டுக்குட்படுத்தினால் பெரியகாடாய் மாறிவிடும். இம்மலை அரசாங்கத்தாரின் பார்வைக்கு உட்படுத்தக்கூடிய அவ்வளவு விஸ்தீர்ணம் உள்ளதாயும் இல்லை. கிராம வாஸிகள் மனம் வைத்தால் பதினைந்து ஆண்டுக்குள் பூர்வ ஸ்திதிக்கு கொண்டுவரக்கூடும். அப்போது இம்மலையில் இல்லாத திவ்ய ஓஷதிகளேயிரா. இன்றைக்கும் அனேக ரஸவாதிகளும், வைதியர்களும் மந்திரவாதிகளும் மகான்களும் அடிக்கடி வந்தவண்ணமாயிருக்கிறார்கள். எத்தனையோ நூற்றுக் கணக்கான மைலுக்கு அப்பால் இருந்து கள்ளிப்பாலுக்கும் தேடி இவ்



விடம் வருகின்றனர்.) இது நிற்க, வஸிஷ்டர் மீண்டும் கூறுவதாவது. ஓ! பகிரதனே! ரகஸ்யமும் அற்புதமான ஓர் விஷயத்தைக் கூறுகிறேன். அதைக் கேட்பீராக. அது என்னவென்றால், அம்முக்கியாசலத்தின்கண் ஓர் திவ்ய மூலிகை உளது. அஃது பிராணிகளுக்கு ஜீவன ஔஷதமானது. அதன் பெயர் பிசுமந்தம் என வழங்கப்படுகிறது. இஃது பாக்கியமில்லாதவர்களின் கண்களுக்கு புலப்படக்கூடியதல்ல. ஆதலால் அஃது அவ்வளவு சிறப்புவாய்ந்த ஔஷதம் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால் அதன் முக்கியதை யறிய விருப்பம் உண்டாவது சகஜம். பிசுமந்தம் என்றால் என்னவென்று யோசித்தால் தமிழ், ஸம்ஸ்கிருத அகராதிகளில் வேம்பு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேம்பு ஜீவன ஔஷதமென்று வரையத்தக்க அவ்வளவு முக்கியமானதென்று ஸாதாரணமாகத் தோன்றக்கூடியதல்ல. பிசுமந்தம் என்பதற்கு வேறு யாதாயினும் பொருள் இருக்கின்றதாவென்றுந் தெரியவரவில்லை. பிசுமந்தம் என்பதன் உண்மைப்பொருள் பண்டிதர்களுக்கு தெரியுமாயின் அவர்களிடத்திலிருந்து வாசகர்கள் அவசியம் உணரத்தக்கது. ஓ! பகீரதனே! இன்னமும் அம்மலையில் ஸஞ்சீவி மருந்தும் உளது. அதன் மகிமை விரித்து கூறத் தேவையில்லை. ஏனெனில் இஃது உலகப் பிரஸித்தமானது. ஓ! நராதிபனே! இம்முக்கியாசலத்தின்கண் எது இல்லையோ அது மூவுலகிலுமில்லை. மூவுலகிலும் எது இல்லையோ அது இதன்கண் உளது. இம்மட்டோ, இன்னமும் சொல்கிறேன் கேட்பாயாக.

தற்போது மலையுருவமாய் அமைந்திருக்கும் ஸாக்ஷாத் பரமசிவனை இயற்கைதேவி ஸதாகாலமும் மரம், செடி முதலியனவாய் நின்று மிக மனோகரமும், சுகந்தமுமான புஷ்பங்களால் அர்ச்சனை செய்வதுபோல பூமாரி பொழிந்த வண்ணமாய் இருக்கின்றாள். சந்திரமௌளீசுவரரான உமாகாந்தனுக்கு இம்மலை வாஸஸ்தானமாயும் இருப்பதால் அவரது அடியார்களும் இதைச் சரணமாய் அடைந்தனர். கைலாஸகிரி போன்று ஸித்தர், சாரணர், கின்னரர், கந்தர், வித்யாதரர், அப்ஸரர்கள், தேவர்கள், முனிகள் முதலியவர்களின் ஆசிரமங்களாலும் மற்றும் தென்கைலாஸமோ என ஐயுறத்தக்க அவ்வளவு ரமணீயமாயிருக்கின்றது. இத்துணைச் சிறப்புவாய்ந்த முக்கியாசலத்தை நினைக்கிறவர்களும், தரிசிப்பவர்களும் வாஸஞ்செய்வோரும் புனராவர்த்தி ரகிதமான மோக்ஷத்தை அடைவர் என்பதில் தடையில்லை. ஓ! பகீரத மன்னனே! இதைப்பற்றி அதிகமாய்க் கூறுவது எதற்கு பூமியின்கண்ணுள்ள பரமாணுக்கள் எவ்வளவு என்று எண்ணமுடியுமானாலும், ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் எத்தனையென்று எண்ணிற்கு உட்படுத்த முடியுமானாலும் முடியலாம். ஆனால் ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் இம்முக்கியாசலத்தின் பெருமை கூறிமுடியாது என்று வஸிஷ்டர் பகீரதருக்கு உபதேசித்ததை சூதமுனிவர் சௌனகாதிகளுக்கு விளக்கி விரித்தார். சுபம்.

**இரண்டாவது அத்தியாயம்.**

முற்றிற்று.

## மூன்றாவது அத்தியாயம்.

### தேவராவண யுத்தமும், அம்மன் முக்கியாசலத்திற்கு எழுந்தருளலும்.

உலகப் பிரஸித்தமான முக்கியாசலத்தின்கண்
கைலாஸநாதனாகிய மகாதேவர் யாதுகாரணம்பற்றி
வெள்ளியங்கிரியைவிட்டு முக்கியாசலத்திற்கு எழுந்
தருளினாரென்று அறிய ஆசையுள்ளவனாயிருக்கிறேன்.
தேவரீர் தயவுசெய்து சொல்லியருளினால் என் மனோ
ரதம் ஒருவாறு பூர்த்தியாகுமென்று நினைக்கின்றேன்
என்றான் ராஜன் பகீரதன். அப்போது பிரம்மருஷி
வஸிஷ்டரும் அரசர்பால் அன்புகொண்டு அருளுகிறார்.
ஓ! மகாராஜனே! உலகநாயகரானஉமாகாந்தர் முக்
கியாசலத்தைத தமது வாஸஸ்தானமாக ஆக்கியதின்
வரலாற்றைச் சாற்றுகிறேன் கேட்பாயாக.

முன்னொருக்கால் இராக்ஷஸ ராஜனாகிய ராவ
ணன் தனது ராஜதானியாகிய இலங்கா பட்டணத்தில்
வாஸஞ்செய்து வருங்காலத்தில் அவனுக்கு ஓர் எண்
ணம் உதயமாயிற்று. அஃது என்னவென்றால் யான்
வடிவத்தில் காலனுக்கும், பலத்தில் வாயுவுக்கும் ஒப்
பானவன். அவை மாத்திரமல்ல, தேவர்களுக்கும் மனி
தர்களுக்கும் நான்கு கரங்களுக்குமேல் இல்லை.
எனக்கு இருபது கைகளும், பத்து சிரங்களும் உள.
இதிலும் நான் மற்ற தேவர்களைவிட சிறந்தவனாயிருக்
கிறேன். இப்படி இருக்கையில் யான் இலங்கைக்குப்

அரக்கர்களுக்கும் மாத்திரம் அதிபனுயிருப்பது எனக்
கே அவமானமாயிருக்கிறது. ஆதலால் இந்த பரிகாஸ
யோக்கியமான நிலையினின்று என்னையும் எனது வீரம்
நிரம்பிய வம்சத்தினையும் காப்பாற்றுவதே எனது
முதற்கடமை. இதற்கு தேவர்களுடன் போர்புரிவது
அல்லாமல் இந்நிலமையைச் சாதிக்க வேறு உபா
யம் இருப்பதாய்த் தோன்றவில்லை எனத் தனக்குள்ளே
எண்ணி தேவர்களுடன் யுத்தஞ்செய்ய ஆயத்தமா
னன். உடனே அவ்வரக்கர்கோன் வேண்டிய யுத்த
ஸாமக்கிரிகளோடும், ஸைன்னியங்களுடனும் இலங்
காபுரியிலிருந்து புறப்பட்டு வான்வுலகம் சென்று
வானோர்களைச் சண்டைக்கு அழைத்தான். காரணமில்
லாமலும், முன்னறிவிப்பு இன்றியும் இச்சமயம் யார்
நம்மை சண்டைக்கு அழைப்பதென்று அமரர்க்கு
அதிபனும் தேவேந்திரனும், மற்றவர்களும் வியப்பும்,
திகைப்பும் அடைந்தனர் மண்ணாசை முன்னிட்டோ
அல்லது ஏகாதிபத்ய மோகத்தாலோ தர்மத்
திற்கு புறம்பான முறைகளில் யாராயினும் போருக்
கழைத்தால் எவ்வளவு நீதிசெலுத்தும் மன்னனாயினும்
உடனே போருக்கு முற்படுவதுதான் அரசதர்மம்,
இன்றேல் ராஜ்யம் இழக்கப்பட்டு அதன் மூலம் பிர
ஜைகளுக்கு தீமையும் இழைத்தவனாவன். அது மாத்
திரமல்ல ராஜதர்மத்திற்கு முற்றும் மாறுபட்ட
போரில் புறங்காட்டல், என்னும் அபக்யாதியும்
அகலாது. ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. அக்ரமமா
யும், அகாரணமாயும் பிறருக்கு எவ்வளவு ஹிம்ஸை



செய்தாயினும் தான் மேன்மையடையவேண்டி நாட்
டைப் பிடிக்கும் ஆசையோடு ஒழுகும் அரசர் எப்போ
தும் வீழ்ச்சியடையவர் என்பது திண்ணம். நிற்க, க்ஷத்
திரியர் தர்மப்படி இந்திரனும் அவரது பரிவாரங்களு
டன் இராவணனோடு போர்புரியப் புறப்படலாயினர்.
அப்போது தேவர்களுக்கும் அரக்கர்களுக்கும் கடும்
போர் நடந்தது. இருதரப்பினரும் ஜயம் அடைய
வேண்டுமென்னும் விருப்பத்துடன் சாமர்த்தியமா
யும், துரிதமாயும், ஆவேசத்துடனும் பலவித ஆயுதங்க
ளால் பல்வேறு வகையில் அமர்புரிந்தனர் வானவ
ரும், மாநிலத்தவரும் இதன் முடிவை யறிய எதிர்
பார்த்த வண்ணமாயிருந்தனர். கடைசியில் "ஸத்யம்"
ஜயமடையும் என்றபடி ராவணனது கர்வமான எண்
ணத்திற்கு முற்றும் விபரீதமாய் யுத்தம் முடிவுற்றது.
தேவராஜனுடைய வஜ்ராயுதத்தால் ராவணனும் அவ
னது சேனைகளும் முறியடிக்கப் பட்டனர். இது
கண்டு களித்த தேவரும், நரர்களும் பூமாரி பெய்தனர்.
அரக்கரை முறியடித்த இந்திரன் முதலிய தேவர்க
ளும் ஜயகோஷத்துடன் தேவலோகத்திற்கும், இரா
வணனும் போர்க்களத்தில் கூற்றவனுக்கு இரையான
வர்போக மீதியுள்ளவர்களுடன் இலங்கைக்குத் திரும்
பினன். தலைதப்பினதே தம்பிரான் புண்யமென்று
இலங்காபுரிக்கு சென்ற தசகண்டனின் மனம் சாந்தி
யடையவில்லை, ஸதாகவலையிலும், ஓயாச் சிந்தையிலும்
ஆழ்ந்து பின்வருமாறு சிந்தைகொண்டான். நான்
ராக்ஷஸர்கட்கு அரசன் என்றும், மிகப் பராக்ரமம்

பொருந்தியவனென்றும், தேவர்களை யெல்லாம் ஒரு நொடிப்பொழுதில் கீழடக்கி தேவலோகத்தையும் தமது ஆளுகைக்கு உட்படுத்தலாமென்றும் மற்றும் என்னென்னவோ கனவு கண்டேன். அதற்காக என்னால் செய்யப்பட்ட முயற்சியெல்லாம் விழலுக்கிரைத்த நீராமுடிந்தது. எனது குலத்தவரது பராக்ரமத்தை நினைத்து பார்க்கில் நான் உயிருடன் இருப்பது பூமிக்கு பாரமுமல்லாமல் மற்றவர்களின் நிந்தனைக்கும் ஆளாவேன்.

ஆதலால் என்னுயிரை எப்படியாயினும் மாய்ப்பதே உத்தமம். அதற்கு விஷபானம் பண்ணலாமா! அல்லது யாது செய்யலாம். ஆனால் இறப்பது கையாலாகாத்தன்மையால் இறந்தான் என்று யாவரும் பரிஹஸிப்பர். ஆதலால் அபாயமற்ற உபாயம் ஒன்று எனக்கு இப்போது தோன்றுகிறது எப்பாடுபட்டாயினும் கடுந்தவஞ்செய்து பரமசிவனைப் பிரத்யக்ஷப்படுத்தி அவ்விடத்தினின்றும், தேவ தானவ, கந்தர்வ, யக்ஷவித்யாதரர் முதலியவர்களால் யான் என்றைக்கும் கொல்லக்கூடாதவனாதல் வேண்டும், என்னும் வரமும், அதற்குவேண்டிய ஆயுதங்களும் அவரிடத்திலிருந்து பெறவேண்டும். இவ்வாறு மனதை நிச்சயப்படுத்திக் கொண்டு ஸந்தோஷத்துடன் உலககதி நின்றுவிடத் தக்க விதத்தில் கடுந்தபம்பண்ண முற்பட்டான். இப்படி அனேககாலம் தீவிரமாய் தபசுபுரிந்தும் பரமசிவன் பிரத்யக்ஷமாகாததுகண்டு யாகம் வளர்த்தி



தமது சிரசுகளை ஒவ்வொன்றாக அறுத்து ஹோமஞ் செய்யலானான். அறுத்து ஹோமஞ் செய்யப்பட்ட சிரசுகள் ஒவ்வொன்றாக மறுபடியும் முளைத்தன. இவ்வாறு தொண்ணூற்று ஒன்பது தடவைகளாய் அவனது ஒன்பது சிரசுகளையும் அறுத்தறுத்து ஹோமஞ் செய்தவண்ணமாயிருந்தான். அப்போதும் பரமசிவன் பிரத்யக்ஷமாகாதது கண்டு பொறுக்கொணாக் கோபங் கொண்டு தமது பத்தாவது சிரஸையும் அறுக்கக் கத்தியை வீசினான். இத்தருணம் ஸர்வாந்தர்யாமியான பகவான் பரமசிவன் ப்ரத்யக்ஷப்பட்டு அவனது பக்திப் பிரபாவத்தையும்,தீவிர வைராக்யத்தையுங்கண்டு களிப்புற்று விருஷபாரூடராய் அவன்முன் தோன்றினார். அப்போது இராவணன் தன் முன்னிற்கும் பரமசிவனைக்கண்டு களித்து தண்டனிட்டு அடிபணிந்து கை கூப்பி பயபக்தியுடன் நின்றான். அதைக்கண்ட சுவாமியும் பின்வருமாறு சொல்லியருளினர். தசகண்டனே! உனது ஸ்தோத்திரத்தால் யான் மிகக் களிப்படைந்தேன். உனக்கு மங்களம் உண்டாகக்கடவது. உனக்குத் தேவையான வரங்களை என்னிடத்திலிருந்து வேண்டிக் கொள்ளக்கடவாய். பரமசிவனது வார்த்தைகளைக்கேட்ட இராவணனும் மகிழ்ச்சியுடன் இரு கரங்கூப்பி வேண்டுவதாவது, பக்த பராதீனனான ஓ! சுவாமின்! தேவரீரது அமிருதத்திற்கு ஒப்பான வசனங்களால் நான் அடங்காத ஆனந்த மடைந்தேன். தே[illegible], யக்ஷர், கின்னரர் முதலியவர்களால் யான் எப்போதும் இறவாதவனாதல் வேண்டும்.

தேவர்களால் எனக்கு அபாயம் இன்றேல் மனிதரைப் பற்றிக் கருதவே வேண்டியதில்லை. இதுதான் எனது பிரதானமான கோரிக்கை. தேவரீர் என்பால் திருவுளங்கொண்டு இவ்வரத்தை தந்தருளல் வேண்டும் என்றனன் இராவணன். அப்போது பரமசிவன் உன்னால் கேட்கப்பட்ட வரம் உமக்கு சித்தியாகக் கடவது. இன்னும் வேறு வரம் யாதாயினும் வேண்டின் அதையும் கேட்கக்கடவாய்? யான் ஸந்தோஷத்துடன் பிரசன்னமாயிருக்கையில் பிராணிகளுக்கு ஸாத்யமாகாதது இம்மேதினியின் கண் உளதோ? என்றதும் இராவணன், ஓ! சுவாமின்! தேவரீரது அனுக்கிரகத்தால் எனக்கு ஓர் ஆகாச விமானமும் எப்போதும் குறையாத அம்புராத்தூணியும், நாசமாகாத வில்லும், நான் எப்போது வேண்டுமென்று விரும்பி ஹோமஞ் செய்வேனோ, அந்த ஹோமகுண்டத்திலிருந்து அவையெல்லாம் அப்போதே தோன்ற வேண்டும். இதுதான் நான் இரண்டாவதாகக் கேட்கும் வரம் என்றான். அப்போது பகவானும் ஓ! தசகண்டனே! எனது அனுக்கிர விசேஷத்தால் உன்னால் வேண்டப்பட்ட இவையாவும் உண்டாகக் கடவது. ஆனால் ஒன்றுமட்டும் நீ ஞாபகத்தில் வைக்கக்கடமைப் பட்டிருக்கின்றாய். அது என்னவென்றால் உன்னால் செய்யப்படும் ஹோம[illegible]னது விக்கினமில்லாமல் நிறைவேறுமாயின் [illegible] வேண்டிய யாவும் சித்திக்கும் [illegible]மாத்திரமல்லாமல், சண[illegible] [illegible]யும் ஜயிப்பாய். ஆனால் யாகமத்தியில் அத



ற்கு விக்னம் நேரிட்டால் அப்போது உனது அந்திய காலம் என்று நீ உணரவேண்டும். இதுதான் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது. உன்னுடைய விடாமுயற்சியும், பக்தியும் மெச்சத்தக்கவை, உன்னால் செய்யப்பட்ட ஸ்தோத்திரம் அதியற்புதமானது. இதை யார் படித்தாலும் கேட்டாலும் அவர்களுக்கு சர்வகார்ய சித்தியும் உண்டாகும், என மொழிந்து அஷ்டமூர்த்தியான பரமசிவன் அவ்விடத்திலேயே மறைந்தார். இராவணனும் அதிக சந்தோஷத்தை அடைந்தவனாய் இதுதான் சமயமென்று கருதி உடனே தேவர்களுடன் சண்டைக்குப் புறப்பட்டான். சிவனிடத்திலிருந்து, தேவர்களாலும் மரணமடையக்கூடாத வரத்தையும் ஆயுதத்தையும் பெற்ற இராவணனுக்குத் தேவர்களை ஒரு கணத்தில் தோற்கடிப்பது பேராச்சர்யமல்ல. அது தேவர்களுக்கும் தெரியாததல்ல. ஆதலால் தேவர்கள் முன்போல அவன் விஷயத்தில் அவ்வளவு அலக்ஷியபுத்தி காட்ட முடியவில்லை. இந்திரனுக்கும் தலைவரான ஸர்வேசுவரரிடத்திலிருந்து இராவணன் வரத்தைப் பெற்றமையால் அதைமீறி தேவர்களுக்கும் என்னசெய்ய முடியும்? ஆதலால் ஒரு கணத்தில் தேவர்கள் எதிர்பார்த்தபடி அரக்கர்கோனான ராவணனால் முறியடிக்கப்பட்டவர்களாய்த் தேவலோகத்தையும்விட்டு துரத்தப்பட்டனர். இத்தருணத்தில் இராவணன் வானுலகத்தை வசப்படுத்திக் கொண்டதும் அல்லாமல், இந்திரனுடைய புட்பகவிமானத்தையும், அளவிறந்த இரத்தினங்களையும்

நினைத்ததையளிக்கும் கற்பக விருக்ஷத்தையும் மற்றும்
முக்கியமான எல்லாவற்றையும் அபகரித்துக்கொண்
டான். தேவர்கள் முறியடிக்கப்பட்ட அடங்கா மகிழ்
ச்சியுடன் இலங்காபுரிக்கு ஏகி ஸுகமாய் காலங்கழி
த்து வந்தான். இப்படிப் பல்லாண்டு கொடுங்கோல்
செலுத்திவரும் காலத்தில் 'விநாசகாலே விபரீதபுத்தி'
என்றவாறு அவனுடைய எல்லையற்ற இறுமாப்பு அவ
னைச் சும்மாயிருக்கவிடவில்லை அவனது வரம்புமீறிய
கர்வத்திற்குக் காரணமாயிருந்த வரத்தைக்கொண்டு
அஃது அளித்தவரையே பரிசோதித்துப் பார்க்க எதிர்
நோக்கி யிருந்தான். இப்படி யிருக்கையில் ஒரு நாள்
தேவர்களைக்கீழடக்கிய ராக்ஷஸாதிபன் கைலாஸத்தை
யும் தமது அதிகார எல்லைக்கு உட்படுத்த மோகங்கொ
ண்டு கைலாயங்கிரியை நோக்கிச்சென்று தனதுகரங்க
ளால் அதை எடுத்து அம்மானை ஆடினன். ஸகல அண்
டங்களுக்கும் ஆதாரபூதமாயும் ஆணிவேரும் போன்ற
கைலாஸாசலம் ஆட்டப்பட்டதால் எல்லா கோளங்க
ளும் தன்னிலைவிட்டு ஆட ஆரம்பித்தன. அதன் கார
ணமாய்ச் சமுத்திரங்கள் கரைகடந்து பெருகவும், பர்வ
தங்கள் பெயரவும், தேவர் யக்ஷர், கின்னரர், கந்தர்வர்,
பூதகணங்கள் என்று இவைமாத்திரமல்லாமல் ஸர்வ
ஜீவராசிகளும் பயப்பட்டு ஓட ஆரம்பித்தன. கைலாஸ
கிரி கிடு, கிடுவென்று குலுங்க ஆரம்பிக்கவே ஸர்வ
ஜகன் மாதாவாய பார்வதியும் நடுநடுங்கிப் பயத்துடன்
பரமசிவனை யணைத்துக் கட்டிக்கொண்டாள். அப்
போது பகவானும் அதன் காரணத்தை உணர்ந்து



பயப்படாதே என்று சிரித்த முகத்துடன் அம்மனைத்
தேற்றினர்.

பரமசிவனல் சாந்தப்படுத்தப்பட்ட அம்மையும்
பயத்தினின்றும் ஒருவாறு நீங்கிப் பின்வருமாறு சுவா
மியை வினவினள். ஓ! சுவாமின்! நமது இருப்பிடமான
இவ்வெள்ளியங்கிரியும் மற்ற அண்டங்களும் அதில்
வாஸஞ்செய்யும் ஜீவராசிகளும் நடுநடுங்குவதற்கு யாது
காரணம்? எனக்கும் அதனல் ஏற்பட்ட அச்சம் இப்
போதும் என் மனதைவிட்டு அகலவில்லை. ஆதலால்
இதன் உண்மையை எனக்குப் புகலல்வேண்டும் என்று
கூறியதும் பகவான் ஓ! காத்தியாயனீ! என்னிடத்
திலிருந்து வரத்தைப்பெற்ற இராவணன் என்னும்
பெயருடைய இராக்ஷஸன் கர்வங்கொண்டு அமரில்
அமரரைத் தோற்கடித்து இப்போது இக்கைலாஸகிரி
யையும் தனது கரங்களால் பெயர்த்து எடுத்ததனல்
இது ஆடப்பட்டது. இதனலே தேவர்களும் நரர்க
ளும் மற்ற ஜீவராசிகளும் பயப்பட்டு ஓடுகிறார்கள்.
நிஷ்காரணமாய் ஸர்வ ஜீவராசிகளுக்கும் பயம் உண்
டாக அவன் நடந்து கொண்டதைப்பற்றி யார்தான்
வருந்தாமலிருக்க முடியும்? அந்த ராக்ஷஸனுடைய
கொடியசெய்கைக்கு ஸர்வ ஜீவர்களும் அவரில் முக்கிய
மாய்த் தேவர்கள்,ருஷிகள், யோகிகள்,நரர்கள் முதலிய
வர்களும் உள்ளானமையைப்பற்றி நானும் பரிதபிக்கி
றேன் என்றனர் சுவாமியும். அம்மன் இதைக் கேட்டது
தான் தாமதம். உடனே அம்மைக்கு இராவணனும்,

உலகமும் ஒரு கணத்தில் சாம்பராய் போகத்தக்க அவ்
வளவு கோபக்கனல் எழும்பியது. கண்கள் சிவந்தன.
உதடுகள் துடித்தன. இதற்குள் நந்திதேவர் பொருக்க
முடியாத கோபத்தைக் கொண்டு சீக்கிரத்திலே
இராவணன் அவன் வம்சத்தாருடன் அழியக்
கடவன், என்று அம்மன் சபிப்பதற்குள் சாபம்
கொடுத்துவிட்டார். நந்தி தேவரால் அவன் சபிக்
கப்பட்டும் ஜகன் மாதாவான அம்மனுக்குக் கோ
பம் சிறிதளவும் தணியவில்லை. பார்வதி இராவண
னிடத்தில் அடங்காக் கோபங்கொண்டிருப்பதை உண
ர்ந்த சுவாமியும் 'நான் கொடுத்த வரத்தினால் இராவ
ணன் அறியாமையால் இப்படிச் செய்தானேயன்றி
வேறில்லை. ஆதலால் அவன்பால்எவ்வளவு குற்றமிருந்த
போதிலும் பொறுத்துக்கொள்ள வேண்டியது நம் கட
மையாகும். நந்திதேவரது சாபத்தாலேஅவனது அக
ங்காரம் அடக்கப்பட்டது. நம்மிடத்திலிருந்து வரத்தை
ப்பெற்றுக் கொண்டவனாதலால் அவனுக்கு அளித்த
இத்தண்டனையேபோதுமானது. ஆதலால் அச்சிறுவன்
பால் ஏற்பட்ட கோபத்தைப் பொறுத்து அவனை மன்
னிப்பதே நலம் என்று எவ்வளவோ சொல்லியும் அம்ம
னுடைய கோபம் கடுகளவும் நிவர்த்தியாகவில்லை தான்
ஈன்றெடுத்த தமது குழந்தைகளாகிய ஜீவர்களைநிஷ்
காரணமாய் அல்லலுக்கு உட்படுத்தியவனை எப்படி
மன்னிக்க முடியும்? பரமசிவனாலும் பலதரம் வேண்டப்
பட்டும் பொறுக்கொணாக் கோபத்தோடு கைலாஸபர்
வதத்தைவிட்டு அம்மன் முக்கியாசல க்ஷேத்திரத்தின்



கண் எழுந்தருளி கடுந்தபம்புரிய முற்பட்டனர். அப்
போது இம்முக்கியாசலம் எந்நிலையில் இருந்ததெனில்
எப்போதும் பெரிய மகாத்மாக்களான தாபஸர்களும்,
த்ரிகால தர்சிகளான மகருஷிகளாலும் மற்றும் பிரசோ
பிதமாயிருந்தது. பெரிய அடர்ந்த காடு அமைந்த இம்
முக்கியாசலத்தின்கண் ஜகதீசுவரி தபம்புரிய வந்ததை
யறிந்த பக்தகோடிகளும் ருஷிகணங்களும் அட
ங்கா மகிழ்ச்சியுடன் அம்மனைத் தரிசித்து தபஸிற்கு
விக்னமில்லாமல் அதற்கு வேண்டிய உபகரணங்க
ளைக் காலாகாலமறிந்து உபகரித்து அம்மன் மகிழ்வ
டையும்படி செய்தனர். அம்மனும் தான் மனதிற்
கொண்ட எண்ணத்திற்கு சிறிதும் பங்கமில்லாமல்
ஸதா தபோநிஷ்டையில் ஆழ்ந்து சுகித்திருக்குங்
கால் கைலாஸநாதரும் பூதகணங்களுடன் அம்
மனைப்பார்க்க இம்முக்கியாசலத்தின்கண் எழுந்த
ருளினார். ஸ்ரீ நீலகண்டாசலமென்று மறுபெயரு
டைய இம்முக்கியாசலத்தின்கண் பரமசிவன் எழுந்
தருளியிருப்பதை யறிந்த பார்வதியும் களிப்புடன்
சுவாமியைத் தரிசிக்கலாயினர். அப்போது சுவாமியும்
அம்மனுடைய; பார்வையில் மகா தேஜஸ்வரூபியாய்
விளங்கினார். இத்தகைய திவ்ய தேஜசு பொருந்திய
கைலாஸநாதரை மிகப் பயபக்தியுடன் கைகூப்பி
வணங்கி பின்வருமாறு ஸ்தோத்திரஞ்செய்யத் தொ
டங்கினர். ஓ! சுவாமின்! பிரபஞ்ச ஸ்ருஷ்டியின்பொ
ருட்டு பிரம்மாவானவர் தங்களுடைய பாத பங்கஜங்
களை உபாஸனைசெய்து தோஷங்கள் எல்லாம் நீங்கி

பரிசுத்தம் அடைந்தும் அந்தப் பாதபத்மங்களின் மகி
மையை அறிந்தாரல்லர். ஸம்ஸார சமுத்திரத்திற்கு
தோணிபோன்ற தங்களுடைய பொன்னடிகளை நான்
வணங்குகின்றேன் பிரபஞ்சச்ருஷ்டிக்குக் கர்த்தாவாய
பிரம்மனே! தங்களது அடிப்போதுகளின் பிரபாவத்
தை உணரவல்லவனுல் வேறு யாவரால் அதன் மகி
மையை உணரமுடியும்? அப்படியாயினும் ஓ! சுவாமின்!
தேவரீரது பிரபாவத்தை அறிய அடியேன் அதிக
ஆவல் உள்ளவளாயிருக்கிறேன். வேதங்களின் முடிவா
னபொருளைப் பிரம்மவித்துகள் முதன் முதல் எப்படி
பிரம்மனிடமிருந்து உணரவிரும்பினரோ, அப்படியே
நானும் பகவத் தத்வத்தை அறிய விரும்புகின்றேன்.
ஆதலால் சுவாமிகள் தயைசெய்து சொல்லவேண்டு
கிறேன். ஏனெனில் தாங்கள் பொதுவாக ஸர்வாந்த
ராத்மாவாயிருந்தும் சிறப்பாகப் பக்தர்களின் ஹிருதய
பத்மத்தை இருப்பிடமாகக் கொண்டவராதலால் எனக்
கும் உபதேசிக்கக் கடமைப்பட்டுள்ளீர்கள்.

பகவத் மகிமை சுலபமாய் அறியத்தக்கதல்லவெ
ன்பதற்கு, ஸமஸ்த தேவர்களும் ஒன்று சேர்ந்தும் அவ
ர்களால் இராவணன் முறியடிக்கப்படச் சாத்தியப்பட
வில்லையென்ற ஒரே ஒரு உதாரணம் போதுமன்றோ?
இப்படி பார்வதியால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டு
முடிந்ததும் பகவான் ப்ரேமபரவசனாய் அம்மனைக்
கடைக்கண் பார்த்து சொல்லுவதாவது. ஓ! தேவி!
உன்னால் ஸ்துதிக்கப்பட்ட எல்லாவற்றையும் கேட்டு



யான் மிகக்களிப்பெய்தினன். உன்னுடைய மனோரதம்
யாவும் எனது அனுக்கிரக விசேஷத்தால் அப்படியே
ஆகக்கடவது. இம்முக்கியாசலத்தின்கண் நானும் உன்
னிடமிருந்து இன்பமடைவேன். நீயும் இம்மலைமீ
திருந்து பூஜைசெய்யக்கடவாய். இராவணனும் கூடிய
சீக்கிரத்தில் பந்துவர்க்கத்துடன் நாசமாவது நிச்சயம்.
ஸாதுக்களை உபத்திரம் செய்பவன் நீண்டகாலம் சுக
மாய் ஜீவித்திருக்க முடியாது. கைலாஸ பர்வதத்தை
எடுத்து ஆட்டியதனால் நந்திதேவரால் காலதண்டத்
திற்கு ஸமானமான பெரிய சாபம் அவனுக்கு கொடுக்
கப்பட்டிருக்கின்றது. அதுமாத்திரமல்ல, விஷ்ணுவான
வர் மானுஷனாய் அவதரித்து சீக்கிரத்திலே அவனை
வதம்பண்ணப்போகிறார். ஆதலால் இச்சமயத்தில் நீ
இவ்விடத்தில் விஜயமானதும் அதற்கு அனுகுண
மாய்த் தானிருக்கின்றது. எப்படியும் அத்துட்டனு
டைய முடிவுகாலம் ஸமீபித்துவிட்டது. ஆதலால் நா
னும் உம்முடன் இவ்விடத்தில் சுகமாய் வசிப்பேன்
என்று உரைத்து அப்பர்வதத்தின்கண்ணே பக்த
வத்ஸலனான பரமசிவன் பார்வதியின் பொருட்டு
தமது நிஜஸ்வரூபத்தை விளக்கிக் காண்பித்தனர். பரா
சக்தியும் அதை உணர்ந்து பக்தியுடன் கைகூப்பி சுவா
மியை வணங்கி விளம்பியதாவது. ஓ! சுவாமின்! இப்பர்
வதத்தில் தேவரீர் எழுந்தருளியிருப்பதாலும், பகவத்
ஸ்வரூபத்தை எனக்கு விளக்கியதாலும் இம்மலை தங்க
ளது ஸ்வரூபத்தைப்பெற்றுளது. ஆதலால் இதன்மீது
அடியேன் இருக்கச் சிறிதும் யோக்யதையுடையவள

ன்று. ஆதலால் நான் இம்மலையின் அடிவாரத்திற்கு
சென்று அங்கிருந்து தங்களைப் பூசை செய்கிறேன்.
தாங்கள் இம்முக்கியாசல க்ஷேத்திரத்திலேயே சுக
மாய் விசிரமிக்கவேண்டுகின்றேன். அப்போது பரமசிவ
னும் அதற்கு மறுமொழியாக ஓ! தேவி! உன்னால்
சொல்லப்பட்டது முற்றும் உண்மையே. இம்முக்கியா
சலமானது எனது வடிவமாய் இருக்கின்றது, இப்பர்வ
வதத்தின்கண் உள்ள எல்லாச்செடி, கொடிகளும், புற்
பூண்டு முதலியவைகளும் எனது ரோமங்களே? அது
மாத்திரமல்ல, எனது ஸ்வரூபமாய் அமையப்பெற்ற
பர்வதங்களுக்கு மூன்றுவித பெயர்கள் உள. அவை
ஆதி, மத்யம், சிரசு என்பவையே. அவைகளுள் முக்
கியமான் ரூபத்தைப்பெற்றது இதுவே யாதலால்
இதற்கு முக்கியாசலமென்னும் பெயர் சித்தித்தது.
இது உண்மைப் பெயரே அன்றி கற்பனையல்ல. சில
பரமருஷிகள் இந்த முக்கியாசலத்தை ஸ்ரீ நீலகண்டா
சலமென்றும் வழங்கி வருகின்றனர். எப்படியாயி
னும் என்னுவடிவமான இம்முக்கியாசல க்ஷேத்திரத்தை
எவன் பக்தியுடன் பூஜை செய்கிறானோ அவன் எல்லா
போகங்களையும் இங்கே அநுபவிப்பதுடன் அந்தியத்
தில் என்னையே அடைவான். அது மாத்திரமல்ல
அதிக பக்தியுடன் இம்முக்கியாசலத்தை யார் ப்ரதக்ஷி
ணம் செய்யினும் அவருடைய எல்லாப் பாபங்களும்
நிவர்த்தியாகும். ஆதலால் இவ்விடத்திலேயே நாமிரு
வரும் வசிப்போமாக. இப்படி அம்மனும், சுவா
மியுமாய் சிலகாலம் வசித்திருக்கையில் அம்மனு



டைய மகத்தான பக்தியையும் சுவாமியை ஸதா பூஜி
ப்பதையும் பார்த்து சுவாமி மனமுருகி களிப்புடன்
அம்மனை நோக்கி ஓ! பார்வதி! உனது பக்திப் பிரபா
வத்தைப் பார்த்து நான் மிக்க சந்தோஷப்படலா
னேன். உனக்கு இஷ்டமான வரத்தை விரும்பினாலும்
அதை நான் உன்பால் உண்மையாய் அநுக்கிரகித்தி
ருக்கையில் உனக்கு யாதுகுறை உளது. ஆதலால்
வேண்டியதை கேள் என்றார். அப்போது அம்ம
னுடைய கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் கரை
புரண்டு ஓட மொழிகுளறி ஓ! கருணாநிதே!
தேவரீரது அநுக்கிரக விசேஷத்தால் எனது
எல்லா எண்ணங்களும் பூர்த்தியாயின. நான்
தங்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு வேறு
என்ன இருக்கிறது, அப்படியாயினும் நான் ஒன்று
கேட்கின்றேன். அதைத் தேவரீர் கிருபைசெய்து
அருளல்வேண்டும். இம்முக்கியாசல க்ஷேத்திரத்தில்
புல், பூண்டு உள்பட வாஸஞ்செய்யும் எல்லா ஜீவராசி
களும் அந்திய காலத்தில் சிவஸாயூஜ்யத்தை அடைய
வேண்டும். அவர்கள் மறுபடியும் துக்கம் நிறைந்த இச்
சம்சாரத்தின்கண் ஜனிக்காதபடி கிருபைசெய்ய
வேண்டும் என்றனர். அப்போது சுவாமியும், ஓ!
கார்த்தியாயனி! உனது எண்ணப்படி எல்லா ஜீவர்
களும் அந்திய காலத்தில் மோக்ஷம் அடையக்கட
வது. வேறு வரம் யாதாயினும் வேண்டின் கேள் என
லும், பார்வதி வேறு ஒன்றும் தேவையில்லையென்று
சொல்ல சுவாமி மீண்டும் முக்கியாலத்தைப்பற்றிக் கூறி

யதாவது, எந்த பக்தனாவது இம்முக்கியாசல க்ஷேத்தி
ரத்தில் மூன்று நாட்கள் வாஸஞ் செய்வானாயின் புநர்
ஜன்மம் என்பது அவனது ஸ்மிருதியிலும் இருக்காது
இம்முக்கியாசல க்ஷேத்திரத்தில் நம்மிருவர்களையும்
பக்தியுடன் பூஜை செய்யவானாயின் அவன் ஜீவன்
முக்தனாவன். இதில் ஐயமில்லை அது மாத்திரமல்ல,
முதல் உன்னை தரிசிக்காமல் எனது தரிசனத்
திற்கு விரும்புகிறவன் முன்கூறப்பட்ட பலன்
களை வெறுக்கப்பட்டவனாவன் என்றுகூறி சுவாமி
யும் காமாக்ஷியுடன் சுகமாய் விசிரமிக்கலானார். இதை
வஸிஷ்டர் பகீரதருக்கு உபதேசித்ததாக சூதர் சௌன
காதிகளுக்கு சொல்லிச் ஓய்வடைந்தனர்.

சுபம்.

## மூன்றாவது அத்தியாயம்.

முற்றிற்று.

## நான்காவது அத்தியாயம்.

---

### மகாவிஷ்ணு முக்கியாசலத்திற்கு எழுந்தருளி பரமசிவனைக் குறித்து தபம் புரிதலும், பரமசிவன் விஷ்ணுவுக்கு உபதேசம் செய்தலும்.

பராசத்தியான உமாதேவியானவர் எதை உத்
தேசித்து முக்கியாசலத்தில் தபம்புரிய விஜயஞ் செய்
யப்பட்டதைச் சென்ற அத்தியாயத்தில் குறிப்
பிடப்பட்டது. தபஸின் நோக்கம் ஒருவாறு பூர்த்தி
யாயினும், தேவர்களுக்கும் இராவணனால் ஏற்
பட்ட துயரம் எள்ளளவும் தீரவில்லை. தேவர்
கள் அல்லும் பகலும் இராவணனுடைய ஹிம்சைக்கு
உட்பட்டு அலறி தேவேந்திரனைத் தலைமையாகக்
கொண்டு பிரம்மாவிடம் சென்று முறையிட்டனர். பிர
ம்மனும் பிரஸன்னமாய்த் தேவர்களின் க்ஷேமலாபங்
களை விசாரித்தார். அப்போது தேவர்களும் ஓ! சுவா
மின்! துஷ்டனான இராவணன் உம்மிடத்திலிருந்து
பெற்றுக்கொண்ட வரம் போதாதென்று எண்ணி
பரமசிவனைக் குறித்துக் கடுந்தபம் புரிய, அவரும் பிரஸ
ன்னமாய்க் கேட்ட வரங்கள் எல்லாவற்றையும் அவனு
க்கு அருளி நம்மையும், நமது தேவலோகத்தையும் கீழ
டக்கிய தமல்லாமல், நாங்கள் எல்லோரும் தேவரீரது
சன்னிதானத்தை நாடி 'அபயம்' பெற இவ்விடத்தில்
வாலானோம். அந்த ராக்ஷஸனுடைய அல்லலின்றும்
காப்பாற்றப்பட்டால் எங்களுக்கு க்ஷேமமுண்டாம்.

இன்றேல், அமரர் என்னும் பெயருக்கே பொருளில்லாமற்போம். ஆதலால் அவனைக் கொல்லும்படியான உபாயத்தை உரைத்தருளவேண்டும் என்றனர். அப்போது தேவர்கள் அபயம் என்று அலறுவதைக் கேட்ட பிரம்மனும் பரிதாபப்பட்டு ஓ! தேவர்களே! அந்த ராக்ஷஸாதிபனை வதை செய்யும்படியான உபாயம் ஒன்று ஓதுகிறேன் கேட்பீர்களாக. ஸர்வ தேவர்களுக்கும் தேவரான ஸ்ரீமந் நாராயணமூர்த்தி ஒருவர்தான் அவனைக் கொல்லத்தக்கவர். துஷ்ட ஸம்ஹார சிஷ்ட பரிபாலனந்தான் அவரது விரதம். ஆதலால் நீங்கள் எல்லோரும் பாலாழிக்குச் சென்று ஸ்ரீ மகா விஷ்ணுவைச் சரணமாய் அடைவீர்களாக என்றனர். உடனே தேவர்கள் அனைவரும் அவர்க்கு வந்தனம் செலுத்தி ஸந்தோஷத்துடன் பாற்கடலை நோக்கிச் சென்றனர். விஷ்ணுவைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பத்துடன் எவ்வளவு துரிதமாய்ப்போக முடியுமோ, அவ்வளவு வேகமாய் பாலாழிக்குச் சென்று வேத ஸ்துதிகளால் புண்டரீக ரக்ஷரான ஸ்ரீமந் நாராயணமூர்த்தியை ஸ்தோத்திரஞ் செய்தனர். தேவர்களால் ஸ்துதிக்கப்பட்ட வேத சப்தங்களின் ஒலி க்ஷீராப்தி மத்தியில் யோக நித்திரையில் சயனித்திருந்த அனந்த சயனனது ஹிருதய பத்மத்தில் தாக்கி நித்திரை கலையும்படிச் செய்தது. ஹிருஷீகேசரான நாராயணனும் ஈதென்ன ஆச்சர்யமென்று கருதிப் பார்க்கையில், தேவர்களின் ஸ்தோத்திர கோஷம் தன்மனதை உருகும்படி செய்தது. மகா விஷ்ணுவும்



அவர்களுடைய பக்திக்கு பரவசப்பட்டு அவர்முன் ஆவிர்ப்பவித்தனர். தேவர்களும் அப்போது அவரது திருவுருவத்தைக்கண்டு களித்து தண்டனிட்டு பய பக்தி பூர்வமாய் அவர்முன் நின்றார்கள். பக்தவத்ஸலரான மதுசூதனரும் ஓ! தேவர்காள்! உங்களுடைய யோக க்ஷேமங்கள் ஸந்தோஷகரமாயிருக்கின்றனவா? நீங்கள் எல்லோரும் யாது காரணம்பற்றி இவ்விடத்திற்கு வந்தீர்கள்? அதைத் தெளிவாய்த் தெரிவிப்பீர்களாக. அப்போது தேவர்களும் இராவணனது விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாகச் சொல்லி முறையிட்டனர். அப்போது கருணாநிதியான பகவானும் அதைக் கவனமாய்க்கேட்டு பின்வருமாறு விடையளித்தனர். ஓ! தேவர்காள்! இராவணனைப்பற்றிய பயம் இன்று முதல் உங்கள் மனதினின்றும் விட்டுவிடுங்கள், உங்களுக்கும் உலகிற்கும் துன்பம் விளைவித்த அவ்வரக்கர்கோன் கொல்லத்தக்கவனே? அவன் ஸர்வாந்தராத்மாவான பரமசிவனிடத்திலிருந்து தேவர், அஸுரர், யக்ஷர், கின்னரர், முதலியோரால் இறவாதிருக்க வேண்டுமென்னும் வரத்தை பெற்றுள்ளான். இதனால் தான் அவன் வானோரையும், வையகத்தவரையும் கீழடக்கி ஆண்டு வருகிறான். ஆதலால் அவன் அமரில் வெல்லப்படுவது சலப சாத்தியமல்ல, அவன் யாரிடத்திலிருந்து வரத்தைப் பெற்றுக்கொண்டானோ அவரிடத்திலிருந்தே அவனைக் கொல்லும்படியான உபாயம் தெரிய வேண்டியிருக்கின்றது. ஆதலால் யான் முக்கியாசலத்திற்குச்சென்று தபம்செய்து பரமசிவனை பிரத்திய

சுஷப்படுத்தி அவரது அனுக்கிரக விசேஷத்தால்
இராவண வதையின் உபாயத்தைத்தெரிந்து அவனைக்
கொன்று உங்களுடைய துன்பம் தொலையும்படி செய்
கிறேன். ஆதலால் நீங்கள் யாவரும் பயமில்லாமல்
உங்களுடைய இருப்பிடத்திற்கு போகலாம் என்ற
னர். இதைக்கேட்ட தேவர்களும் விடைபெற்றுக்
கொண்டு ஸந்தோஷத்தோடு திரும்பினர். மகாவிஷ்ணு
வும் தபசுசெய்ய முக்கியாசலத்திற்கு போகுமுன்
எனது வைஷ்ணவ நண்பர்களான வாசகர்களுக்கு
ஒரு வார்த்தை. (அதாவது மும்மூர்த்திகளில் ஒரு
வரும் ஸர்வ ஜகத்பாலகருமாய மகா விஷ்ணுவானவர்
பரமசிவனை நோக்கி தபம்புரிந்து அவரது அனுக்கிரக
விசேஷத்தால் இராவணனைக் கொல்லும்படியான
உபாயந் தெரிந்து அவனைக்கொன்று தேவர்களின்
துயரம் போக்கவேண்டுமென்பது வைணவ பக்தர்க
ளின் மனம் புண்படக்கூடியதென்று கருதலாமன்றோ?
அப்படி நினைப்பது சுத்த தவறு. ஏனென்றால் விஷ்
ணுவும், அவரை யறியும்படியான ஞான வழிகளும்
மற்றும் ஒருவருக்கோ ஓர் வகுப்பினருக்கோ, அல்
லது ஓர் தேசத்தினருக்கோ சொந்தமென்று பாராட்
டுவது பரிகசிக்கத்தக்கது. அவரும் அவரை அறியும்
படியாக ஏற்படுத்தப்பட்ட மதமும் ஸர்வ உலகிற்கும்,
ஸர்வ மனிதர்களுக்கும் பொது. உண்மை இப்படி
இருக்கையில் சிவனைப்பற்றி வைணவர்களும், வைண
வர்களைப்பற்றிச் சைவர்களும் பரஸ்பரம் உயர்வு தாழ்
வாக வாதிப்பதும், சண்டைபோட்டு மண்டை உடை



த்துக்கொள்வதும் அறியாமையா அல்லது பைத்தியக்
காரத்தனமா? பரமசிவன் இராவணனுக்கு வரம் கொடு
த்தமையால் அவரைக் கலந்து ஆலோசிக்காமல் தான்
தோன்றித்தனமாக ஸ்ரீமந் நாராயணர் எப்படி இராவ
ணனைவதஞ் செய்வது? நினைத்த மாத்திரையில் இராவ
ணனை ஸம்ஹரிக்கத்தக்க ஆற்றல் மகா விஷ்ணுவிற்கும்
இல்லாமல் இல்லை. இருவர்களுக்கும் அணுவளவும்
குறைவுபடாத அதிகாரமும், ஆற்றலும் இருக்கையில்
ஒருவரால் அளிக்கப்படும் வரம் மற்றொருவரால் அழிக்
கப்படுவதெனில் பிரபஞ்ச விருத்தி ஏது? ஸம்ஹார
மேது? ஒன்றும் நடைபெற முடியாதல்லவா? ஆத
லால் தேவர்களாலும் என்றும் மரணம் அடையாத
வாறு இராவணன் வரம் பெற்றுக் கொண்டிருக்கை
யில் அதை யழிக்க முற்படுவது பரமசிவனது அதிகாரத்
தில் தலையிடுவது போலாகும். ஆதலால் எந்த தர்க்க
சாஸ்திரத்தை யனுஸரித்தும் இஃது முற்றும் நியாய
மும், தர்மமுமாமென்று குழந்தைகளுக்கும் உள்ளங்
கை நெல்லிக்கனி போன்றது. இந்தத் தர்ம சூக்ஷ்மம்
அறியாது வைஷ்ணவ நண்பர்கள் வெறுப்படைவாரா
யின் அதைச் சிறிதும் பொருட்படுத்துவதற்கில்லை.)
நிற்க, தேவர்களுக்கு விடைகொடுத்த மகாவிஷ்ணுவும்
பாலாழியைவிட்டுப் பரமசிவனைக் குறித்து தபம்புரிய
பெருமுக்கல் என்னும் முக்கியாசலத்திற்கு எழுந்தரு
ளினர். ஸ்ரீ நீலகண்டாசலம் என்று மறுபெயரால் வழங்
கப்படும் முக்கியாசலத்தின்கண் எழுந்தருளிய மகா
விஷ்ணுவானவர் உமாகாந்தரான முக்கியாசல ஈசுவர

னையும் அம்மனையும் விதிப்படி பூஜித்து தீவிரமாய்த்
தபஞ்செய்து வருங்கால் அதிசீக்கிரமாகவே அம்மனும்
சுவாமியும் பிரஸன்னமாய்த் தமது யதார்த்த ஸ்வரூபத்
தைக் காட்டினர். ஸ்ரீமந் நாராயணனும் பரமசிவனது
திருவுருவங்கண்டு இன்பஸாகரத்தில் மூழ்கி பின்வரு
மாறு ஸ்துதிக்கத் தொடங்கினர். ஏ! சுவாமின்!
தேவாதி தேவராலும் கண்டறியமுடியாத தேவரீரை
நமஸ்கரிக்கின்றேன். ஸகல ஜீவராசிகளுக்கும் சுகத்தை
யும், மங்களத்தையும் அளிக்கும் தங்களது திருவுரு
ம் இத்தன்மையானதென்று வேதங்களும் நிச்சயப்
படுத்தமுடியா. யோகிகள் எப்போதும் தேவரீருடைய
திருவடிப்போதைக்கண்டு ஆனந்திக்க அல்லும் பக
லும் கடினமாகத் தவம்புரிகின்றனர். ஆயினும் அவர்க
ளது ஹிருதயாகாசத்தில் பிரகாசரூபமாய்த் தாங்கள்
வீற்றிருப்பினும் சுலபமாய்க் கண்டறியமுடியாது. பக்த
கோடிகள் தேவரீரைப் பார்க்கப் பல்லாண்டு பலவித
மான கடுந்தபம் புரிந்தும் தர்சிக்கமுடிகிறதில்லை. ஆயி
னும் அவர்களுக்கு துஷ்டர்களால் துன்பம் நேரிடும்
பொது அவர்களை காப்பதே விரதமாகக் கொண்டுள்
ளீர்கள். இப்போது எல்லா உலகமும் இராவணனால்
பிடிக்கப்பட்டு துன்புறுகின்றன அவர்கள் இத்துஷ்ட
னுடைய அல்லலிருந்து காப்பாற்றப்பட்டார்களா
யின் ஸாதுஸம்ரக்ஷணமென்னும் விருதம் அர்த்தம்
உள்ளதாக முடியும். இவ்வாறு மிகவும் பக்தியுடன்
ஸ்தோத்திரஞ் செய்தனர். அப்போது பரமசிவன் கூறு
கிறார். ஓ! நாராயணனே! உமது ஸ்தோத்திரத்தால்



நான் அதிக மகிழ்ச்சியை யடைகின்றேன். நீர் யாது
விரும்பி இவ்விடம் வரலானீர். அதைத் தெரிவித்தால்
உடனே உமது விருப்பத்தைப் பூர்த்தி செய்கின்றேன
என்றனர் பரமசிவன். இதற்கு மாதவனும் மறுமொழி
கூறுகிறார். ஓ! சுவாமின்! நம்மீது கிருபையிருக்கு
மானால் இராவணனைக் கொல்லும்படியான உபாயத்
தை இத்தருணம் அடியேனுக்கு உரைத்தருளல்
வேண்டும். இதுதான் தேவரீரிடத்திலிருந்து யான்
வேண்டுவது. இதைக்கேட்ட முக்கியாசல ஈசுவரர் ஓ!
மதுஸூதன! இராவணனை வதைக்கும்படியான உபா
யத்தை உரைக்கிறேன் கேட்பீராக. என்னிடத்திலிரு
ந்து தேவர்களாலும் அவத்யனாதல் வேண்டுமென்னும்
வரம் அவன் பெற்றுள்ளான். மனிதராலும் மற்ற மிரு
கங்களாலும் ஆபத்து நேரிடக்கூடுமென்று அவன்
கனவிலுங்கருதவில்லை. அவனால் யாரைத்துச்சமென்று
கருதுவானோ அவரால் அவன் மரணமடை
வான். ஆதலால் நீர் இரகு மகாராஜனது வம்சத்
தில் தசரதனது புதல்வனாய்ப் பிறந்து போரில்
அவனையும் அரக்கர் வம்சத்தையும் வேரறுக்க வேண்
டும். வேறு எவ்விதத்தாலும் அவனைக் கொல்லமுடி
யாது. துஷ்ட சிக்ஷையும், சிஷ்ட பரிபாலனமுஞ்
செய்ய யுகந்தோறும் நீர் அவதரிக்கிறீரன்றோ? அது
மாத்திரமன்று. நந்தி தேவராலும் அவன் (ராவ
ணன்) கூடிய சீக்கிரம் பந்து வர்க்[illegible]
றும் மரணம் அடையக்கடவன், [illegible] சபிக்கப்
பட்டுமிருக்கிறான். ஆதலால் நீர் [illegible]ரக்ஷணையின்

84696

பொருட்டு சீக்கிரத்தில் இரகு வம்சத்தில் அவதரித்து இராவணனை வதைக்கவேண்டும். இராவணன் எனது பக்தன், ஆனாலும் அவன் பக்தன் அல்ல. ஏனெனில் அவன் உலகிற்கு உபத்திரவஞ் செய்பவனாதலால் அவன் எவ்வாறு எனது பக்தன் என்று அழைக்கப்படுவான்? என்மீது அன்புள்ளவன் உலகத்தின் கண்ணும் அன்புள்ளவனாவன் என்றனர் முக்கியாசல ஈசுவரர். அப்போது மகா விஷ்ணுவும் ஸந்தோஷத்துடன் அவரை வணங்கி தேவர்களுக்கு வாக்களித்தபடி இரகுமகாராஜனது வம்சத்தில் தசரதனுக்குப் புத்திரனாய் அவதரித்து, ஸீதையை மணந்து அவள் நிமித்தமாக இராவணனையும் அரக்கர் குலத்தையும் வேரறுத்து தேவர்களின் இடர்தீர்த்தனர்.

இப்படி மகா விஷ்ணுவால் முக்கியாசல ஈசுவரர் பூஜிக்கப்பட்ட விருத்தாந்தம் உங்களுக்கு உரைக்கலானேன். ஸ்ரீமந் நாராயணமூர்த்தியாலே பூஜிக்கப்பட்ட முக்கியாசல ஈசுவரரைப் பூஜைசெய்யத்தக்க பாக்கியம் யார் அடைவரோ அவருடைய மகிமையும், அவரால் அடையப்படும் பெரும்பதமும் யாரே செப்பவல்லர். அதுமாத்திரமல்ல வால்மீகி மகரிஷியும் துவாபரயுகத்தில் முக்கியாசல ஈசுவரரைப் பூஜை செய்ததால் புநராவர்த்திரகிதமான பரமபதமடைந்தனர் என்று சௌனகாதி தாபஸர்களுக்கு சூதர் அருளிச்செய்தனர்.



## வால்மீகி, ஸீதா சரித்திரம்.

வால்மீகி மகருஷி துவாபரயுகத்தில் முக்கியாசல நாதரைப் பூஜைசெய்து அவரிடத்திலிருந்து என்ன வரம் பெற்றுக்கொண்டனர் என்றதை விரிவாய் எமக்கு விளம்பல் வேண்டுமென்று சௌனகாதிகளால் கேட்கப்பட்ட ஸ்ரீ சூத முனிவர் கூறுகிறார். ஓ! முனிவர்களே! வால்மீகி முனியின் சரித்திரம் புண்யமும் முக்கியமுமானது. எதைக் கேட்டமாத்திரத்தில் மனிதர் ஸர்வ பாபங்களிலிருந்தும் விமோசனம் அடைவரோ அந்தவால்மீகரின் சரித்திரத்தைச் சாற்றுகிறேன் கேட்பீர்களாக. வால்மீகிமுனி மனோகரமான தமஸாநதிதீரத்தில் அனேக தாபஸர்களுடன் தபம்புரிந்துவருங்கால் ஒருநாள் சூர்யோதயத்திற்குமுன் ஸமித்துகளைக்கொண்டு வருவதன்பொருட்டு அந்நதிக்கரையில் உள்ள பெரிய வனத்திற்குள் புகுந்து போகும்போது யாரோ ஒருவரின் அழுகுரல் கேட்க அதை இலக்காக்கிச் சென்றனர். அப்போது துஷ்ட மிருகங்களால் நிறைந்ததும் துணையில்லாததுமான அப்பெருங்கானகத்திற்குள்ளே ஓர் ஸ்திரீ துக்கத்தோடு பிரலபித்த வண்ணமாயிருந்தாள். வால்மீகியும் மிகக் கருணையோடும் பரிதாபத்தோடும், பேராச்சர்யத்தோடும் அவள் சமீபத்திற்சென்று பின்வருமாறு வினவினர். இப்பெருங் கானகத்துள்ளே ஏகாகினியாய் அழுதுகொண்டிருக்கும் ஓ! தேவி! நீ யார்? நீ எதன்பொருட்டு துக்கப்படுகிறாய்? உனது பர்த்தா

யார்? உன் பெயர் என்ன? உன் மாதுலன் பெயர் யாது? உன்னுடைய பெற்றோர்கள் யார்? ஜனஸஞ்சாரமில்லாத இவ்வாரண்யத்தில் தனிமையாக உன்னை விட்டுச்சென்ற நிர்த்தயன் யார்? நீ துயரப்படாமல் உன்வரலாற்றை எனக்குச் சொல்லவேண்டும். இதற்கு மாதும் பின் வருமாறு சொல்லலுற்றாள். யான் தசரதனது மருமகள். எனது பர்த்தாவின்பெயர் இராமர். நான் ஜனகமகாராஜனது புதல்வி. என் பெயர் ஸீதா. நான் அயோனிஜை. ஜனாபவாதத்திற்குப் பயந்து புத்திமானாய எனது கணவர் இராமரால் ஜனஸஞ்சாரமில்லாத இக்கானகத்துள் விடப்பட்டேன். ஓ! முனிச்சிரேஷ்டரே! இலங்கையிலிருந்தால் நான் ஸந்தேகப்படக்கூடியவளல்ல. அவ்விடத்தில் உள்ள யாவரும் நான் மிக்க பரிசுத்தை யானவள் என்று தைர்யமாய்க் கூறுவர். அவ்வாறாயினும் ஊர்வாயைமூட யாரால் முடியும்? எனது பதிவிரதாத் தன்மையைப்பற்றி இலங்காவாஸிகளுக்கும், கடவுளுக்கும், எனக்குந்தான் தெரியவரும். பராபவாதத்தால் பயப்பட்டு துரத்தப்பட்ட எனது ஜீவிதத்தை இனி ஒருகணங்கூட வைத்திருப்பதைப்பற்றி உண்மையாய் அதிருப்தி யடைகிறேன். அச்சமயம் ஸீதையைப் பார்த்து பரம காருணிகரான வால்மீகி அன்பு நிறைந்த இனிய மொழிகளால் ஓ! ஜனகமகாராஜனது அருமைப் புதல்வியே! உமது சோகத்தையும் பயத்தையும் விட்டுவிடும். நீர் பதிவிரதைகளுக்கெல்லாம் வழிகாட்டியாயும், இரத்னமாயும் விளங்குகிறீர். உமது கற்புக்குச் சிறிதும் மாசு



ஏற்படவில்லை யென்று உம்முடைய கணவருக்குத் தெரியாததல்ல. அவர் மகா விஷ்ணுவின் அவதாரமாவர். அவர் உம்மைப்பற்றித் தெரியாராயின் வேறு யார்தான் தெரிய வல்லர்? நீரும் சாமான்ய ஸ்திரீ அல்லர். நீர் இலக்ஷ்மீ தேவியின் அவதாரமாவீர். அவர் உம்முடைய மாசற்ற தன்மையை ஏற்கனவே அறிந்திருப்பினும் பல்வேறு காரணங்களால் நீர் காட்டிற்கு துரத்தப்பட்டீர். அதைப்பற்றி எனக்குத் தெரிந்த சிலவற்றைச் செப்புகிறேன் கேட்பீராக. பாமர ஜனங்களுடைய பார்வையில் நீர் ஓர் அரசகுமாரியாயும், பட்ட மகிஷியாயும் தோன்றப்படுகிறீர். ஸர்வ சாராசரங்களையும் ஈன்றெடுத்த பராசக்தியான இலக்ஷ்மீ தேவியென்று அவர்களால் உணரக்கூடியவரன்று. நன்மைக்கோ தீமைக்கோ வேற்று ஓர் அரக்கனால் நீர் பலாத்காரமாய் அபகரிக்கப்பட்டு அவனது இருப்பிடத்தில் வைக்கப்பட்டிருந்தது யாவராலும் சந்தேகிக்கக்கூடியதே. பாஸ்பர காம இச்சையாலோ மற்றெதனாலோ, ஓர் ஸ்திரீ அபகரிக்கப்பட்டு, சிலகாலமாயினும் அல்லது ஒரு கணமாயினும் அவனது ஆதிக்கியத்தின்கீழ் வைக்கப்பட்டு அவள் அவனோடுகூடி வாழ்ந்தபின் அவளை மறுபடியும் சேர்த்துக் கொள்வதாயின் அது உலக தர்மத்திற்கும், நியாயத்திற்கும் முற்றும் ஒவ்வாததாகக் கருதப்படுகிறது. இது குற்றமென்று ஓராமல் சமூகவாழ்கையில் சேர்த்துக்கொள்ளப்படுமாயின் உலக தர்மம் சரிவர நடைபெறாததும் அல்லாமல் உயிரும் உடைமையும் பயமில்

லாமல் காப்பாற்றப்படுவதும் கஷ்டமாக முடியும். திரிகரணங்களாலும் எப்போதும் ஸர்வ ஜீவராசிகளிடத்தில் பொதுவாயும், தர்மமாயும், ஸத்யமாயும் நடுக்கண்ட நியாயமாயும் வழங்கக்கூடிய இராஜவம்சத்தில் உதித்த உமது பர்த்தா இராமர் நீர் காட்டிற்கு அனுப்பப்படாமல் வேறு என்னதான் செய்யக்கூடும். பதிவிரதாசிரோன்மணியென்று மூவுலகுக்கும் பெயர் பெற்ற உம்முடைய பரிசுத்தத்தை இராமர் நன்கு அறியாதவரல்ல. நீர் இராவணனிடத்தில் மாத்திரமல்லமல் மற்ற யாரிடத்திலும் எவ்வளவு காலம் வஸித்திருப்பினும் உம்முடைய கற்பைப்பற்றி அணுவளவும் ஐயுறுவாரும் உளரோ? இன்றைக்கு இராமர் உலக அபவாதத்திற்கு அஞ்சாமல் உம்மைத் தம்முடன் சேர்த்துக் கொள்வாரேயானால் அடுத்த கணத்திலேயே உலகம் வேறு விதமாய் மாறி ஜனங்களின் ஸன்மார்க்க நெறி தவறி, துஷ்டர்களுடையவும் கொலையாளிகளுடையவும் அதிகாரத்திற்கு உட்பட்டு பயங்கர ஆக்ஷிக்கு உள்ளாகி அவதிப்படுவமன்றோ? என்னே! இராமரது நீதியின் மாண்பு. அவ்வீரரது தியாகமும் கூரிய அறிவையும் பிரஜைகளின் அபிப்பிராயப்படி ஆக்ஷிபுரியும் மாக்ஷிமையும் குறித்து யாரே கூறவல்லர். சிரேஷ்டமானவர் எதைப் பிரமாணமாய்க் கொண்டு அனுஷ்டிப்பரோ அதைத் தான் மற்றையரும் பின்பற்றுவர். நீர் காட்டிற்குத் துரத்தப்படுவதற்கு ஜனாபவாதம் என்ற ஒரே காரணம் மாத்திரமல்ல. இன்னம் அதற்கு ஓர் பிரதான காரணமும் உளது. இராமரும் உம்மைவிட்டுப் பிரிந்த



வியோக துக்கத்தை நிச்சயமாய் அனுபவித்தேதீர வேண்டும். அப்படி மண்டோதரி (இராவணன் மனைவி)யால் இராமர் சபிக்கப்பட்டும் இருக்கிறார். யுத்தத்தில் இராவணன் கொல்லப்பட்டபோது அவனைப் பார்த்த மண்டோதரி துக்கம் பொறுக்க முடியாமல் பர்த்ருவியோகத்தால் நான் எப்படித் துக்கத்தை அனுபவிக்கிறேனோ, அப்படியே இராமனும் பார்யாவியோகத்தால் துன்புறக் கடவர் என்று சபிக்கப்பட்டிருக்கின்றார். அந்த சாபத்தின் பலனை இராமர் இப்போது அனுபவித்து வருகிறார். நீர் மாத்திரம் அல்லற்படுவதாக எண்ணாதீர். ஆதலால் பர்த்தாவை விட்டுப் பிரிந்த துக்கத்தைவிட்டு மனதைத்தேற்றி எனது மொழிகளைக் கேட்பீராக. மிதிலா தேசத்திற்கு அதிபனும் உமது பிதாவுமான ஜனகமகாராஜன் எனது அத்யந்த நண்பன், விதேகமகாராஜனை எப்படிப் பிதா என்று எண்ணுகிறீரோ, அப்படியே என்னையும் பிதா என்று இப்போது முதல் நீர் கருதவேண்டும். இதில் நீர் கொஞ்சமும் தயங்கவேண்டாம். உம்மை இவ்விடத்தில் தனிமையாக விட்டுப்போக என்மனம் சிறிதும் இடந்தாவில்லை. என்னுடைய ஆசிரமம் இவ்விடத்திலிருந்து சிறிது தூரத்தில் இருக்கின்றது. அந்த இடம் பார்வைக்கும் வாஸத்திற்கும் அதிக மகிழ்ச்சியைத் தரத்தக்கது. ஆசிரமம் அனேக தாபஸர்களாலும், தபஸ்வினிகளாலும் வஸிக்கப்பெற்று மிக்க வழகாயிருப்பதையும் பார்க்கலாம். அதுமாத்திரமல்ல, ஆசிரமத்திற்கு இன்னொரு விசேஷம் என்னவென்றால்,

மனோகரமான தமஸா நதிக்கரையில் அமைந்துளது. அந்த நதியின் இருகரைகளிலும் ஸதா காலமும் புஷ்பங்களையும், பலங்களையும் தரத்தக்க மரங்களால் அலங்கரிக்கப்பட்டிருப்பது மனதைக் கவரத்தக்கது. அயோத்தியிலும் மிதிலையிலும் உள்ள நந்தவனங்களில் நீர் எப்படி விளையாடுவீரோ, அப்படியே இவ்வாசிரமத்தில் விளையாடி மகிழ்வையடைவீர். பர்த்ரு வியோகத்தால் துக்கிதமான உம் மனதிற்கு ஸந்தோஷகரமானதும், தற்போது செய்யத்தக்கதும் இதுவேயன்றி வேறில்லை. இராமரால் காட்டிற்குத் துரத்தப்பட்ட காரணத்தால் ஏற்பட்ட தற்கால நிலமையிலுள்ள உமது ஜீவிதத்தைப்பற்றி ஏதேதோ எண்ணி ஒருவாறு நிச்சயப்படுத்தப்பட்டிருக்கிறதென்பதைக் கனவாகக் கருதவேண்டும். ஆதலால் இராமரை உத்தேசித்தும், என்னால் கூறப்பட்ட மொழிகளை ஆலோசித்தும், நீர் இப்போது செய்யவேண்டியது என்னவென்றால், என்னுடன் ஆசிரமத்திற்கு வருவதுதான். ஆசிரமத்தில் எம்முடன் இருப்பதைப்பற்றி யாரும் குறைகூறமாட்டார். இராவணனால் அபகரிக்கப்பட்டு இலங்கையில் வாஸஞ்செய்ததனால் உம்பால் நிஷ்காரணமான தோஷம் ஆரோபிக்கப்பட்டதுபோல் எனது ஆசிரமத்தில் உறைவதால் அத்தகைய குற்றமொன்றும் ஒருபோதும் ஏற்படாது. இதற்காக நீர் சந்தேகிக்கவேண்டாம் என்றனர் வால்மீகி மகருஷி. ஸீதையும் மகருஷியின் அன்புமிக்க மொழிகளைக்கேட்டு களிப்படைந்தனர். வால்மீகியும் அவளைக் கூட்டிக்கொண்டு தனது ஆசிரமத்திற்குச்



சென்று முதியையான ஓர் தபஸ்வினியைக் கூப்பிட்டுப் பின்வருமாறு கூறினர். ஓ! தபஸ்வினி! என்னால் அழைத்துவரப்பட்ட இவள் தசரதனுடைய மருமகள். இராமரது மனைவி ஜனகமகாராஜனுடையவும் தற்போது என்னுடையவும் புதல்வி. இவள் தெய்வ வசத்தால் இன்றைக்கு இவ்வாசிரமத்திற்கு விஜயஞ் செய்தனள் இவளைக் காப்பாற்ற வேண்டியது உன் கடமை, என்றுகூறி ஸீதையை அவள் வசம் ஒப்புவித்தனர்.

### வால்மீகி, ஸீதை, பரத்வாஜர், முதலியோர் முக்கியாசலத்திற்கு விஜயஞ் செய்தலும், ஸீதையின் பிரஸவமும்.

வால்மீகியால் அவ்விருத்தையான தபஸ்வினிவசம் ஒப்புவிக்கப்பெற்ற ஸீதாதேவியார் தமஸா நதிக்கரையில் உள்ள அவ்வாசிரமத்தில் சுகமாய்த் தபஸ்வினியுடன் வஸித்து வந்தனர். இவ்வாறு சிலகாலம் சென்றபின் வால்மீகி ஸீதையைப் பார்த்து சொல்லுகிறார். ஓ! வைதேகி! நான் தக்ஷிண தேசத்தில் உள்ள தண்டகாரண்யத்தைப்பார்க்க விரும்புகிறேன். ஆகாசத்தில் கதிரவன் ஒளி எப்படி பரவியிருக்கின்றதோ, அப்படியே தண்டகாரண்ய மண்டலமும் யோகிகளாலும் ருஷிகளாலும் நிறைப்பெற்றது. அதிலும் முக்கியமாக அவ்விடத்தில் முக்கியாசல க்ஷேத்திரம் ஒன்று உளது. இது ஸர்வ பிரஸித்தமானது. அதன் தரிசன மாத்திரத்தாலே ஸர்வ பாபமும் விமோசனமாகும்.

அது மாத்திரமல்ல, பரமசிவன் கைலாஸகிரியைவிட்டு அம்மனோடும், பிரம்மா இந்திரன் முதலிய தேவர்களால் புடைசூழப்பட்டும், அம்முக்கியாசலத்தையே வெள்ளியங்கிரியாகக்கொண்டு விளங்குகின்றார் ஆதலால் அவ்விடத்திற்குச்சென்று ருஷிகணங்களையும் பரமசிவனையும் தரிசனஞ்செய்து வருகிறேன். அது மாத்திரமல்ல, எனது பூர்வ ஆசிரமமும் அவ்விடத்திலே (பெருமுக்கலில்) உளது. நான் அவைகளைப்பார்த்து வருவது வரைக்கும் நீர் இவ்வாசிரமத்திலே வஸிப்பீராக. உம்முடைய யோகக்ஷேமங்களைப்பற்றிய யாவும் தர்மதத்பரர்களான இத்தாபஸர்களே பார்த்து வருவார்கள் என்று மகர்ஷி வால்மீகி சொன்னார். உடனே முனிவரைப்பார்த்து ஓ! தாபஸோத்தமரே! தங்களால் குறிப்பிடப்பட்ட தண்டகாரண்யம் அவ்வளவு முக்கியமானதாயின் நானும் அதைப் பார்க்க விரும்புகிறேன். தண்டகாரண்யத்தில் தபோ நிஷ்டையில் இருக்கும் முனிகணங்களைப் பார்த்து நமஸ்கரித்தால் எனது சோகமெல்லாம் நிவிர்த்தியாகும். சிறப்பாகத் தங்களால் கூறப்பட்ட முக்கியாசலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸர்வேசுவரனைத் தரிசிக்க நான் மிக்க அவா உள்ளவளாயிருக்கின்றேன் என்று ஸீதை விண்ணப்பித்தனள். உடனே வால்மீகி ஓ! ஜனகாத்மஜே! அதிசீக்கிரத்திலே நீர் பிரஸவிக்கத்தக்க ஸ்திதியில் இருக்கிறீர். இச்சமயம் அதிக தூரத்தில் உள்ள தண்டகவனத்திற்குவர எப்படிவிரும்புகின்றீர்? வழியும் இராஜபாதையல்லவே. காடு, முரடானதும்,



முட்களால் நிறைந்ததும் மாத்திரமல்லாமல் அனேக கொடிய துஷ்ட மிருகங்களின் மத்தியிற்கூட போக வேண்டியதாயும் இருக்கின்றது. நீர் ஸாதாரணநிலைமையில் இருந்தாலும் அக்கரையில்லை எனலாம். ஆதலால் நீர் பிரஸவிப்பது வரை இவ்விடத்திலேயே இருப்பது உத்தமமாகும் என்றனர். ஓ! ஜானகி! நீர் இருபுத்திரர்களைப் பிரஸவிக்கப்போகிறாய். அவ்விருமைந்தர்களும் ஸாதாரணமானவர்களல்லர். இராமனைப்போன்ற பராக்ரமசாலிகளும் ஜகத் பிரஸித்தர்களும் ஆவர். வால்மீகியின் இம்மொழிகளைக்கேட்ட ஸீதை ஓ! முனிசிரேஷ்டரே! தற்போது எனது பிதாவாய தங்களால் நான் ஸம்ரக்ஷிக்கப்பட்டு வருகையில் எனக்கு இடர்கள் எப்படி ஸம்பவிக்கக்கூடும்? தங்களுடைய தரிசனத்தால் என்னுடைய மூன்றுவித தாபங்களும் நிவர்த்தியாயின. தங்களுடைய அனுக்கிரக விசேஷத்தால் நான் தண்டகாரண்ய முனிகளையும் முக்கியாசல ஈசுவரனையும் தரிசிக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றுளேன் என்று நினைக்கிறேன். தாங்கள் எவ்விடத்திற்குப்போக விரும்புகிறீர்களோ, அவ்விடங்கட்கெல்லாம் என்னையும் அழைத்துப்போதல் தங்கள் கடமையாகும் என்றனள். இதற்குப் பரமகாருணிகரான பகவான் வால்மீகியும் இசைந்து, தமது சிஷ்யர்களில் சில தாபஸர்களோடும், தபஸ்வினிகளோடும் ஸீதையை அழைத்துக்கொண்டு பிரயாணமானார். வழி மத்தியில் ஸீதைக்கு மனச்சோர்வு ஏற்படுமென்று நினைத்து, பலவித ஹாஸ்யரஸம் பொருந்திய கதைகளா

னும் மற்றும் பலவிதங்களாலும் ஸீதையின் மனதிற்கு களிப்பையும் உற்சாகத்தையும் ஊட்டினர். இப்படி சில நாட்களில் அவர்கள் எல்லோரும் தண்டகவனத்திற்கு வந்து சேர்ந்தனர் சிரமபரிகாரத்தின்பொருட்டு அவ்விடத்தில் உள்ள அக்னிப மகர்ஷியுடைய ஆசிரமத்திற்கு விஜயஞ் செய்தனர். அக்னிபரால வால்மீகி முனிவர் உபசரிக்கப்பட்டு இரவில் அவ்வாசிரமத்திலேயே இளைப்பாறினர். மறுநாள் காலையில வால்மீகர் ஸீதையோடும், பாரத்வாஜர் முதலிய மற்ற சிஷ்ய கணங்களோடும் தமது பூர்வ ஆசிரமஸ்தலமான முக்கியாசலத்திற்கு எழுந்தருளினர். மலையின் அடிவாரத்தில் அமர்ந்திருக்கும் காமாக்ஷி அம்மனை எல்லோரும் தரிசனம் செய்தபின் முக்கியாசல ஈசுவரரைத் தரிசிப்பதற்கு மலைமீதுசென்றனர். ஸ்வாமிதரிசனம் செய்யவேண்டுமென்னும் அவாவுடன் மலைக்குச்சென்ற வால்மீகியும் மற்ற சிஷ்ய கணங்களும் முதலில் கணேசரையும் மற்ற தேவர்களையும் அர்ச்சனை செய்தபின் வால்மீகி முனிவர் முக்கியாசல ஈசுவரரை ஷோடச உபசாரங்களால் பூஜித்து க்ஷேத்திரோபவாஸம் கிரமப்படிசெய்து மனதை ஒருமைப்படுத்திப் பக்தி பூர்வம் இரவில் அவ்விடத்திலேயே தங்கி மறுநாள் சூர்ய உதயத்திற்குப்பின் விதிப்படி ஸ்நானஞ்செய்து நியமந்தவராமலும் சுத்தத்தோடும் அனுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டு வேதம், வேதாங்கம் ஆகியவைகளில் மிக்க நிபுணர்களான சிஷ்யர்களுடன் வால்மீகி முனிவர் தமதுபெயரால் ஸர்வசித்தியையும் அளிக்க ஓர் இலிங்



கத்தை முக்கியாசல ஈசுவரருடைய முன் பக்கத்தில் சிறிது வடதிசியாகப் பிரதிஷ்டித்து விதிப்பிரகாரம் அபிஷேக ஆராதனாதிகளும் செய்தனர். வால்மீகி முனிவரால் பிரதிஷ்டிக்கப்பட்ட சிவலிங்கத்தின் கீழ்ப்புறமாக அவருடைய சிஷ்யர்களில் முக்கியஸ்தரான பரத்வாஜமகர்ஷி, அவரது பெயரால் (பாரத்வாஜ லிங்கம்) என ஓர் இலிங்கம் பிரதிஷ்டிக்கப்பட்டு மிக்க பக்தி விசுவாஸத்துடன் பூஜை செய்தனர். பிறகு முக்கியாசல ஈசுவரருக்கு பின்புறமாயும், சுப்பிரமணியருக்கு கொஞ்சம் வடபுறத்திலும் ஸீதாபிராட்டியார் தமது பெயரால் ஓர் இலிங்கம் பிரதிஷ்டிக்கப்பட்டு பூஜை செய்தனள். வால்மீகி, பாரத்வாஜர், ஸீதை ஆகியவர்களால் பிரதிஷ்டிக்கப்பட்ட இலிங்கங்களை பூஜை செய்பவர்கள் முக்தியடைவர். ஈண்டு வாசகர்களுக்கு முக்கியாசலத்தின் தற்கால ஸ்திதியைப்பற்றிச் சிறிது விளக்குவது பொருந்தும். (இப்புராணத்தில் கூறப்பட்டிருப்பது போல முக்கியாசலம் ஓர் புராதனஸ்தலம் என்பதை அதன் தற்போதியத் தோற்றமே நன்கு நிரூபிக்கின்றது. இப்போது முக்கியாசல க்ஷேத்திரம் அதிகக் கிலமாயும், சிலபாகம் அடியோடு விழுந்தும், சிலபாகம் மிக்க அபாயஸ்திதியிலும் இருந்து வருகின்றது. இப்புராணத்தில் கூறப்பட்டிருப்பது போன்ற சிவலிங்கப் பிரதிஷ்டைகளின் அமைப்பிற்கும் தற்கால நிலைமைக்கும் அதிக வித்யாஸம் காணப்படுகின்றது. இவை துவாபரயுகத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டதென்று கூறப்பட்டிருப்பதால் பிற்காலத்தவர்கள் அவை மாற்றப்

பட்டும் இளக்கப்பட்டும் தற்போது காணப்படுவது
போல் பிரதிஷ்டை செய்திருப்பார்களென்று கருத
வேண்டியிருக்கிறது. மலைமேல் சுப்பிரமணியக் கோயி
லும், தக்ஷிணாமூர்த்தி க்ஷேத்திரமும் மற்று அனேக
சிறு தேவாலயங்களும் இருந்ததாக இப்புராணத்தி
னின்றும் ஏற்படுகின்றது. அவை இப்போது இருந்த
விடந் தெரியாமல் இருக்கின்றன. ஆனால் ஆராய்ச்சி
செய்பவர்களின் கண்களுக்கு, தற்போது இலனுயிருக்
கும் ஈசுவரன் கோயிலை சுற்றி அனேக கோயில்களும்
மண்டபங்களும் இடிந்து விழுந்துக்கிடப்பதை நன்கு
புலப்படக்கூடும். மலையைச் சுற்றிப்பார்த்தால் அனேக
விக்கிரகங்களும், சிவலிங்கங்களும், மண்டபங்களும் இடி
ந்துக்கிடப்பதை இப்போதும் பார்க்கலாம். யாது கார
ணத்தால் இவைகள் அழியப்பட்டுபோயின என்று
பின்வரும் அனுமானம் சிறிது உண்மையாயிருக்கு
மென்று நம்புகிறேன். இம்மலையையும், ஊரையும் சுற்றிக்
கோட்டைகளும் அகழிகளும் காணப்படுகின்றன. கோ
ட்டை, அகழி இவைகளிருப்பதால் சில நூற்றாண்டுக
ளுக்கு முன்னால் இப்பிராந்தியத்தை ஆண்ட அரசனது
ராஜதானியாயிருத்தல் வேண்டுமன்றோ. இவன் எந்த
அரசன், என்று சிலைகளிற் செதுக்கப்பட்டிருக்கும் எழு
த்துக்களால் பல்லவ வம்சத்துதித்த அரசன் என்று ஒரு
வாறு நிச்சயப்படுத்தலாம். இவ்வரசன் தனது இருப்பி
டத்தை மலைமீதே அமைத்து வாஸஞ் செய்திருப்பத
ற்கு அனேக அனுமானங்கள் உள. கோட்டையைச்சுற்
றிப்பார்த்தால் இதன் உண்மை தெற்றென விளங்குகின்



றது. எதிரிகளுக்குத் தெரியாமல் அவர்களைப் பார்க்க
வும், கிட்டிவந்தால் தம்மைக் காத்துக்கொள்ளவும்,
அவர்களைத் தாக்கவும், சௌகரியமுள்ள கோட்டை
யின் பல மூலைகளும், பிரதான வாயில்களும், இரகஸ்ய
அறைகளும், காவல் புரியும் அறைகளும், மற்றும் பிற
வும் அமைந்திருக்கின்றன. இயற்கையாகவே மலையா
னது வாஸத்திற்கு மிகவும் சௌகர்யம் பொருந்தி
யிருப்பதாலும், அரசனது அரண்மனையின் அறிகுறி
கள் காணப்படுவதாலும், அரசன் மலைமீதே வாஸஞ்
செய்திருக்கவேண்டும் என்பதில் தடையில்லை. சமீப
காலத்தில் மலைமீதுள்ள ஓர் தடாகம் பரிசோதிக்கப்
பட்டபோது துப்பாக்கி, குண்டு, ஈட்டி, சூலம் முத
லிய ஆயுதங்கள் அதிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.
இக்காரணங்களால் பல்லவ வம்சத்து அரசனால் இவை
கள் நிர்மிக்கப்பட்டன என்பதில் தடையில்லை. இவ்
விடத்தில் இரண்டு கோயில்கள் தான் புராதனமானவை
களும் பெரியவைகளுமாம். ஒன்று மலைமீது உள்ள ஈசு
வரன் கோயில், மற்றொன்று மலையின் அடிவாரத்தில்
இருக்கும் அம்மன் கோயில். புராணத்திலும் இவைகள்
தான் முக்கியமாய்க் குறிப்பிடப் பட்டிருக்கின்றன.
சிவன் கோயில் எவ்வளவு அபாய ஸ்திதியில் இருக்
கின்றதோ, அம்மன் கோவிலின் நிலைமையும் அவ்
வாறே இருக்கின்றது. ஆனால் இவை இவ்வளவு பாழ்
பட்டதற்கு டிப்பும் ஐதர் அலியுந்தான் காரணமாவர்
என்று சொல்லப்படுகிறது. ஐதர் அலியின் அக்ரமத்
தாற்றான் இப்பிரதேசத்திய ஹிந்து தேவாலயங்கள்

எல்லாம் இவ்வளவு கேவல ஸ்திதிக்கு வந்தன. விக்கிரகங்களையும், கோயில்களையும் இடிப்பதும், அதன் உள்ளிருக்கும் பொன் வெள்ளி நாணயங்களைக் கொள்ளை யடிப்பதுந்தான் அவனுடைய திருவிளையாடல்களில் முக்கியமானவை. ஆதலால் கோயில்களுடைய தற்போதைய நிலைமைக்கு பெரும்பாலும் இவ்வனுமானம் பொருந்து மெனலாம். நிற்க, வால்மீகி முனிவர், பரத்வாஜர், ஸீதை முதலியோர் லிங்கப் பிரதிஷ்டை செய்த பிறகு, அவ்விடத்திலேயே அவர்கள் தங்கினார்கள். அன்று இரவு ஸீதை இரண்டு குழந்தைகளைப் பிரஸவித்தனள். இவர்கள் அதிக தேஜஸ்விகளாயும், இராமவம்சத்தை விருத்தி செய்பவர்களாயும், தீரர்களாயும் காணப்பட்டனர். ஸீதை பிரஸவித்த சங்கதி வால்மீகிக்கு அறிவிக்கப்படவே அவரும் சமீபத்தில்வந்து ஜாத கர்மம்,நாமகரணம் முதலியன விதிப்பிரகாரஞ் செய்தனர். குழந்தைகளுக்கு முறையே இலவன், குசன், என்று பேர் சூட்டினர். ஸீதை பிரஸவித்த ஸமயத்தில் வயோதிகையான தாபஸை வேண்டிய பணிவிடைகளைச் செய்து குழந்தைகளை மிகஜாக்கிரதையாகப் பாதுகாத்தனள். இவ்விடத்தில் அம்மன் பிரஸவித்ததைப்பற்றி ஒரு வார்த்தை. அதாவது, ஸீதாப்பிரஸவ குகை என்று கோயிலுக்குத் தென்புறமாக வெகுதூரத்தில் செங்குத்தான இடத்தில் நுழையமுடியாத ஓர் இடுக்கான கற்சந்து காட்டப்பட்டு வருகிறது. இது முற்றும் நம்ப முடியாததாக யிருக்கின்றது. மிருகங்கள்போலும் பிரஸவிக்கமுடியாத ஓர் கல்லிடுக்கில்



ஸீதை இரு மக்களையும் பிரஸவித்தனள் என்றால் இதைவிட மூடத்தனம் வேறு என்ன இருக்கின்றது? ஸீதை பிரஸவிப்பதற்கு அனேக மிருதுவான விசித்திர சிலாதலங்களும், கோயில் மண்டபங்களும் இருக்கப் பிரஸவிப்பதற்குச் சிறிதும் யோக்கியதையில்லாத கல்லிடுக்கில் பிரஸவிக்கப்பட்டதெனல் மலடி மைந்தன் கதைபோல் அசம்பவமாகும். ஆதலால் ஸீதாபிராட்டியின் பிரஸவஸ்தானம் முக்கியாசல ஈசுவரர் தேவாலயத்திற்கு ஸமீபத்தில் உள்ள மண்டபங்களுள் ஒன்றில் இருக்கவேண்டும். இது இவ்வாறு இருக்க, அம்மன் இருகுழந்தைகளைப் பிரஸவித்தது பற்றி வாசகர்களுக்கு ஓர் ஸந்தேகம் ஜனிக்கலாம். கம்பராமாயணத்தில் ஸீதை குசனை மாத்திரம் பிரஸவித்தனளென்றும், இலவன் வால்மீகியின் ஸங்கல்ப சிருஷ்டி யென்றும் கூறப்பட்டிருக்கின்றது. வால்மீகி இராமாயணத்தில் இரட்டைக் குழந்தைகளைப் பிரஸவித்தார் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஒன்றுக்கொன்று முரண்படக்கூடிய இச்செய்தி, யுக்தி அநுபவவாயிலாக ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு முக்கியாசல புராணத்தில் (அல்லது வால்மீகி இராமாயணத்தில்) கூறப்பட்டிருப்பது பெரும்பாலும் அங்கீகரிக்கற்பால தென்பதில் ஐயமிராது. வால்மீகியின் மானஸசிருஷ்டி யென்னும் இரண்டாவது பக்ஷத்தில் நம்பிக்கை கொள்வதாலும் புராண பக்தர்களுக்குப் பாதகமில்லை. ஆனால் புராணத்தைப் பெரும்பாலும் யுக்தி, அநுபவங்களுக்கு முரணில்லாமல் ஆராய்ச்சி செய்வது

புராணபக்தர்களின் அபிவிருத்திக்கு இன்றியமையாததாம். நிற்க, ஜானகியின் இருமைந்தரும் நாளொரு மேனியாயும் பொழுதொரு வண்ணமாயும் வளர்ந்து நாளுக்குநாள் அவர்களுடைய சரீரமும், மனமும், தைர்யமும், அறிவும் ஒருங்கே மாறுதல் அடைந்து வந்தனர். அம்மனும் குழந்தைகள் விஷயத்தில் ஜாக்கிரதையாய்க் களிப்புடன் கவனத்தைச் செலுத்திவந்தனள். இப்படி வால்மீகியும் மற்ற சிஷ்ய கணங்களும் உல்லாஸமாய் வாழ்ந்து வரினும் வால்மீகருக்கு மாத்திரம் ஓர் எண்ணம் உள்ளே தோன்றிக் கொண்டிருந்தது. ஓர்நாள் ஸ்நானம் பண்ணி அநுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டு, முக்கியாசல ஈசுவரருக்கு விதிப்படி பூஜை முதலியன செய்து, அவர் ஸன்னிதிக்கு எதிரில் நின்று பகவானை வெகுநேரம் ஸ்தோத்திரஞ் செய்து, முடிவில் ஸன்னிதானத்தில் தண்டம் போல் விழுந்து நமஸ்கரித்து, இருகைகளையும் கூப்பி சிரஸில் வைத்து, ஆனந்தக் கண்ணீர் கண்களினின்றுங் கரை புரண்டு ஓட, மனம் ஸர்வாந்தர்யாமியான பகவானிடத்தில் லயம் அடையும்படி தியானித்த வண்ணமாய் நின்றனர். பக்த பராதீனரான சுவாமியும் மகர்ஷியின் பக்திக்குப் பரவசப்பட்டு அவரால் செய்யப்பட்ட ஸ்தோத்திரப்பாக்களுக்கு மனமுவந்து அவர் முன் பிரஸன்னராய் முனியைக் கடைக்கண் பார்த்து, உமது ஸ்தோத்திரத்தால் நான் மிகக்களிப்புற்றேன், உமது விருப்பம் என்ன? அதை விக்ஞாபித்தால் இக்கணத்திலேயே முடித்துத் தருவேன், தாமதியாது சொல்வீராக்



என்றனர். அப்போது தாபஸோத்தமரான மகர்ஷியும் மகிழ்வுடன் விண்ணப்பித்ததாவது, ஸ்வாமின்! இன்றைக்கு நான் கிருதார்த்தன் ஆனேன். என் பேரில் பகவானது அநுக்கிரகம் இருக்குமானால் அதுவே போதுமானது. பகவத் ஸான்னித்யத்தைவிட வேறு வரம் யாது எனக்கு வேண்டியிருக்கின்றது. யோகிகளாலும், கர்மிகளாலும் அப்ராப்யமும், அதர்சனீயமுமான பகவத் ஸ்வரூபத்தைக்கண்டு களித்ததே நான் எய்த வேண்டிய இறுதிப் பயன் என்று கூறி, பக்திமேலீட்டினால் புளகித சரீரராயும், ஆனந்தக் கண்ணீர் தாரை தாரையாக ஒழுகினவராயும், மௌனியாயும், சுவாமி ஸன்னிதானத்தில் நின்றிருந்தார். அப்போது சுவாமியும் மோக்ஷேச்சுவான மகர்ஷியினுடைய கருத்தை யறிந்து மீண்டும் சுவாமி அருளிச் செய்ததாவது, உம்முடைய மனோரதம் இன்னம் சில காலஞ் சென்று பூர்த்தியாகும். ஆதலால் நீர் இது சமயம் குழந்தைகளுடன் ஸீதையையும், மற்ற சிஷ்ய கணங்களையும் அழைத்துக்கொண்டு உம்முடைய பூர்வ ஆசிரமத்திற்குப் போய்ச் சுகமாய் வாழ்வீராக, உலகம் சீர்திருந்த வேண்டியதற்கு உம்மால் இன்னமும் சில கார்யம் ஆகவேண்டியிருத்தலால் அதுவரைக்கும் உம்முடைய சரீரத்தை வைத்திருத்தல் வேண்டும். துஷ்ட ஸம்ஹார, சிஷ்ட பரிபாலனத்தின் பொருட்டு ஸ்ரீமந்நாராயணர் இராமனாக அவதரித்திருப்பது உமக்கும் தெரிந்ததே, அவர் இப்போது ஓர் அசுவமேதயாகஞ் செய்ய முற்பட்டிருக்கிறார்.

ஸாதாரணமாக அரசர்கள் அசுவமேத யாகஞ்செய்யும்
போது, விலையுயர்ந்த லோகங்களால் செய்யப்பட்ட
பட்டம் ஒன்றைக் குதிரைமீது கட்டி, ஓர் விளம்பரத்
தையும் தொங்க விட்டு, பூப்பிரதக்ஷணஞ் செய்வதன்
பொருட்டு, மந்திரத்தில் சமர்த்தர்களான ருத்விக்கு
களால் மந்திரித்து விடுத்தல் வழக்கம். ஓர் அசுவ
மேதயாகம் கணக்கற்ற பொருள் விரயத்தால்முடியக்
கூடியது. மேலும், அந்த யாகத்தை நிறைவேற்று
கிறவருக்கு யாரும் எதிரி இல்லாதிருத்தலும் வேண்
டும். பட்டங்கட்டி விடுக்கப்பட்ட குதிரையை யாரா
யினும் எதிரிகள் பிடித்துக்கட்டினால், அந்த யாகத்
தைச்செய்ய முற்பட்டவர் தகுதியற்றவர் எனக் கரு
தப்படும். குதிரையைக் கட்டினாற் போதாது. கட்
டப்பட்ட எதிரியுடன் யாகஞ்செய்ய முற்பட்டவர்
போர்புரிந்து அவனைக் கீழடக்கவும் வேண்டும். அப்
படி குதிரையைப் பந்திக்க முடியாதவர்களும் கீழ
டக்கப்பட்டவர்களுமாகியவர்கள் யாகஞ்செய்பவருக்
குக் கீழ்ப்படிந்து யாகத்திற்கு வேண்டிய பொருளை
யும் உதவவேண்டும். குதிரைமேல் தொங்க விடப்பட்
டிருக்கும் விளம்பரத்தில் யாகஞ்செய்பவரின் பெயரும்
மற்றும் கண்டிருக்கும். இதை யனுஸரித்து இராம
னால் ஆரம்பிக்கபட்ட யாகத்திற்கு மேற் கூறப்பட்
டதுபோல் குதிரையின் கழுத்தில் விளம்பரமும், ஓர்
ஸ்வர்ணத்தால் செய்யப்பட்ட பட்டமும் கட்டப்பட்டு
வஸிஷ்டர் முதலிய புரோஹிதர்களால் மந்திரித்து
அனுப்பப்பட்டுளது. அவ்விளம்பரத்தில் “இந்தக்



குதிரையானது தசரதருடைய புதல்வனும், ஜனக
மஹாராஜருடைய மருமகனும் ஆன இராமனால்
விடப்பட்டது. இதைப் பராக்ரமசாலிகள் யாராயி
னும் பிடித்துக் கட்டக்கடவர்.” என்று வரையப்பட்
டிருக்கும். அக்குதிரையைப் பின் தொடர்ந்து இலக்ஷ்
மணன், பரதன், சத்ருக்னன், சுக்ரீவன் முதலியோர்
வருவார்கள். அது பூப்பிரதக்ஷிணம் செய்துவருவ
தற்கு இன்னம் சில ஆண்டுகள் ஆகும். அப்போது
அந்தக் குதிரை இவ்வாசிரமத்திற்கு ஸமீபத்தில் வரும்.
பட்டமும், தொங்க விடப்பட்ட விளம்பரமும் உள்ள
அக் குதிரையை அச்சமயம் இலவன் பார்க்க
நேரிடும். அதிக ஸாமர்த்தியமும், ரோஷமும் பொரு
ந்திய இலவன்! ஈது என்ன ஆச்சர்யம்! தசரத
மகாராஜனது புத்திரனும், ஜனகருடைய மருமகனு
மானவன் இராமனும். அவனால் விடப்பட்ட குதிரை
யையாராயினும் சாமர்த்திய சாலிகள் பிடித்துப் பந்திக்
கலாம என்று எழுதியிருப்பதைப் பார்த்து, ‘அவரு
டைய குதிரையை இதோ ஒரு கணத்தில் பிடித்
துப் பந்திக்கிறேன்’ என்று சொல்லி, மிக்க சுலப
மாய் குதிரையைப் பிடித்துப் பந்தித்து, பட்டத்தை
யும் எடுத்து, விளம்பரத்தையும் கிழித்துப் போடுவான்.
அதுவுமன்றி, சண்டைக்குச் சன்னத்தனாய் அவ்விடத்தி
லேயே நிற்பான். குதிரையைப் பின் தொடர்ந்து வந்த
இலக்ஷ்மணன் முதலியோர் ஆனவரைக்கும் அவனுடன்
சண்டை செய்து பார்ப்பார்கள். ஒன்றுஞ்சாத்தியப்
படாததைக் கண்டு இராமனுக்கு விஷயத்தைத் தெரி

விக்கவே, இராமனும் அதிக ரோஷத்துடன் வந்து அவ்
விளங்குமாரனோடு சண்டை செய்வான். இராமனும்
முறியடிக்கப்படவே, இவ்விரு குமாரர்களின் வீரபராக்
கிரமங்களைப் பார்த்து அதிக ஆச்சர்யத்தோடு இரா
மன் அவர்களைப்பற்றி உம்மை விசாரிப்பான். இரா
மன் உம்மை, சிங்கத்தைப்போன்ற பராக்ரம சாலிக
ளும், எல்லா ராஜ லக்ஷணங்களும் அமையப் பெற்றவ
ருமான இக்குமார்கள் யாவர்? இவாகள் யாரு
டைய வம்சத்தில் தோன்றியவர்கள்? எதன் பொருட்டு
இவ்விடத்திற்கு வந்தனர் இவை, எனக்கு விளங்க
உரைக்கவேண்டும், எனக்கேட்பன். அப்போது நீரும்
அவர்களைப்பற்றிய விருத்தாந்த மெல்லாம் அவ
னுக்கு உரைப்பீர். அப்பால் ஸீதையைப்பார்த்து
இராமன் சிறிது ஐயுறுவன். அத்தருணம் இராமனால்
சந்தேகிக்கப்பட்ட ஸீதையும், எல்லோருடைய முன்
னிலையிலும் பூமாதேவி ஸாக்ஷியாகப் பூமிக்குள் பிர
வேசிப்பாள். இராமன் அப்போது கோபாக்ராந்த
னாய்ப் பூமியைப் பிளந்து ஸீதையைக்கொணா
முயல்வன். அத்தருணம் அவ்விடத்தில் இருக்கும்
வஸிஷ்டர் முதலியோர் இராமனுடைய கோபத்தை
ஆற்றிச் சாந்தப்படுத்துவார்கள் பின்பு இராமனும்
இலவ குசலர்களுடன் அயோத்தியைக்குப் போவான்.
ஒ முனிவரனே? மகாத்மாவாய இராமனுடைய இத்
தகைய செய்கைகளை நேரில் பார்த்தும் கேட்டும்; ஸா
க்ஷாத்மகாவிஷ்ணுவே இராமனாக அவதரித்திருப்ப
தால் அவருடைய கதைகளை நடந்தவண்ணம் உலகம்



உய்வதன் பொருட்டு செய்யுள் வடிவமாக இயற்ற
வேண்டும். அதனால் உமக்கு அழியாப்புகழும், பத
மூங் கிடைக்கும். ஆதலால் துவாபரயுகம் வரும்
வரைக்கும் முமுக்ஷுக்கள் என்னையும் மகா விஷ்
ணுவையும் ஆராதிப்பார்கள். என்னை ஆராதனை
செய்வதால் மட்டும் முக்தி கிடைக்காது. அப்ப
டியே விஷ்ணுவை மாத்திரம் பூஜிப்பதாலும் முக்தி
யெய்தாது. அப்போதுதான் உமக்கும் முக்தி கிடைக்
கும். ஆதலால் அக்காலத்தை எதிர்பார்க்கக் கடவீர்.
துவாபரயுகம் வரும் ஸமயத்தில் நீர் மறுபடியும்
இவ்விடம் வருக. இப்போது இவர்களுடன் தம
ஸாநதி தீரத்தில் உள்ள உம்முடைய ஆசிரமத்திற்
குப் போகக்கடவீர். மகரிஷி வால்மீகியும் ஈசுவாரு
டைய வார்த்தைகளைக்கேட்டு அதிக சந்தோஷத்து
டன் அவரை நமஸ்கரித்து, தனது பூர்வ ஆசிரமத்திற்
குப்போக எல்லாரோடும் பிரயாண மானார் போகும்
வழியில் தண்டக வனத்தில் உள்ள அக்னிய மகரிஷியி
னுடைய ஆசிரமத்தில் சில நாட்கள் இளைப்பாறி, அவ்
விடத்திலிருந்து தனது ஆசிரமத்திற்குச் சென்றார்.
அவ்விடத்தில் அனேக வர்ஷங்கள் இருந்து பிறகு
முக்கியாசல ஈசுவரர் சொல்லிய காலம் ஸமீபித்து
வரவே, வால்மீகி, ஸீதை முதலியோர் மறுபடியும்
முக்கியாசலத்திற்கு விஜயஞ் செய்தார்கள். முக்கியா
சலத்திற்கு விஜயஞ்செய்த பின்னாட்களுக் கெல்லாம்,
ஸ்ரீராமனுடைய பட்டங்கட்டிய குதிரை வருதலும்,
இலவன் அதைக் கட்டலும், இராமனைப் போரில்

தோற்கடித்தலும் ஸீதை பூமிக்குள் புகுதலுமாய எல்லாம் ஒன்று விடாமல் நடந்தேறின. இது முடிந்த பின் முக்கியாசலத்தில் உள்ள தமது ஆசிரமத்தில் தபோ நிஷ்டராய் வெகுகாலம் வீற்றிருந்தனர். அப்போது அவருக்கு ஸ்ஞானம், பானம் முதலியவற்றிற்கு அவருடைய ஆசிரமத்தின் மேற்புறமாக ஓர் தீர்த்தத்தை நிர்மித்து அதற்கு வால்மீகி தீர்த்தம் என்னும் பெயரையும் வழங்கினர். வால்மீகியும் இந்தத் தீர்த்தத்தில் ஸ்ஞானாதிகளை முடித்துக்கொண்டு முக்கியாசலேசுவரனையும், மாதவனையும் தியானித்து முடிவில் அபேதமுக்தி யடைந்தனர்.

### வால்மீகி தீர்த்த மாகாத்மியம்.

வால்மீகியால் நிர்மிக்கப்பட்ட தீர்த்தத்தில் ஸ்ஞானஞ் செய்தால் ஸர்வ பாபங்களும் நிவர்த்தியாகும். மனிதருக்கு உண்டாகக்கூடிய பாபங்கள் பலவகைப்பட்டவை. அவைகளுள் முக்கியமாய்க் கருதப்படக்கூடியவை, பிரம்மஹத்தி, சுராபானம், குருவின் ஆஸனத்தில் உட்காருதல், குருபத்னியைப் புணர்தல் முதலியவைகளாம். இந்தப் பாபங்கள் சுலபமாகத் தீரக்கூடியவையல்ல. முன் காலங்களில் இத்தகைய பாபங்களைப் போக்க ஜென்மந்தோறும் கடுந்தபம் புரிய வேண்டும். வால்மீகரால் நிர்மிக்கப்பட்ட தீர்த்தம் இருக்க, இப்போது அவ்விதம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஸர்வ மகா பாதகங்களும் உப பாதகங்களும் அதில் ஸ்ஞானஞ்செய்த மாத்திரையிலே பஞ்சு போல் பறந்துவிடும்.



மலையாள தேசத்திய ஓர் பிராமணன் தனது ஸ்வதர்மானுஷ்டானங்களினின்றும் நழுவி கர்மப் பிரஷ்டனாய் வால்மீகி தீர்த்தத்தில் ஸ்ஞானஞ்செய்து மோக்ஷம் அடைந்தான். அத்தகைய சொலற்கரிய சிறப்புவாய்ந்த வால்மீகி தீர்த்தத்தில் ஸ்ஞானம் செய்வதனால் உண்டாகும் பலன் அவாச்யமானது என்று சூத புராணிகர் சௌநகாதிகளுக்கு உபதேசித்தனர். சுபம்.

### நான்காவது அத்தியாயம்.

### முற்றிற்று.

## ஐந்தாவது அத்தியாயம்,

### கோலபனுடைய சரித்திரமும், வால்மீகி தீர்த்தத்தின் பெருமையும்.

நைமிசாரண்ய வாஸிகளான சௌநகாதிகள்
ஸூதமுனிவரை மீண்டும் கேட்டதாவது. புரா
ணோத்தமரான ஓ முனி சிரேஷ்டரே! முன் அத்தி
யாயத்தில் குறிப்பிடப்பட்ட அவ்விப்பிரன் யார்?
அவனால் செய்யப்பட்ட பாபங்கள் யாவை? வால்மீகி
தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வதால் பாபங்கள் எல்லாம்
எப்படி நிவிர்த்தியாகும்? இதை எமக்குத் தெளிவாய்
விளக்கவேண்டும். இதற்கு சூதர் சொல்லியதாவது

மலையாள தேசத்தில் கோலபன் எனப்பெயர்
உடைய ஓர் விப்பிரன் இருந்தான். அவன் வேதவேதா
ங்கங்களின் தத்வார்த்தங்களை நன்கு உணரப்பெற்ற
வன். புராண நிபுணன். அதுவுமல்லாமல் ஜ்யோதிஷ
சாஸ்திரத்தில் அபார யோக்கியதை உள்ளவன்.
சிரௌத, ஸ்மார்த்த கர்மங்களின் சூக்ஷ்மம் உணர்ந்த
வன். ஆனால் பரமதரித்திரன். இவனுக்குக் குழந்தை
களோ கணக்கற்றவர்கள். இவர்களைக் காப்பாற்றுவ
தற்குத் தக்க வருமானம் வரக்கூடிய தொழிலும் கிடை
யாது. ஆனால் அவன் உபாத்தியாயத் தொழிலில் அம
ர்ந்தான். தற்காலத்தைய உபாத்தியாயர்களைப்போன்று
விஷய ஆராய்ச்சி இல்லாதவன் அல்லன். இத்
தொழிலால் குடும்ப ஸம்ரக்ஷணைக்குப் போதிய



ஊதியம் பெற முடியவில்லை. குழந்தைகளைக் காப்
பாற்றச் சக்தியற்றவனாதலால், இதைவிட அதிக
வருமானம் எப்படி ஸம்பாதிக்கலாமென்று பலவும்
யோசித்தான். ஒன்றும் புரியவில்லை. முடிவில் பிச்
சைபுகுதலைக் கைக்கொண்டான். எத்தொழிலைப் புரிந்
தாயினும் பணத்தைச் சேர்க்கவேண்டுமென்று விரும்பி
கோலபன் அதுமுதல் சும்மாயிருக்கவில்லை. பிறர் பொ
ருள் எல்லாவற்றையும் தன் பொருள் என்றே உறுதி
கொண்டான். யாசகத்தொழில் பிராம்மணர்களுக்குக்
குலத்தொழில் என்று சிலர் நினைப்பதுபோல் கோலப
னும் புரோகிதத் தொழிலாலும், தானம் வாங்கல் முத
லியவற்றாலும், ஏறக்குறைய ஓர் தனவந்தன் ஆவதற்கு
வேண்டிய ஆடு, மாடு முதலியவைகளைச் சம்பாதித்து
விட்டான். பசுக்களில் ஒரு நூறையும், எருமை மாடுக
ளையும் அதில் குறையாதபடி சேர்த்துவிட்டான். ஆனால்
ஆடுகளை மாத்திரம் ஓர் ஆயிரத்திற்குமேல் தானம்
வாங்கிக் கூட்டிவிட்டான். இத்துடன் அவன்
திருப்தியடையவில்லை. எண்ணெய், நெய், வஸ்திரம்,
உப்பு முதலியவைகளையும் யாசகமாக வாங்குவது வழக்
கம். ஆனால் இவைகளைக்கொண்டு குழந்தைகளையா
வது காப்பாற்றுவானாகில் யாசகம் எடுப்பதற்கு ஓர்
அர்த்தம் உண்டு எனலாம். எப்படியும் பணக்காரனாக
வேண்டுமென்னும் ஆசையால் தூண்டப்பட்ட கோல
பன் மிக நிகிருஷ்டமும், மீளா எரி ரவில் வீழ்த்தத்
தக்கதுமான கன்யகா விக்ரயத்தையும் செய்து பணத்
தைப் பறிக்கலானான். மனிதர்களுக்குப் பொதுவாயும்,

சிறப்பாகக் கோலபனுடைய குலத் தொழிலாயும்
உள்ள, தீர்த்தாடனம், தேவாலய பூஜை ஆகியவைக
ளிலும் பணத்தையே முக்கிய நோக்கமாகக் கருதி
னான். தனது ஆத்மார்த்திக விஷயத்தில் ஓர்
அணுவளவும் மனப்பூர்வமாய் உழைத்தவனல்லன்,
ஆடுமாடுகளைச் சம்பாதித்தானே யன்றி, அவைகளைக்
காப்பாற்றும் விஷயத்தில் சிறிதாயினும் சிரத்தையெடு
த்துக் கொள்ளவில்லை. அவைகளுக்கு இரையைக்
கொடுக்காமல் இரவு பகலாகக் கட்டிப்போடுவதே
அவனுடைய வழக்கம். மாடுகள் தற்செயலாகக்
கன்று போட்டால் பாலைக் கறக்கும் ஸமயந்தவிர
மற்றகாலங்களில் அவன் மாடுகளைப் பார்ப்பதேகிடை
யாது. மற்றகாலங்களில் கன்யகை விக்ரயம், அன்ன
விக்ரயம் முதலிய ஈனத்தொழில்களைப் புரிவதற்கே
சரியாயிருக்கும். கன்றுக்குட்டிகளுக்கு ஓர் துளிபால்
கூடக் கொடாமல் இரத்தத்தையும் கறந்து சாப்பிடு
வான். இப்படித் தினந்தோறுஞ் செய்துவருங்காலத்
தில், இரவில் எல்லோரும் உறங்கிய பின், அப்பசுக்
களில் ஒன்று நல்ல பலமான கயிற்றால் கட்டப்பட்டி
ருப்பினும், அதை யறுத்து அன்னியருடைய வயல்
களிற்சென்று பயிர்களைச் சம்பூர்ணமாக மேய்ந்து,
சூர்ய உதயத்திற்கு முன்பே தனது ஸ்தலத்தில்
வந்து நிற்பது வழக்கம். ஒரு நாள் அந்தப் பசு
வழக்கமாகப் பயிர்களை மேய்ந்து திரும்பித் தன்னிடத்
திற்கு வந்து நிற்கையில், அவைகளில் ஒரு பசு பின்
வரும் வண்ணம் அதைக் கேட்டதாவது. நீ எல்லோ



ரும் உண்டு உறங்கியபின் இப்படித் தினந்தோறும் திரு
டி வயிற்றை வளர்ப்பது நியாயமா? நாமெல்லோரும்
கோலபனுடைய கையில் அகப்பட்டுப் புல்லுந் தண்ணீ
ருமில்லாமல் அவதிப்படுவதற்கு, முன்னம் என்ன பா
பத்தைச் செய்தோமோ அறியேம். இப்போது அனு
பவிப்பது போதாதென்று எண்ணியோ நீ இப்பாபத்
தொழிலைச் செய்குனை? இப்படித் திருடி வயிற்றை
வளர்ப்பதைவிடப் பிராணனை விடுவதேமேலாகும். அன்
னியர்கட்குத் துன்பத்தை விளைவிப்பவர்களுக்கும், பிற
ர்பொருளை அபகரிப்பவர்களுக்கும், நம்பிக்கைத்
துரோகம் பண்ணுகிறவர்களுக்கும் பிராயச்சித்தமில்லை
என்று கூறப்படுகிறது. அதற்கு மறுமொழி
யாகத் திருட்டுத்தொழில் புரியும் பசு கூறுவ
தாவது. 'நீ கூறியது யாவும் உண்மையே. நான் திரு
டிச் சாப்பிடுவதனால் எனக்கு ஒருவித பாபமும் உண்
டாகாது. இதன் மூலமாக ஏற்படும் எல்லாவித பாபத்
திற்கும் அவனே காரணனாவன். இதன் பலனையும் கோல
பன்தான் அனுபவிக்கக்கூடியவன். ஏனென்றால், கற்பு
நிறைந்த பார்யை, இளங்குழந்தை, கிழவர்களான
தாய் தந்தையர்கள், அநாதர்களான வேலையாட்கள்,
தன்னுடைய பசுக்கள் ஆகியவைகளைக் காப்
பாற்றச் சக்தியற்றவனுக்குப் பிரம்மஹத்தி தோஷம்
ஸம்பவிக்கும். கோலபன் என்னுடைய பசிக்காக ஒரு
ஆகாரத்தையும் அளிப்பதில்லை. பசியால் மெலியும் என்
னால் செய்யப்படக்கூடிய எல்லாப் பாபங்களும் அவ
னுக்கே உரியன. பசியின் கொடுமையால் ஜந்துக்கள்

என்னதான் செய்யாதிருக்கக்கூடும்? மகா ஞாதாவாயி
னும் பசியால் வருந்தும்போது, நியாயத்திற்குப் புறம்
பானவழிகளாலும் அப்பசியை நிவிர்த்திக்க ஒருப்படு
வர். இப்படிப்பசுக்களின் ஸம்பாஷணைகளைப்படுக்கையி
லிருந்து கேட்ட கோலபனும் பசுவின் ஸமீபத்திற்கு
வந்து அதை நமஸ்கரித்துச்சொல்லுகின்றான். 'ஓ! பசு
வடிவமாக வந்த தாயே! நான் பாபி. பாபகர்மங்
களைச் செய்பவன். பாபமே உருவமாக வந்த
வன். எனது ஆத்மாவும் பாபத்தால் மலினப்பட்
டிருக்கின்றது. மங்களசீலையான ஓ! பசுவே! தர்ம
மார்க்கத்தினின்றும் பிரஷ்டனாய என்னைக் காப்பாற்
வேண்டும். எனது குலத்தொழிலாகிய வைதீக கர்ம
மாக்களையெல்லாம்விட்டு எப்படியாயினும் தனத்தைச்
சேர்க்க வேண்டுமென்னும் துராசையால் பால்யம்
முதற்கொண்டே பாபத் தொழில்களைப்புரிந்து வரு
கின்றேன். நான்ஸந்தியா வந்தனத்தையும்செய்கிலேன்.
என்னால் ஹோமமுஞ் செய்யப்பட்டதில்லை. தேவர்,
பிராம்மணர் இவர்களைப் பூஜித்தும் அறியேன். பஞ்ச
மகா எக்ஞங்களையும் செய்திலேன். பசுக்களை ஒரு
பொழுதாயினும் ஸம்ரக்ஷித்தும் அறியேன். பண
ஆசையால் பைத்தியம் பிடிக்கப்பட்ட யான்
ஸம்ஸார துக்கத்தைப் போக்கடிப்பவர்களான பரம
சிவன், மகாவிஷ்ணு, அம்மன் முதலான தேவர்களைக்
கனவிலும் நினைத்தும் அறியேன். ஸர்வ நோய்களையும்
நீக்க வல்ல சூர்ய மூர்த்தி, விநாயகர் முதலிய
தேவர்களைப் பூஜித்து மறியேன். அறம் என்பதை இன்



னதென்றும் உணரேன். ஒரு வேளையாயினும் ஒரு
பிரம்மசாரிக்கு உணவு அளித்தவனுமல்லன். சாதுக்
கள், ஏழைகள் முதலியவர்க்கு ஓர் ஆடையாயினும்
தானஞ்செய்தவனுமல்லன். ஸ்ரீ ஸூக்தம், புருஷ
ஸூக்தம், சதருத்ரீயம் முதலிய மந்திரங்களை ஓதியு
மறியேன். நிழலையும், காய், கனிகளையும் தரத்தக்க மரங்
களை உற்பத்தி செய்தவனுமல்லன். ஏகாதசி, சிவராத்
திரி முதலிய விரதங்களை நோற்று மறியேன். இப்படி
நான் ஸர்வ பாபங்களிலும் மூழ்கியிருக்கின்றேன். என்
னால் செய்யப்பட்ட பாபங்களுக்கு ஒருவித பரிகார
மும் இருப்பதாகத் தெரியவில்லை. பிரம்மஹத்தி பாபத்
திற்காயினும் பிராயச்சித்த முதலியன விதிக்கப்பட்டி
ருக்கின்றது. கோர நரகத் துன்பத்தை அனுபவிக்கக்
கூடிய என்னுடைய இப்பாப கூட்டங்கள் நிவர்த்தியா
வதற்கு ஏதாவது உபாயமிருந்தால் எனக்குச் சொல்
லியருளவேண்டும். இதற்கு உன்னைத் தவிர வேறு
யாரும் யோக்கியதை உள்ளவர் இல்லையென்று உறு
தியாக நம்புகிறேன்' என்றிவ்வாறு கோலபன்சொல்ல.
அப்போது அப்பசு கூறுவதாவது. 'ஓ! கோலபனே! நீ
செய்த இப்பாபங்களுக்குப் பிராயச்சித்தம் இல்லை. பா
பமென்று உணர்ந்தும் செய்ததற்குப் பிராயச்சித்தமே
விதிக்கப்படவில்லை. ஆயினும் நூறுவருஷம் வரை தீர்த்
தாடனம் பண்ணவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்
கிறது. இதைத் தவிர ஸ்மிருதிகளில் ஒருவித பிராயச்
சித்தமும் விதிக்கப்படவில்லை. அப்படியாயினும் உன்
னால் செய்யப்பட்ட பாபகர்ம்மங்களுக்கு பிராயச் சித்

தம் ஒன்று சொல்லுகிறேன், கேட்பாயாக. மூன்று
உலகத்திலும் பிரஸித்தமான முக்கியாசல க்ஷேத்திரம்
என்று ஒன்று உளது. இது கீழ்ச்சமுத்திரத்திற்கு
பத்துமைல் தூரத்தில் உளது. அவ்விடத்தில் வால்
மீகியால் பிரதிஷ்டிக்கப்பட்ட சிவலிங்கமும், அவரால்
நிர்மிக்கப்பட்ட வால்மீகி தீர்த்தமும் இருக்கின்றன.
அந்தத் தீர்த்தத்தில் மூழ்கினால் உன்னுடைய பாபங்
கள் எல்லாம் நிவிர்த்தியாகும். வேறுவிதமாக இப்பா
பத்தைப் போக்க முடியாது. ஆதலால் நீர் சீக்கிரமாக
முக்கியாசல க்ஷேத்திரத்திற்குச்சென்று வால்மீகி தீர்த்
தத்தில் ஸ்நானஞ்செய்யக்கடவீர்' என்றது பசுவும்.
இப்படிக்கூறிய பசுவை நோக்கி 'ஓ! பரிசுத்த பசுவே!
இன்றைக்கு உங்களுடைய ஸம்பாஷணைகளால் நான்
கிருதார்த்தன் ஆனேன். ஆனால் உங்களுடைய பூர்வ
விருத்தாந்தத்தை அறியப்பேரவா உள்ளவனாயிருக்கி
ன்றேன். அதை மறைக்காமல் சொல்லுவீர்களென்று
நம்புகிறேன். பூர்வ ஜன்மத்தில் நீங்கள் யார்? எதனால்
நீங்கள் இப்பசுவடிவத்தை யடைந்தீர்கள்? பூர்வ ஜன்
மக்ஞானோதயம் உங்களுக்கு எப்படி யுண்டாயிற்று?
இவை எனக்கு விரிவாய் உரைத்தல்வேண்டும் என்ற
னன். இதற்கு அப்பசுவும் மறுமொழி கூறியதாவது:
நாங்கள் பூர்வஜன்மத்தில் அப்ஸரஸ்த்ரீகள். எங்களு
டைய பெயர் முறையே சித்ரரேகை என்றும், திலோத்
தமை என்றும் அழைப்பார்கள். ஓர் முனிவரரின் சாப
ததால் நாங்கள் இக்கோரூபத்தை யடைந்தோம்'
என்றுகூற, இதைக்கேட்ட கோலபன் 'ஓ! மங்களஸ்வ



ரூபிணியான ஓ ஆனே! எந்த முனியால் உங்களுக்கும்
இக்கோரமான சாபந் தரப்பட்டது ? நீங்கள் இவ்
வளவு கஷ்டத்தை அனுபவிக்க என்ன குற்றம் செய்
தீர்கள் ? அந்த முனிசிரேஷ்டரின் பெயர் யாது ?
இதை விரிவாய்க் கேட்பதற்கு விரும்புகின்றேன்'
என்றனன். அப்போது பசுவும் தன்னுடைய பூர்வ
விருத்தாந்தங்களை யெல்லாம் கூறத்தொடங்கினது.
அவை வருமாறு. ஓ கோலபனே? எங்களுடைய பூர்வ
சரித்திரங்களைச் சொல்வோம் கேட்பாயாக

சதாதபர் என்ற ஓர் முனிவரர் இரேவா நதியில்
தினந்தோறும் ஸ்நானம்பண்ணி, விந்தியாசல பர்வதத்
தில் உக்ரமான தபம்புரிந்து வருங்காலத்தில் தேவர்
களுக்கெல்லாம் அதிக பயமுண்டாயிற்று. சதாதப
ருடைய தபம் சித்தியானால், தேவேந்திரன் இந்திரப்
பட்டத்தை இழக்கநேரிடும். அதற்கு இடமில்லாமற்
செய்ய இந்திரன் பலவும் ஆலோசித்தான். சதாதப
ருடைய தபவிற்கு விக்கினத்தை உண்டுபண்ணுவதல்
லாமல் வேறு உபாயம் ஒன்றும் அவனுக்குத் தோன்ற
வில்லை. ஆதலால் கடைசியாக தேவ ஸ்திரீகளையனுப்பி
அவருடைய தபம் சித்தியாகாதவாறு செய்யவேண்டு
மெனத் தீர்மானித்தான். இதற்கு சித்திரரேகையும்,
திலோத்தமையுந்தான் தகுதி யுடையவர்களென்று
எண்ணி, எங்களைக் கூப்பிட்டு சதாதபருடைய தப
விற்கு இடையூற்றை உண்டுபண்ணவேண்டுமென்று
வேண்டினான். அவனுடைய வேண்டுதலுக்கு இணங்கி

நாங்களிருவர்களும் சதாதபர் தபசைப் புரியுமிடமான
விந்தியாசலத்திற்குச் சென்றோம். ஆடல், பாடல் முத
லிய எங்களுக்கு தெரிந்த அனந்தமுறைகளைப் பிர
யோகித்தும், அம்முனிவருடையமனம் சிறிதும் இசை
வில்லை. கடைசியாக நாங்களிருவரும் பசுவுருவம் ஏற்று
அவர் ஸமாதியிலிருந்தபோது அருகில்சென்று நா
வால் நக்கினோம். இப்படி அவருக்குத் தொந்திரவைக்
கொடுத்துக்கொண்டிருக்கையில், அவர் ஸமாதி கலைந்து
கோபத்துடன், காரணமில்லாமல் ஸமாதிக்குத் தடை
யை யுண்டுபண்ணியதால் நீங்கள் இருவரும் பூலோகத்
தில் பசுக்களாகவே பிறந்து, பசியாலும், தாகத்தாலும்
எப்போதும் மெலிவீர்கள். என்னுடைய சாபத்தால்
இப்படி நீண்டகாலம் துன்பத்தை யனுபவிப்பீர்க
ளாக' என்றுகூறி மௌனத்திலிருந்தார். முனியின்
சாபத்திற்காளானதுபற்றி மிக்க துயரப்பட்டு சோந்த
உருவத்துடன் அவரை வணங்கி 'ஓ முனிசிரேஷ்டரே?
நாங்கள் இந்திரனுடைய தூண்டுதலால் இவ்விடம் வர
லானோம். நாங்கள் அவருக்கு என்றைக்கும் அடிமை
கள். அவருடைய ஆணைப்படி தங்களுடைய தபசைக்
கலைக்கவந்த அடிமைகள்மீது கோபிப்பது தர்மமா? பா
தந்திரர்கள் என்றைக்கும் பசுக்களேயாவர். அன்னியர்
களுக்கு அடிமையாயிருப்பதின் மூலமாக ஏற்படுந்
துக்கம் இன்னதென நினைக்கமுடியாததாயிருக்கின்றது.
அந்தோ? உங்களுடைய சாபத்தால் சகிக்கமுடியாத
வெயிலாலும், மழையாலும் அல்லற்படுவதை யார்தான்
பொறுத்துக்கொள்ளமுடியும்? ஓ! தபோதனரே! தற்



போது உங்களுடைய அடிமைகளான எங்களுடைய
அபராதத்தை இச்சமயம் பொறுத்துக்கொண்டு எங்
களை மன்னிக்கவேண்டும் என்றது. தேவஸ்திரீகளைப்
பார்த்து அப்போது சதாதபர் ஓ! தேவாங்கனைகளே?
என்னுடைய வார்த்தைகள் சத்தியில்லாதவைகளல்ல.
அவை ஒருக்காலும் வீண் ஆகா. ஆனால் ஒன்று,
பரதந்திரைகளான நீங்கள் மிகவும் வணங்கிக் கேட்ப
தால் அதற்கு விமோசனத்தைச்சொல்லுகிறேன் கேட்
பீர்களாக. எனது தபசை விக்கினப்படுத்த நீங்
கள் யாரால் அனுப்பப்பட்டீர்களோ, அந்த இந்திர
னும் ஓர் தரித்திரப் பிராமணக் குடும்பத்தில் அந்தணச்
சிசுவாய்ப் பிறந்து, வேதப்பிரஷ்டனும் ஆகி நீண்ட
காலம் இப்படி வஸிக்கக்கடவன். நீங்களும் அவன்
கையிற் சிக்கி, உங்களுக்கு அவனால் துன்பம் அதிகரிக்
கும்போது அது விஷயமாய் உங்கள் இருவருக்
கும் ஸம்பாஷணை நடக்கும். அப்போது உங்களு
டைய ஸம்பாஷணையை அவன் கேட்பான். அந்தக்
கணத்திலேயே உங்களுடைய சாபம் விமோசனமா
கும். முன்போல் நீங்கள் தேவலோகம் செல்வீர்கள்.
உங்களுடைய சாபத்திற்குக் காரணபூதனான இந்திர
னும் முக்கியாசலத்திற்குச்சென்று வால்மீகி தீர்த்தத்
தில் ஸ்நானஞ்செய்தால் அவனுடைய சாபமும், பாப
மும் விமோசனமாகும். வால்மீகிதீர்த்த மகிமையை
கோலபனுக்குச் சொல்லுவதன் மூலமாக உங்கட்குச்
சாபநிவர்த்தியும், வால்மீகி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்
வதால் கோலபனுக்குச் சாபவிமோசனமுமாம் என்

றனர் சதாதபமுனிவரும். ஓ!கோலபப் பிராம்மணனே!
இப்படி சதாதப மகரிஷியினுடைய சாபத்தால் நாங்க
ளிருவரும் பசுக்களாயும், இந்திரனாகிய நீ கோலபனா
யும் ஜனித்தோம். ஆதலால் இன்று எங்கள் இருவ
ருக்கும் சாபம் விமோசனமாயிற்று. நாங்கள் முன்
போல் தேவலோகத்திற்குப் போகின்றோம். உமக்கும்
சீக்கிரத்திலேயே மங்களம் உண்டாகக்கடவது' என்று
உரைத்து விமானத்திலேறி சித்திரலேகையும், திலோத்
தமையும் வான் உலகம் அடைந்தனர். இதைப் பார்த்
திருந்த கோலபன் போச்சர்யமடைந்து அக்கணத்தி
லேயே முக்கியாசலத்தை நோக்கி நடந்தான். அவ
னும் சிலநாட்களில் முக்கியாசலத்தை யடைந்து அம்
மலை, வணங்கி அன்று இரவில் அவ்விடத்திலேயே
சயனித்து, மறுநாள் சூர்ய உதயத்திற்கெல்லாம்
மலைமீது சென்று வால்மீகி தீர்த்தத்தில் ஸ்னானஞ்
செய்த மாத்திரத்தில் பிராம்மண உருவமாறி தனது
பூர்வ வடிவத்தை யடைந்தான். இந்திரனுக்குச் சாப
விமோசனமான ஸமயத்தில் தேவர்களும், ரிஷிகளும்
பூமாரி பொழிந்தனர். வாத்யங்கள் கோஷித்தன.
பின்பு, இந்திரன் ஸந்தோஷத்துடன் முக்கியாசல
ஈசுவரரை வணங்கித் தனது புஷ்பக விமானத்தில் ஆரு
டனாகி சொர்க்கமேகினன். ஓ! முனிசிரேஷ்டர்காள்!
இப்படி வால்மீகி தீர்த்தத்தின் மேன்மையால் இந்திர
னும் தேவஸ்த்ரீகளும் சாபவிமுக்தர் ஆயினர். பிராயச்
சித்தமில்லாத ஸர்வபாபங்களும் வால்மீகி தீர்த்தத்தில்
ஸ்னானஞ்செய்வதால் நிவிர்த்தியாகுமென்பதில் தடை



யில்லை. அத்தகைய பிரபாவம் நிரம்பிய வால்மீகி தீர்த்
தத்தில் யார் மூழ்கினாலும் அவர்களும் பரிசுத்தராவர்,
என்று சூதர் சௌனகாதிகளுக்கு உபதேசித்தனர்.

## அகஸ்தியரும், தீர்த்த மகிமையும்.

சௌனகாதி மகரிஷிகள் சூதபுராணிகரைப் பார்த்து
சொல்லுகிறார். 'ஓ! ஸ்வாமின்! அகஸ்தியரால் பிரதிஷ்
டை செய்யப்பட்ட சிவலிங்கங்களுடையவும், அக
ஸ்திய தீர்த்தத்தினுடையவும் பிரபாவத்தை எங்களு
க்கு கூறியருளல் வேண்டும்', என்றனர். அப்போது
ஸ்ரீ சூதர் கூறுகிறார். வால்மீகி தீர்த்தத்தைப்போல
அகஸ்திய தீர்த்தமும், அதிக பிரபாவம் பொருந்தியது.
அதன் வரலாற்றைச் சொல்லுகிறேன், கேட்பீர்களாக.
ஓ! முனிகளே! விந்தியாசலம் என்னும் ஓர் பர்வதம்
இருந்தது. அது வானத்தையளாவி நின்றதால், அவ்
வழியிற் சஞ்சரிக்கும் தேவர்களையும், ரிஷிகளையும் வழி
மறித்துத்துன்பம் விளைவித்து வந்தது. இப்படி அது
நெடுங்காலம் செய்துவரவே, தேவர்களுக்கும், ரிஷி
கட்கும் துன்பம் அதிகரித்தது. இவர்கள் வெள்ளியங்
கிரிக்கேகி ஆங்கு அரியாசனத்திலமர்ந்திருக்கும் பரம
சிவனிடத்தில் முறையிட்டுக்கொண்டிருக்கையில், அத்
தருணம் அகஸ்தியரும் அவ்விடத்தில் வந்து சேர்ந்
தார். அப்போது பரமசிவன், அகஸ்தியரே அதன்
கர்வத்தையடக்கவல்லர், வேறு யாராலும் முடியாது.
என்று சுவாமி அகஸ்தியரைப்பார்த்து ஓ! அகஸ்திய
ரே! நீர் விந்தியாசலத்தின் அகங்காரத்தை இத்தருண

த்திலே சென்று அடக்கக்கடவீர், என்று ஆக்ஞாபித்தனர். சுவாமியால் கட்டளையிடப்பட்ட கும்ப ஸம்பவரும் சுவாமியை நோக்கி, ஓ! ஸ்வாமின்? நான் இனி எப்போது தேவரீரைத் தெரிசிக்கக்கூடும் என்று இரக்கையில், பாலலோசனரானபரமசிவர் அகஸ்தியரே! சிலகாரணங்களை முன்னிட்டு வெள்ளியங்கிரியைவிட்டு முக்கியாசலத்திற்கு வருவோம். அவ்விடத்தில் பார்வதி முதலியவர்களால் கிரமமாகப் பூஜிக்கப்படுவோம். கிருதயுகத்தில் பார்வதியும், திரேதாயுகத்தில் விஷ்ணுவும், துவாபரயுகத்தில் வால்மீகியும், கலியுகத்தில் அங்காரகனும் எம்மை பூஜை செய்வார்கள். இப்படி நான்கு யுகங்களிலும் அவர்கள் எம்மைப் பூஜை செய்வார்கள். ஆதலால் அம்முக்கியாசலத்தின்கண் எமமைத்தரிசிக்கலாம். நீர் இப்போதே விந்தியாசலத்திற்குச் சென்று அதன் செருக்கை யடக்கவேண்டும், என்றனர். உடனே அகஸ்தியர் இறைவனை வணங்கி விந்திய பர்வதத்திற்குச் சென்று அதன்மேல் கால் வைத்ததும், அது பூமி மட்டமாய்விட்டது. அக்கால் தேவர்களும், ரிஷிகளும் களித்தனர். பின்பு அகஸ்தியர் தக்ஷிண தேசத்தில் உள்ள முனிகணங்களைக் காண விருப்புற்று அத்திசைக்குப் புறப்படலானார். அதிக காலம் ஆங்கு சஞ்சரித்தபின் கைலைப்பிரான் முக்கியாசலத்திற்கு எழுந்தருளும் சமயத்தை உணர்ந்து அகஸ்தியர் முக்கியாசலத்திற்கு வந்து சேர்ந்தனர். தேவியையும், சுவாமியையும் வணங்கி அதிக மகிழ்ச்சியுடன் விசிராமித்து வருங்கால், அகஸ்தியர் திவ்யதீர்த்தம்



ஒன்றை அங்கே நிர்மித்தனர். மூவுலகிலும் அதற்கிணையான தீர்த்தம் இல்லையெனலாம். இதில் குளித்தாலும், அதைப் பருகினாலும் மறு ஜன்மமில்லையெனச் சொல்லப்படுகிறது. அதுமாத்திரமல்லாமல் தொட்டமாத்திரையிலே ஸர்வ ஸித்திகளையுந் தரத்தக்கது. இது வால்மீகி தீர்த்தத்திற்கு மேற்கிலும், அம்மையார் கோயிலுக்குக் கீழ்ப்புறத்திலும் இருக்கிறது. அம்மன் கோயிலுக்கு வட கிழக்கிலும், அதற்குச் சிறிது தென்புறத்திலுமாக இரண்டு லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு அவரால் பூஜிக்கப்பட்டு வந்தன. இப்படி இருலிங்கங்களும், ஓர் தீர்த்தமும் உலோபா முத்திரையான பத்தினியோடுங்கூடிய அகஸ்தியரால் நிர்மிக்கப்பட்டன. இதைப் பூஜிப்பவர்களும், தீர்த்தத்தில் மூழ்குகிறவர்களும் மோக்ஷம் அடைவர். இதற்கு உதாரணமாக, சதானீக மகாராஜனும் அகஸ்தியாது தீர்த்தத்தில் ஸ்னானஞ் செய்தமையால் அவனுடைய ஸர்வ பாபங்களும் தொலைந்தன. அப்போது சௌனகாதிகள் சூதபுராணிகரைப்பார்த்து ஓ ஸ்வாமின்! அந்தச் சதானீக அரசன் யார்? அகஸ்திய தீர்த்தத்தில் ஸ்னானஞ் செய்ததால் பாபங்கள் எப்படி நாசமாயின. இவைகளை எங்களுக்கு விரிவாய்க் கூறவேண்டும் என்றனர். அப்போது ஸ்ரீ சூதமுனிவர் கூறுகிறார். தமிழ் தேசத்தில் சதானீகன் என்ற பெயர் உடைய ஓர் அரசன் இருந்தான். தன்னுடைய நற்செய்கையால் அவன் மூவுலகிலும் பிரசித்திபெற்றான். அவன் ஒரு காலத்தில் ஜன ஸஞ்சாரமில்லாத

ஓர் இடத்தில் வாஸஞ்செய்து வந்தான். ஒருநாள்
இரவில் பட்டணத்தின் காவலாளிகள் ஓடோடிவந்து
திருடர்கள் நாற்புறத்திலும் ஆயுத பாணிகளாகக்
கொள்ளையடிப்பதற்கு வந்திருக்கின்றார்கள், என்று
அரசனிடம் முறையிட்டனர். அரசன் திருடர்க
ளுக்குப் பயந்து இவ்வாபத்திலிருந்து எப்படித்தப்பு
தென்று யோசித்திருக்கையில், திருடர்கள் அரசன்
இருக்குமிடம் ஏகாந்தமானதால், அவ்விடம் வந்து
சேர்ந்தனர். திருடர்கள் அரசனைப் பார்க்கவே அவர்
கள் அருகில் வந்து அவனைக் கொல்ல முயற்சிக்கையில்,
அவஸரமாக அவனுக்கு ஓர் யுக்தி தோன்றியது. ஓ
திருடர்களே! நீங்கள் என்னைக் கொல்லாதிருப்பீர்க
ளாயின், நான் ஓர் உபாயம் உங்களுக்குச் சொல்லு
கிறேன் கேளுங்கள்எனத் திருடர்களும் அதற்கிண
ங்கி, நீர் யார், என வினவவே, அரசனும் தன் வரலாற்
றைமறைத்து, நானும் ஓர் திருடன், நான் அதிக நாட்க
ளாக இவ்விடத்தில் வஸிக்கிறேன், வேறு துணையில்
லாததால் திருடத் தொடங்கவில்லை. இப்போது
துணையாட்களாக நீங்கள் வந்திருப்பதால் இனி
நாமெல்லோருஞ்சேர்ந்து கொள்ளையடிக்கலாம், நான்
வெகு நாட்களாக ஓர் தனவந்தரின் வீட்டை
எதிர்பார்த்து இருக்கிறேன், அவன் ஆயிரக்கணக்
காக திரவியத்தைக் குவித்து வைத்திருக்கின்றான். ஆத
லால் அவ்வீட்டிற்குப்போவோம் வாருங்களென்று
சொல்லி அவர்களையும் அழைத்துக்கொண்டு ஓர் தன
வந்தரான பிராமணனுடைய வீட்டைக் காண்பித்



தான். திருடர்களும் இதுதான் ஸமயமென்று எண்ணி
வீட்டிற்குள் புகுந்து வீட்டுச் சொந்தக்காரனை பிரா
மணனைக்கொன்று வேண்டியவளவு திரவியத்தைக்கவர்
ந்து சென்றனர். செல்லுங்கால் திருடப்பட்டதில் ஒரு
பங்கை அரசனுக்கும் கொடுத்துவிட்டு அவர்கள் ஓடி
விட்டார்கள். அரசனும் தன்னுடைய பங்கை யெடுத்து
க்கொண்டு உயிர் தப்பினதேபோதும் என்ற ஸந்தோஷ
த்துடன் தனது அரண்மனைக்கு வந்துசேர்ந்தான். பட்
டண வாஸிகளும் அரசனைப்பார்த்து, நேற்றிரவில்
நகரத்திற்குள் திருடர்கள் புகுந்து ஓர் பிராமணனைக்
கொன்றது மல்லாமல் அவனுடைய சொத்துக்களையும்
கொள்ளை யடித்தார்கள் என்றனர். அரசன் மிக்க
கோபத்துடன் சேவகர்களைக் கூப்பிட்டு, கொலைசெய்த
வர்களையும்,கொள்ளைக் கூட்டத்தாரையும் பிடித்து இர
ண்டு நாட்களுக்குள் என்முன் கொண்டுவந்து நிறுத்த
வேண்டும் இல்லாவிடில் சட்டப்படி தண்டனைக்கு உட்
படுவீர்கள் என்று உத்திரவிட்டான். அரசனால் ஆக்
ஞாபிக்கப்பட்ட சேவகர்களும் அந்தக் கணத்திலேயே
கொலையாளிகளைத் தேடப் புறப்பட்டனர். இப்படி
அவர்கள் பலவிடங்களிலும் தேடியலைந்து திருடர்
களைப் பிடித்து அரசன்முன் கொண்டுவந்து நிறுத்தி
னார்கள். அரசனும் அவர்களை விசாரித்து அவர்களு
க்கு மரண தண்டனையை விதித்தான். பின்பு அரசன்
மந்திரிகளையும், மத்தியஸ்தர்களையும் பார்த்து, கொலை,
கொள்ளை ஸம்மந்தமாக நடந்த வரலாற்றையெல்லாம்
ஆதியோடந்தமாகக்கூறி நானும் அத்தண்டனைக்கு

உட்பட வேண்டியவனு யிருக்கிறேன். ஏனென்றுல் அக்கொலைக்கும், கொள்ளைக்கும் நானும் ஸம்பந்தப்பட்டிருப்பதால், நியாயமாக அத்தண்டனையை நானும் அனுபவித்தே தீரவேண்டி யிருக்கின்றது. ஆதலால் கொலைக்குக் காரணனுயிருந்த என்னுடைய சிரஸை இதோ வெட்டப்போகின்றேன் என்று வாளை வீச ஆரம்பிக்கவே மந்திரிகளும், பஞ்சாயத்தினரும் குறுக்கிட்டு, 'ஓ அரசனே! தேகத்தியாகம் செய்யாமலேயே இக்குற்ற பரிகாரத்திற்கு யாதாயினும் பிராயச்சித்தஞ் செய்து சுத்தனுகலாம். இக்குற்றத்திற்குப் பிராயச்சித்தம் அறியக்கூடியவர் ஊசத்ய மகரிஷி ஒருவரே. அவரை இப்போது வரவழைத்தால் அவர் இதன் பரிகார விதியைச்சொல்லுவார்' என்றனர். அதைக்கேட்ட அரசனும், அப்போதே ஊசத்ய மகரிஷியை அழைத்துவர ஏற்பாடு செய்தான். ஊசத்யரும் விரைவாகவே வந்துசேர்ந்தார். அரசன் அவருக்குத்தான்செய்த பாபத்தை விளக்கவே அவரும் அதற்குப் பிராயச்சித்தத்தை உபதேசிக்கத் தொடங்கினுர். 'ஓ! அரசனே! நீ செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தம் கூறுகின்றேன் கேட்பாயாக. நீ உலகப் பிரசித்தமான முக்கியாசல க்ஷேத்திரத்திற்குச்சென்று அம்மலையின் அடிவாரத்தில் உள்ள அகஸ்திய தீர்த்தத்தில் ஸ்னுனஞ்செய்தால் உன்னுடைய பாபமெல்லாம் விமோசனமாகும். இது அல்லாமல் வேறு உபாயம் ஒன்றும் கிடையாது. ஆதலால் நீ துரிதமாகவே அவ்விடம் போ' என்றனர் ஊசத்யர். அரசன் இதைக்கேட்டு சந்தோஷத்துடன்



முக்கியாசலத்திற்குச்சென்று அகஸ்தியர் தீர்த்தத்தில் ஸ்னுனஞ்செய்து பரிசுத்தனுய் முக்கியாசல ஈசுவரனையும் அம்மையையும் வணங்கி அகஸ்தியரால் பிரதிஷ்டிக்கப்பட்ட சிவலிங்கங்களைப் பூஜித்து மீண்டும் தன் ராஜ்யத்திற்கு திரும்பி வந்து பல்லாண்டு இராஜ்ய பரிபாலனஞ்செய்து மகிழ்வுற்றுன். அரசன் முடிவில் சிவ ஸாயூஜ்யங்தை யடைந்தான். அகஸ்திய தீர்த்த மகிமையால் சதானீக மகாராஜன் மகா பாபங்களிலிருந்தும் விடுபட்டு மோக்ஷம் அடைந்த இக்கதையை யார் கேட்பினும் அவர்களும் பரிசுத்தராவார்கள் என்று சூத புராணிகர் சௌனகாதி முனிகளுக்குச் சொல்லியருளினுர் சுபம்.

ஐந்தாவது அத்தியாயம்.

முற்றிற்று.



## ஆருவது அத்தியாயம்

### அங்காரகன் முக்கியாசல ஈசுவரரைப் பூஜித்தலும், அங்காரகன் முதலியோர் இராசிகளை அடைதலும்.

நைமிசாரண்ய வாஸிகளான சௌனகாதிகள் சூத புராணிகரை நோக்கி, கலி யுகத்தில் அங்காரகன் முக்கியாசல ஈசுவரரை எதன் பொருட்டு பூஜை செய்தனன், அதன்பலன் என்ன? இதை எமக்கு விரிவாய்ச் சொல்லியருளவேண்டும் என்றனர். இதற்கு ஸ்ரீ சூதர் சொல்லுகிறார். ஓ முனிவர்களே! புராதனமான இவ்விதிஹாஸத்தைச் சொல்லுகிறேன், கேட்பீர்களாக, முன்காலத்தில் சூர்ய, சந்திரர்களே பன்னிரண்டு இராசிகளுக்கும் அதிபர்கள், அங்காரகன், குரு புதன் முதலியவர்கட்கு இராசிகளின் ஆதிபத்யம் இல்லை. அங்காரகன் முதலிய ஐந்து கிரகங்களுஞ் சேர்ந்து பிரம்மாவிடஞ்சென்று வினயத்துடன், ஓ! பிரம்மனே! நீர் கிரகங்களுக்கு வீடுகளைப் பகிர்ந்துக் கொடுத்த காலத்தில் சூர்ய, சந்திரர்களுக்கே அல்லாமல் எங்களில் யாருக்கும் ஒரு ஸ்தானத்தையாவது அளிக்கவில்லை. தமக்[illegible] ஓர் ஸ்தானமில்லாதவர்களை யார் கவனிப்பார்கள்? அவர்களைப்போல் எம்மையாரும் பூஜிப்பா[illegible] ஓ! சுவாமின்! எம்மீது கிருபைகூர்ந்து எங்களுக்கும் வீடுகளை யருளவேண்டும் என்றனர். அப்போது பிரம்மாவும் கிரகங்களைப் பார்த்து சொல்லுகிறார். 'ஓ! கிரகங்களே! நீங்கள்



ஸ்தானப் பிராப்தியின் பொருட்டு முக்கியாசல ஈசுவரரைப் பூஜிக்கவேண்டும். ஆனால் நீங்கள் எல்லோருஞ் சேர்ந்து பூஜிக்கவேண்டிய அவசியமில்லை.

உங்களில் அங்காரகன் பரமசிவனைப் பூஜிக்கக்கடவன், எனது ஆணைப்படி அங்காரகன் முக்கியாசல ஈசுவரனைப் பூஜிப்பானாயின் உங்களனைவர்கட்கும் சாசுவதமான வீடுகிடைக்கும்' என்றனர். உடனே களிப்புடன் கிரகங்கள் அவரை வணங்கி விடைபெற்று அனைவரும் முக்கியாசலத்திற்குப் புறப்பட்டனர். ஸ்தானம் அடைய விரும்பித் துரிதமாகவே கிரகங்களும் முக்கியாசலத்திற்கு வந்தார்கள். அங்காரகன் மூன்று வேளைகளிலும் ஸ்நானஞ்செய்து காமாக்ஷி ஸமேதரான பரமசிவனையும், அம்மனையும் கிரமப்படி பூஜை செய்தனன். பூஜைக்கு வேண்டிய பணிவிடைகளையெல்லாம் புதன், குரு, சுக்கிரன், முதலிய கிரகங்கள் அவ்வக்காலங்களில் ஏற்றவண்ணம் சிரத்தையோடும் பக்தியோடும் செய்து வந்தனர். அங்காரகனும் நிச்சல பக்தியுடன் பூஜைசெய்து வரும்போது தனது ஸ்நான, அபிஷேக முதலிய சௌகர்யத்தின்பொருட்டு அங்காரகனால் ஓர் தீர்த்தம் நிர்மிக்கப்பட்டு, அவர் பெயரால் அது வழங்கிவருகிறது. இதற்கு இணையான தீர்த்தம் மூன்று உலகிலும் காண்பதரிது. இதன் தரிசனத்தாலும், ஸ்பரிசனத்தாலும், ஸ்நானத்தாலும், பானத்தாலும் ஸர்வ பாபங்களும் விமோசனமாகும். இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வதால், தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம், ரௌரவம்,

மகா ரௌரவம், கும்பீபாகம், காலஸூத்ரம், அஸிபத்
ரவனம், கிருமிபக்ஷாண்டகூபம், வைதரணீ முதலிய
நரகதுக்கம் நிவர்த்தியாகும். இத்தகைய அதிசயதீர்த்
தம் ஒன்று அங்காரகனால் நிர்மிக்கப்பட்டு அதில்
ஸ்நானஞ்செய்து தீவிரமாகப் பூஜைசெய்து வருங்கால்,
முக்கியாசல ஈசுவரர் அங்காரகனுடைய பக்திக்கு
இரங்கிப் பிரஸன்னராய் அங்காரகனைப் பார்த்து 'ஓ!
அங்காரகனே! உன்னுடைய அதுல்ய பூஜையால்
நான் அதிக மகிழ்வை யடைந்தேன். உனக்கு என்ன
தேவை? அதைக்கேள் என்றனர். அப்போது அங்கார
கன் ஓ! சுவாமின்! என்மீது கிருபைசெய்து இரண்டு
இராசிகளுடைய ஆதிபத்யத்தை அடியேனுக்குத் தந்
தருளல்வேண்டும் என்றனன். உடனே சுவாமியும்'
இரவி, மதிகளைக் கூப்பிட்டு 'ஓ! சூர்ய சந்திரர்களே!
என்னுடைய வார்த்தைகளைக் கேட்பீராக. இந்த
அங்காரகன் உங்களுக்கு இணையானவன். அது மாத்
திரமல்ல முக்கியமாய் அவன் என்னுடைய பக்தன்.
நீங்கள் இரு இராசிகளின் ஆதிபத்யத்தை இவனுக்
குத்தரவேண்டியது என்று ஆக்ஞாபித்தார். இதைக்
கேட்ட சூர்ய, சந்திரர்களும் தேவரீரது ஆணைப்படி
செய்யச்சித்தமாயிருக்கின்றோம் என்றனர். முக்கியாசல
ஈசுவரருடைய உத்திரவுப்படி இரவியும், மதியும் அங்
காரகனுக்கு மேஷம், விருச்சிகம் ஆகிய இவ்விருராசிக
ளின் ஆதிபத்யத்தையளித்தனர். அங்காரகன் இதைப்
பெற்றுச் சந்தோஷத்துடன் மற்ற கிரகங்களுக்கும் நன்
மையைச் செய்யவேண்டுமென்னும் விருப்பத்துடன்,



சுவாமியைப் பார்த்து, ஓ! சுவாமின்! குரு, சுக்கிரன்,
புதன், சனி ஆகிய இக்கிரகங்களுக்கும் வீடுகளில்லை. ஆத
லால் அவர்களுக்கும் ஆதிபத்யத்தைக் கொடுத்தருளப்
பிரார்த்திக்கிறேன் என்றனன். அங்காரகனுடைய பிரா
ர்த்தனையைக்கேட்ட சுவாமியும், சந்தோஷத்துடன்
சூர்ய சந்திரர்களைக் கூப்பிட்டு, இவர்கள் ஒவ்வொருவரு
க்கும் இருராசிகளின் ஆதிபத்யத்தைக் கொடுக்கக்கட
வீர் என்றனர். சிவனால் ஆக்ஞாபிக்கப்பட்ட இரவிமதி
கள், குரு, சுக்கிரன், புதன், சனி ஆகிய இவர்களுக்கும்
முறையே (தனுசு, மீனம்,) (விருஷப துலாம்) (மிதுன
கன்னி) (மகரகும்பம்,) ஆகிய இருராசிகளின் ஆதிபத்
யத்தை ஒவ்வொரு கிரகத்திற்கும் அளித்தனர். இப்படி
ஒவ்வோர் கிரகங்களும் ஸ்தானப் பிராப்தியை அடை
ந்த ஸந்தோஷத்தால் தத்தம் இருப்பிடம் சென்றனர்.
ஆனால் அங்காரகன் மாத்திரம் இன்னம் ஓர் வரத்தை
வேண்டினன். அஃது என்னவென்றால், என்னால்
நிர்மிக்கப்பட்ட இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்கிற
வர்களின் பாபங்கள், நூறு ஜன்மங்களில் ஸம்பாதி
க்கப்பட்டவையானாலும் நாசமாக வேண்டுமென்று
முக்கியாசல ஈசுவரரை வேண்டிக் கொண்டான். அப்
போது ஆண்டவர் உன்னுடைய விருப்பப்படி அங்கா
ரகதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்கிறவர்கள் எல்லோரும்
பரிசுத்தராகக் கடவர். ஆனால் ஒன்றை மாத்திரம்
அவர்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும். சூர்யன்
கன்னியா இராசியிலாவது, அல்லது தனூர் இராசியிலா
வது, அல்லது கும்ப இராசியிலாவது ஸஞ்சரிக்குங்

காலத்திலும், கிருஷ்ண பக்ஷத்திய மங்கள வாரத்திலும் ஸ்நானஞ் செய்வார்களானால் அவர்கள் குடும்பத்திடன் மோக்ஷமடைவார்கள். மேற் குறிப்பிடப்பட்ட நாட்களில் ஸ்நானஞ் செய்யாதவர்களுக்கு அவ்வளவு பலன் சித்தியாது எனக்கூறி முக்கியாசல ஈசுவரர் அங்காரக தீர்த்தக் கரையிலே இன்றைக்கும் எழுந்தருளியிருக்கின்றார்.

அங்காரகனும் முக்கியாசல ஈசுவரரிடத்திலிருந்து வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொண்ட ஸந்தோஷத்தால் சுவாமியை வணங்கித் தனது இருப்பிடத்திற்கு சென்றனன், எனச் சூதர் சௌனகாதிகளுக்குக் கூறினர். சுபம்.

## லடசர்ம்மாவின் கதையும், ஓஷதிகளின் பிரபாவமும்.

புராணங்களில் அதிநிபுணரான ஓ! வியாஸ சிஷ்யரே! உம்மிடத்திலிருந்து முக்கியாசல மகிமையை அறியலானோம். அதுமாத்திரமன்றி அதன் கண்ணுள்ள தீர்த்தங்களின் பெருமையையும், முக்கியாசல ஈசுவரருடைய பிரபாவத்தையும் உணரலானோம். ஆயினும் எமக்குத் திருப்தியுண்டாகவில்லை. இன்னம் ஓர் ஸந்தேகம் எமக்குள் தோன்றுகின்றது. அதையும் நிவிர்த்தி செய்யப் பிரார்த்திக்கின்றோம். அதுயாதெனில், அம்முக்கியாசல க்ஷேத்திரத்தின்கண் அனந்த தீர்த்தங்கள் இருக்கின்றனவென்று கேள்விப் பட்டிருக்கின்றோம். அவற்றுள் மூன்று தீர்த்தங்களின் பிர



பாவத்தைப்பற்றித்தான் எமக்குச் சொன்னீர்கள். மற்றவைகளை ஏன் பிரஸ்தாபிக்கவில்லை, அதையும் சொல்லியருளவேண்டும் என்றனர். உடனே மேதாவியான சூதரும் 'ஓ! முனிசிரேஷ்டர்களே! உங்களுடைய கேள்வி அதிக புத்திசாலித்தன்மை வாய்ந்தது. அதைக்குறித்து நான் சந்தோஷிக்கின்றேன், சிரத்தையுடன் கேட்பீர்களாக. இம்முக்கியாசலத்தில் அனேக தீர்த்தங்கள் உள. சூர்யன் ஒளிபுகாத கற்சந்துக்களில் எல்லாம் ஒவ்வோர் தீர்த்தங்கள் இருக்கின்றன. அவை யாராலும் இவ்வளவு என்று கணக்கிட்டுக் கூற முடியாதன. இம் முக்கியாசலத்தில் உள்ள ஓஷதிகளும், புற்பூண்டுகளும், ஜலாசயங்களும் எண்ணிற்கு உட்படாதவை. இவைகள் ஸ்வர்க்க, மோக்ஷங்களைத் தரத்தக்கவை. கணக்கற்ற தீர்த்தங்களுள் மூன்று பிரதானமுள்ளவை யாதலால் அவை மாத்திரம் குறிப்பிடப்பட்டன. இம் முக்கியாசலத்தின் மகிமையை எனக்குத் தெரிந்த வரைக்கும் சொல்லினேன். இன்னம் எதையாவது கேட்க விரும்பினால் அதையும் தெரிவிப்பீர்களாக' என்றனர். உடனே சௌனகாதிகள் அதிக ஆர்வத்துடன் ஓ! சுவாமின்! இந்த முக்கியாசலத்தில் உள்ள புற் பூண்டு முதலியவைகள் மோக்ஷந்தரத்தக்கவை யென்று சொன்னீர்கள். இவ் விஷயத்தில் எங்களுக்கு ஓர் சந்தேகம் உளது. தீர்த்தத்தில் மூழ்குவதால் பாபம் விமோசனமாகுமென்பது உண்மையே. புல், பூண்டு, உலர்ந்த காஷ்டமுதலியவை எப்படி மோக்ஷந்தரக்கூடும்? அதை எம

க்குச் சொல்லி யருளவேண்டும் என்றனர். அப்போது ஸ்ரீ ஸூதர் சொல்லுகிறார். ஓ! முனிவர்களே! உங்களுடைய சந்தேகம் நிவிர்த்தியாவதற்கு ஒரு கதையைச் சொல்லுகிறேன் கேட்பீர்களாக.

காம்போஜ தேசத்தில் ஓர் பிராம்மணர் இருந்தார். அவர் பெயர் ஸுசர்ம்மா. அவர் மிகச்சாந்தமானவர். ஜிதேந்திரியர், பொய்சொல்லாதவர், அகங்காரமற்றவர், சத்ருக்களையும், மித்திரர்களையும் ஸமமாகப் பாவிப்பவர். வேத சாஸ்திரங்களிலும் நிபுணர். பிரதிதினமும் பஞ்ச எக்ஞத்தைச் செய்பவர். ஸர்வ புராணங்களிலும் ஸமர்த்தர். நல்ல வாசாலர். அதிக விஷ்ணு பக்தியுடையவர். இத்துணை சாமர்த்தியம் வாய்ந்த ஸுசர்மாவும் கிரகஸ்தாசிரம கர்மங்களையெல்லாம் கிரமப்படிசெய்து வருங்கால், அவருக்கு மூன்று புத்திரர்கள் உற்பத்தியாயினர். அவர்களுக்குக் கிரகஸ்தாசிரமத்தை ஏற்று நடத்தத்தக்க பக்குவமுண்டானபோது அப்புத்திரர்கள்பால் கிரகஸ்தாசிரம பாரத்தை எல்லாம் ஒப்புவித்து தபம்புரிதற் பொருட்டு முக்கியாசலத்திற்கு விஜயஞ் செய்தனர். இனி ஆத்ம ஸாக்ஷாத்காரம் கரதலாமலகமென்று உணர்ந்து, அம்மலை நமஸ்கரித்து' மலையை நோக்கி ஸ்தோத்திரஞ் செய்து. ஓ! சுவாமின்! ஸகல ஜீவர்களுக்கும் மங்களத்தைத் தரத்தக்க உம்மை நமஸ்கரிக்கின்றேன். நான் இன்று வரை சிவ பூஜை செய்யாததால் உண்டான பாபத்தைப் பொருத்தருளவேண்டும்' என்று சொல்லி, மலைமீது சென்று

மபதியின் கோயிலிற் பிரவேசித்து, வினாயகர், தண்டபாணி, தக்ஷிணாமூர்த்தி, சண்டேசுவரர் முதலிய தேவர்களை வணங்கிப் பின்பு ஸ்தோத்திரஞ் செய்து நமஸ்கரித்து அன்று முதல் சாந்திராயண விரதத்தை யனுஷ்டிக்கலானார். இந்தச் சமயம் ஸுவிருதன் என்னும் ஓர் பிராம்மணன் அவருக்குப் பணிவிடை செய்வதற்காக அமர்ந்தான். ஸுசர்மாவும் ஸுவ்ருதனைப் பார்த்துக் களிப்புற்றார். ஸுவ்ருதனோ குருபக்தியிற் சிறந்தோன். பக்தி முதிர்ச்சியால் முறையாக அவனுக்கு விஞ்ஞானப் பிராப்தி உண்டாயிற்று. சாந்திராயண விரத முடிவில் பாரணை செய்வது வழக்கம். சாந்திராயண விரதத்திற்கு மாத்திரமல்லாமல் மற்றெல்லா விரதங்களுக்கும் பாரணை அவசியம். பாரணையில்லா விரதம் பயனற்றது. ஆதலால் ஸுசர்மாவானவர் விரதாந்தியத்தில் சிஷ்யனைக் கூப்பிட்டுச் சமைக்கச் சொன்னார். சிஷ்யனும் மிக்க பயபக்தி புரஸ்ஸரமாய் ஸ்னானாதி அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சீக்கிரமாகவே பாகஞ்செய்யத் தொடங்கினான். அரிசி வேகுந் தருவாயில் ஸுசர்மர் சிஷ்யனைக் கூப்பிட்டு பூஜாத் திரவியத்தைக் கொண்டுவரச் சொன்னார். சிஷ்யனும் பூஜாத்திரவியத்தை அவரிடம் கொடுத்துவிட்டு வந்து அன்னம் பாகமாய் விட்டதாவென்று அங்கிருந்த ஓர் உலர்ந்த குச்சியை எடுத்து அதைப் பிடித்துப் பார்க்கத் திடீரென்று அதன் நிறம் வித்தியாசப்பட்டதைக் கண்டான். இது என்ன ஆச்சரியம் என்று கருதி, இம்

மலினப்பட்ட அன்னத்தைக் குருவிற்கு அளிக்க மனமில்லாது, நிறவித்யாஸம் ஏற்பட்டதன் காரணத்தை ஆராய்ச்சி செய்து, இது குச்சியால் ஏற்பட்டதென்று தெளிந்து குருவினிடம் இவ்விஷயத்தை உணர்த்தி, முடிவில் இருவர்களும் புசித்தனர். சாப்பிட்ட மாத்திரையிலே அவர்களின் நரை, பிணி, மூப்பு முதலியன எல்லாம் மாறி முடிவில் மோக்ஷத்தை யடைந்தனர். முக்கியாசலத்தில் உள்ள புற்பூண்டு முதலியயாவும் ஸ்வர்க்கத்தையும், மோக்ஷத்தையும் தரத்தக்கவையென்று, சூதபுராணிகர் சௌனகாதி மகரிஷிகளுக்கு உபதேசித்தனர். அவர்களும் சாந்தியை அடைந்தனர். சுபம்.

ஓம் சாந்தி꞉! சாந்தி꞉!! சாந்தி꞉!!!

முக்கியாசல புராணம்

முற்றிற்று.

84696

# முங்கியாசல புராணம்.

இதுவரையில் வெளிவராதது. அனேக வற்பு
விஷயங்களடங்கியது. வால்மீகி தபஞ்செய்த ஆசிரம
அமையப்பெற்றதும், ஸீதாபிராட்டியார் பிரஸவித்
குகையால் விளங்குவதுமான ஆச்சர்ய விஷயங்க
நிறைந்தது. அவசியம் வாசிக்கத்தக்கது.

கிடைக்குமிடம்

அபேதாசிரமம்,
பெருமுக்கல் போஸ்டு,
திண்டிவனம் தாலுக்கா.

---

தங்கவேல் நாயகர்,
தகரக்கடை,
திண்டிவனம்.

Kandan Press, 92 Broadway, Madras